பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-121

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 18<br>Vol : 18 | இதழ் : 03<br>Issue : 03 | www.ncbhpublisher.in | ஜுன் 2025<br>June 2025 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |




## முக்கால் நூற்றாண்டு...






30.05.2025 அன்று சென்னை பெரியார் திடலில் தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள் நூல்களை மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வெளியிட, தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் பெற்றுக்கொண்டார். இதில் சிபிஐ மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், புதுவை சிபிஐ மாநிலச் செயலாளர் மு.சலீம், என்சிபிஎச் தலைவர் ஸ்டாலின் குணசேகரன், மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், பதிப்பாசிரியர் வீ.அரசு மற்றும் என்சிபிஎச் பொது மேலாளர் எஸ். சண்முகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.


## தோழர் **தமிழ்ஒளி** ஆக்கங்கள்

**ஆறு தொகுதிகள்**

**தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு**

| | |
|---|---|
| தொகுதி-1 : தோழர் தமிழ்ஒளி கவிதைகள் | விலை: ரூ.390/- |
| தொகுதி-2 : தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி ஒன்று): | விலை: ரூ.315/- |
| தொகுதி-3 : தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி இரண்டு) | விலை: ரூ.390/- |
| தொகுதி-4 : தோழர் தமிழ்ஒளி சிறார் பாடல்கள் - கதைகள் | விலை: ரூ.315/- |
| தொகுதி-5 : தோழர் தமிழ்ஒளி சிறுகதைகள் - ஓரங்க நாடகங்கள் | விலை: ரூ.360/- |
| தொகுதி-6 : தோழர் தமிழ்ஒளி ஆய்வுகள் - கட்டுரைகள் - தன் வரலாறு | விலை: ரூ.430/- |

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 050. ☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 18 இதழ் - 03 - ஜூன் 2025*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**



ஆசிரியர் குழு
*க.சந்தானம்*
*பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்*
*முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்*
*முனைவர் ந.முத்துமோகன்*
*முனைவர் மு.இராமசுவாமி*
*முனைவர் நா.இராமச்சந்திரன்*
*முனைவர் பா.ஆனந்தகுமார்*
*முனைவர் ஞா.ஸ்டீபன்*
*ப.கு.ராஜன்*
*முனைவர் இரா.அறவேந்தன்*
*முனைவர் இரா.காமராசு*
*முனைவர் உ.அலிபாவா*

இதழ் வடிவமைப்பு
***கா. குணசேகரன்***



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

**தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00**
**மாணவர்களுக்கு ₹ 500.00**
**ஆயுள் சந்தா ₹ 5400.00**
**அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00**
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1 முக்கால் நூற்றாண்டு
ஆசிரியர் குழு.......... 04

2 100 வது ஆண்டில் சோசலிசம்
மா. சிவகுமார் .......... 06

3 சிகரம் ச.செந்தில்நாதனின் அமர படைப்பு
எஸ்.ஏ.பெருமாள் .......... 15

4 உண்டி கொடுத்து உயிரும் காத்த உத்தமர் நடேசய்யர்
கிருங்கை சேதுபதி .......... 19

5 தமிழிலிருந்து தமிழியல் நோக்கிய பயணம்
பேரா. தெ.வெற்றிச்செல்வன் .......... 22

6 திருப்பூர் நகர 28 சிறுகதைகள்
சுப்ரபாரதிமணியன் .......... 29

7 வள்ளிமலை வரலாறும் வழிபாடும் சமண சிற்பங்கள்
முனைவர் கோ.ஜெயக்குமார் .......... 31

8 அன்றாட தமிழ் மொழிப் பயன்பாட்டுக்கான சிறந்த கையேடு
சி.பாலையா .......... 35

9 குயிலனின் 'முச்சந்தி'யில் மூதறிஞரும் ஈ.வெ.ராவும்
முனைவர் த.கண்ணா கருப்பையா .......... 39

10 ஒரு நூற்றாண்டுப் பெண்களின் கதை
சுப்பிரமணி இரமேஷ் .......... 42

11 சோழ மண்டலக் கடற்கரையின் உணவுப் பண்பாட்டின் ஆவணம்
முனைவர் மு.ஏழுமலை .......... 46

12 மாய, யதார்த்தக் கரைகளூடே பயணிக்கும் வரலாற்று நதி
அன்பாதவன் .......... 51

13 கண்ணகி பகவதியான வரலாறு
இளஞ்செழியன் ச. .......... 55

14 திருநங்கைகளின் வாழ்வியலும் முன்னேற்றமும்
முனைவர் தி.சங்கீதா .......... 59

15 குறவர் சமூகப் பண்பாட்டு அவலங்கள்
ச. கார்த்திக் .......... 63

16 மண்ட்டோவின் பிரிவினைவாதக் கதைகளில் பெண் கதைமாந்தர்களின் சிக்கல்கள்
மா.ஆர்த்தி & முனைவர் அ.சுபா .......... 66

17 Traditional Ecological Knowledge and Colonial Displacement in Ngugi wa Thiong'o's........
S. Amirtha & Dr B. Ajantha .......... 70




# முக்கால் நூற்றாண்டு

1951ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் தேதி நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் தொடங்கப்பட்டது. முக்கால் நூற்றாண்டு கால இடையறாத பதிப்புப் பயணம்.

தமிழக அறிவுலக வரலாற்றில் என்.சி.பி.ஹெச் ஆழ்ந்த முத்திரை பதித்துள்ளதை வாசிப்பிற்கு வசப்பட்ட அனைவரும் அறிவர். படைப்பாளிகள், கல்வியாளர்கள், அரசியலாளர்கள், அரசு அலுவலர்கள், ஐ.ஏ.எஸ் அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட வளர்ந்த நிலையிலுள்ள பெரும்பான்மையானவர்களுக்கு வாசிப்புப்பழக்கத்தின் தோற்றுவாயாக விளங்கியுள்ளது என்.சி.பி.ஹெச் என்று அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றனர்.

மக்களின் கவனத்தை நூல்களின் பக்கம் ஈர்ப்பதற்கு சிரமமாக இருந்த அக்காலத்தில் மக்களிடம் நூல்களை எடுத்துச் சென்று மக்களிடையே நூல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திய பதிப்பகம் என்.சி.பி.ஹெச். மிகக் குறைந்த விலையில் அரிதினும் அரிதான அற்புத நூல்களை கண்ணைக் கவரும் வண்ணங்களில் அச்சிட்டு வாசிப்பு எண்ணத்தைத் தூண்டிய பதிப்பகம் என்.சி.பி.ஹெச்.

தெருவோரங்களில் மாதக்கணக்காகப் புத்தகக் கண்காட்சி, பள்ளி – கல்லூரிகளில் நாள் கணக்காகக் கண்காட்சி, ஊர்த்திருவிழாக்களில் புத்தக விற்பனை, அரசியல் கூட்டங்களில் புத்தகங்கள் என்று புத்தகங்களை மக்கள்மயப்படுத்துகிற மகத்தானதொரு வாசிப்பு வேள்வியை முதன் முதலில் தமிழ்மக்களுக்கு நிகழ்த்திக் காட்டிய நிறுவனம் என்.சி.பி.ஹெச்.

1940களின் தொடக்கத்தில் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று சிறை சென்று திரும்பியவர்கள் என்பதோடு பொதுவுடைமைக் கட்சி, தொழிற்சங்க இயக்கம் என்று தேசபக்தியோடும் சர்வதேசப் பார்வையுடனும் விளங்கிய முன்னோடிகள் சிலரால் அமைப்பு ரீதியாகத் தீர்மானித்து 'பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ்' என்ற பதிப்பகம் தில்லியில் உருவாக்கப்பட்டது.

'பிபிஹெச்' என்று அழைக்கப்பட்ட பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ் நிறுவனத்தின் கிளையொன்று

1948இல் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. அதன் மூலம் சென்னையில் வசித்த பொதுவுடைமை உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் சோவியத் நூல்களை மக்களிடம் விநியோகம் செய்தனர்.

1946இல் இந்திய விடுதலைக்கு முன்பு இந்தியாவில் இடைக்கால அரசு ஏற்படுத்தப்பட்டவுடனேயே அவ்வரசின் ஒப்புதலுடன் அன்றைய சோவியத் யூனியனிடமிருந்து சட்டபூர்வமாக சோவியத் நூல்களை இறக்குமதி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட சோவியத் நூல்கள் சென்னை பிபிஹெச் கிளையின் மூலம் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன.

இவையெல்லாம்தான் என்.சி.பி.ஹெச் தோன்றுவதற்குப் பின்புலமாக இருந்தன. 1951இல் சோவியத் நூல்களை பிபிஹெச் மூலமாக அல்லாமல் நேரடியாகவே சென்னைக்கு என்.சி.பி.ஹெச் மூலம் இறக்குமதி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.

புத்தகங்களை இறக்குமதி செய்து மக்களிடம் விநியோகம் செய்து கொண்டிருந்த என்.சி.பி.ஹெச் 1955இல் தனக்கென தனியான ஒரு வெளியீட்டுத் துறையை உருவாக்கிக் கொண்டு சொந்தமாகவே நூல்களைப் பதிப்பிக்கத் தொடங்கியது.

மார்க்சிய இலக்கியங்கள், நாவல், சிறுகதை, நாடகம், கவிதை, விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம், விவசாயம், பிரயாண இலக்கியம், ஆராய்ச்சி நூல்கள், வரலாறு, சிறுவர் இலக்கியம், குடும்பம், பொதுஅறிவு, புவியியல், சட்டம் என பல துறைகள் சார்ந்த மக்களுக்குப் பயன்படும் சமூகவியல் மற்றும் வாழ்வியல் நூல்கள் என்.சி.பி.ஹெச் சார்பில் சுயமாகப் பதிப்பிக்கப்பட்டன.

தொடக்கத்தில் சோவியத் யூனியனிலிருந்து ஆங்கில நூல்கள்தான் என்.சி.பி.ஹெச்க்கு வந்து கொண்டிருந்தன. பின்னர் 1965இல் இருந்து சோவியத் நாட்டிலேயே தமிழ் நூல்கள் அச்சடிக்கப்பட்டு அனுப்பப்பட்டன. மிகவும் மலிவான விலை. உயர்ந்த தரம். கருத்தாழமும் கவர்ச்சிகரமான வடிவமைப்பும் கொண்ட தமிழ் நூல்கள். விற்பனையும் அமோகமாக இருந்தது.

1956இல் மதுரையிலும், 1959இல் கோவையிலும், 1963இல் சென்னை மவுண்ட்ரோடிலும், 1964இல் திருச்சியிலும், 1968இல் சேலத்திலும், என்.சி.பி.ஹெச்சின் கிளைகள் தொடங்கப்பட்டன.

அப்போதிருந்தே என்.சி.பி.ஹெச்சின் கிளைகள் பள்ளி – கல்லூரிகளுடனும், பொது நூலகங்களுடனும், புத்தகக்கண்காட்சிகள் மூலம் பொதுமக்களுடனும் உயிரோட்டமான தொடர்புகள் வைத்திருந்துள்ளனர். சின்ன வளையத்திற்குள் அல்லாமல் பொதுத்தளத்திற்கு புத்தகங்களை எடுத்துச் செல்லும் புதுமையான முயற்சிகளில் பெரும் வெற்றி பெற்றது என்.சி.பி.ஹெச்.

'வணங்கத்தக்க நூல்களை நடுத்தெருவில் கடைவிரித்து விற்பது கண்ணியக்குறைவு' என்று அப்போது பழைமை வாதிகள் என்.சி.பி.ஹெச்சின் இத்தகைய புத்தகங்களை மக்கள் மயப்படுத்தும் செயலைப் பழித்துப் பேசினர். விமர்சித்தனர்.

'நாம் மக்களோடு இருப்பவர்கள், மக்களுக்காக உழைப்பவர்கள்' என்ற உயரிய நோக்கத்தோடு என்.சி.பி.ஹெச் சலிக்காமல் தொடர்ந்து களமிறங்கிக் காரியமாற்றியது. அச்செயலை ஒரு வணிகமாக எண்ணாமல் மாபெரும் மக்கள் இயக்கமாகக் கருதியதால் மட்டும்தான் என்.சி.பி.ஹெச் தனது இடையறாத பயணத்தில் வெற்றிக் கொடி நாட்டியது.

எழுபத்தைந்தாண்டு காலப் பயணத்திற்குப் பிறகு தற்போது இருபது கிளைகளைக் கொண்ட நிறுவனமாக, 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றுகிற பதிப்பகமாக, இதுவரை பல்லாயிரம் அரிதினும் அரிதான நூல்களைப் பதிப்பித்து வரலாறு படைத்த பதிப்பகமாக, நூற்றுக்கணக்கான மத்திய – மாநில அரசுகளின் சிறந்த நூல்களுக்கான விருதுகளைப் பெற்ற நிறுவனமாக, பல நூற்றுக்கணக்கான மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்ட தனித்தன்மைமிக்க பதிப்பகமாக என்.சி.பி.ஹெச் திகழ்கிறது.


புத்தகங்களே சமூக முன்னேற்றத்திற்கும் மாற்றத்திற்குமான நெம்புகோல்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுள்ள பதிப்பகம் என்.சி.பி.ஹெச்.

இந்த நிலைக்கு என்.சி.பி.ஹெச் வளர, உயரக் காரணமான அத்தனை நல்லுள்ளங்களுக்கும் நன்றி பாராட்டுவதும், அவர்களை வணங்கிப் போற்றுவதும் மேலும் மேலும் மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் இந்நிறுவனத்தை அனைத்து வகைகளிலும் வளர்க்க, உயர்த்த எழுபத்தைந்தாவது ஆண்டில் உறுதியேற்பதும் அதற்காக உழைப்பதும் நமது கடமையாகும்.

●

**ஆசிரியர் குழு**

படித்துப் பாருங்களேன்...




# 100 வது ஆண்டில் சோசலிசம்

## இலக்கு வைத்துப் பயணிக்கும் மக்கள் சீனம்! அதன் அரசியல் பொருளாதாரம் பற்றி

(China's Economy What Everyone Needs To Know by Arthur R. Kroeber Oxford University Press, 2016)




மா. சிவகுமார்


"இந்த வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறி கெட்டுப் பாழ்பட்டு நின்ற" ஒரு நாடு. நூறு ஆண்டுகளுக்கு முந்தைய இந்தியாவுக்கு பாரதியார் பாடியது சீனாவுக்கு இன்னும் அதிகமாகப் பொருந்தியது. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் சீன தேசம் உள்நாட்டில் போர்புரியும் பிரபுக்களாலும் அந்நிய ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்தாலும் நசுக்கப்பட்டு சுரண்டப்பட்டு அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

125 ஆண்டுகளுக்குப் பிறகு சீனா உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாக வளர்ச்சியடைந்துள்ளது; நாட்டு மக்கள் மத்தியில் அறுதி ஏழ்மையை ஒழித்துள்ளது. சராசரி வாழ்க்கைத்தரத்தை உயர்த்தியுள்ளது. மின்சார வாகனங்கள், சூரிய மின்தகடுகள், 5ஜி தொழில்நுட்பம் தொடங்கி உயர்வேக புல்லட் ரயில்கள் உள்ளிட்ட உள்கட்டுமானங்களை அமைப்பதிலும் உலகில் முதலிடம் வகிக்கிறது.

- சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட நூறாவது ஆண்டான 2021 இல் "அனைத்து வகையிலும் மிதமான வளம் கொண்ட ஒரு சமூகத்தைக் கட்டமைக்க வேண்டும்" என்ற இலக்கை அமைத்திருந்தது, 1949 முதல் சீனாவில் அதிகாரத்தில் இருக்கும் அக்கட்சி.
- அதே போல, சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய நூறாவது ஆண்டான 2049 இல், "வளமான, வலுவான, சனநாயக, பண்பாட்டில் முன்னேறிய, இணக்கமான ஒரு நவீன சோசலிச நாட்டைக் கட்டமைக்க வேண்டும்" என்று சீன அரசு இலக்கு அமைத்துள்ளது.

இந்த விந்தை எப்படி நடக்கவிருக்கிறது? சீனப் பொருளாதாரத்தின் இயக்கு விசைகள் என்ன? வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் மக்களின் நலவாழ்வையும் சாதிப்பதற்கு அவை எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. 2049 இன் இலக்கை சீனா எட்டி விடுமா? அது எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் என்னென்ன? அதன் வலிமைகள் என்னென்ன?

ஆர்தர் கிரோபர் எழுதிய "சீனப் பொருளாதாரம்: அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியவை" (China's Economy What Everyone Needs To Know by Arthur R. Kroeber Oxford University Press, 2016) என்ற ஆங்கில நூல் இது தொடர்பான ஏராளமான விவரங்களைத் திரட்டித் தருகிறது. ஆர்தர் கிரோபர் சீனாவின் தென் பகுதியில் உள்ள ஹாங்காங் சிறப்பு நிருவாகப் பகுதியில் "டிராகனாமிக்ஸ்" (டிராகன் பொருளியல்) என்ற ஆய்வு நிறுவனத்தை நிறுவி நடத்தி வருகிறார். சீனாவின் முன்னணிப் பல்கலைக் கழகங்களுடனும் அமெரிக்காவின் முன்னணி பல்கலைக் கழகங்களுடனும் இணைந்து ஆய்வுகளைச் செய்கிறார்.

அவர் மேற்கத்திய முதலாளித்துவக் கருத்துநிலையில் இருந்து சீனப் பொருளாதாரம் பற்றிய தனது ஆய்வுகளை முன் வைக்கிறார். ஒரு நாட்டைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கு அதன் பொருளாதாரத்தின் கட்டமைவைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சீனாவின் உள்நாட்டு நிலைமைகளைப் பற்றிப் புரிந்துகொள்ள மிக ஆதாரமான நூல் இது.

நூலாசிரியரின் பார்வையில் சீன அரசியல் பொருளாதாரத்தின் முதன்மையான கூறுகளைப் பின்வருமாறு தொகுக்கலாம் (இவை மார்க்சிய லெனினியப் பார்வையில் இன்னும் மேம்பட்ட புரிதலைத் தருகின்றன. அது குறித்து இக்கட்டுரையின் இறுதிப் பகுதியில் சுருக்கமாகப் பார்க்கலாம்).

## 1. சீன அரசியல் பொருளாதாரத்தின் மையமான கூறுகள்

### அ. ஆட்சிமுறை

- சீனாவில் இருப்பது அதிகாரத்துவ மேலாதிக்க ஒரு கட்சி அரசு (bureaucratic-authoritarian one-party state)
- சீன நிருவாக அமைப்பு கொள்கையளவில் மையப்படுத்தப்பட்டது, ஆனால் நடைமுறையில் கணிசமான அளவு பரவலாக்கப்பட்டது
- சீனாவின் கம்யூனிஸ்ட்டுக் கட்சி அரசாங்கம், நீதிமன்றங்கள், ஊடகங்கள், வணிக நிறுவனங்கள் (அரசு, தனியார்), பல்கலைக் கழகங்கள், மத நிறுவனங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்துகிறது.

### ஆ. பொருளாதார வளர்ச்சி

- சீனாவின் பொருளாதார வளர்ச்சி, மையப்படுத்தப்பட்ட திட்டமிட்ட முறையில் இருந்து 1979 முதல் சந்தை அடிப்படையிலான செயல்பாடுகளுக்கு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. இதற்கு 1991 இல் வீழ்ச்சியடைந்த சோவியத் ஒன்றியத்தின் அனுபவங்களும் இருபதாம் நூற்றாண்டில் ஏற்றுமதிசார் பொருளாதார வளர்ச்சி அடைந்த கிழக்காசிய நாடுகளான ஜப்பான், தென் கொரியா, தைவான் ஆகியவற்றின் அனுபவங்களும் வழிகாட்டியாகப் பயன்பட்டன.
- கடந்த 45 ஆண்டு கால சீனாவின் வளர்ச்சிக்குப் பின்னால் பெருந்திட்டம் எதுவும் இருக்கவில்லை. பாறைகளைத் தடவித் தடவி ஆற்றைக் கடப்பது என்ற முறையில்தான் சீனாவில் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன.
- 1980களின் **சீர்திருத்தம் – திறந்து விடுதல்** கொள்கையின் கீழ், 30 ஆண்டுகளில் சீனா உலகின் முன்னணி ஆலை உற்பத்தி நாடாகவும் முன்னணி ஏற்றுமதி நாடாகவும் வளர்ந்துள்ளது.
- சீனாவின் ஏற்றுமதிசார் பொருளாதார வளர்ச்சிக்கு வெளிநாட்டு நிறுவனங்களின் அந்நிய நேரடி முதலீடுகள் உந்துசக்தியாக இருந்தன.
- சீனா புதுப்பிக்கப்படக் கூடிய ஆற்றல் உற்பத்தியில் (காற்றாலைகள், சூரிய மின்சக்தி,



ஆர்தர் கிரோபர் 2002 ஆம் ஆண்டில் பெய்ஜிங்கில் சீனா-சார்ந்த ஆராய்ச்சி சேவையான டிராகனோமிக்ஸை கூட்டாக நிறுவினார். 2017 வரை அதன் முதன்மை இதழான சீனா எகனாமிக் குவார்ட்டர்லியின் தலைமை ஆசிரியராக இருந்தார். டிராகனோமிக்ஸ் 2011 ஆம் ஆண்டில் காவேகலுடன் இணைந்தது. கிரோபர் இணைந்த நிறுவனத்தின் ஆராய்ச்சித் தலைவராகப் பணியாற்றினார்.

டிராகனோமிக்ஸை நிறுவுவதற்கு முன்பு, அவர் ஆசிய பொருளாதார நிலைமைகளில் தேர்ச்சி பெற்ற ஒரு பத்திரிகையாளராக 15 ஆண்டுகள் பணியாற்றினார். சீனா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பிற ஆசிய நாடுகளிலிருந்து செய்தி வழங்கினார். அவர் நியூயார்க் பல்கலைக் கழகத்தின் ஸ்டெர்ன் வணிகக் கல்லூரியில் பொருளாதாரத்தின் இணைப் பேராசிரியராகவும், வெளிநாட்டு உறவுக் குழு மற்றும் அமெரிக்கா-சீனா உறவுகளுக்கான தேசியக் குழுவின் உறுப்பினராகவும், பெய்ஜிங்கில் உள்ள புரூக்கிங்ஸ்-சிங்ஹுவா மையத்தின் வருகைதரும் ஆய்வாளராகவும் உள்ளார். அவரது புத்தகம் " சீனப் பொருளாதாரம்: அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியவை " ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ் நிறுவனத்தால் 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது, இரண்டாம் பதிப்பு 2020 ஆம் ஆண்டில் வெளியானது, பல்கலைக்கழக வகுப்பறைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

*அணு மின்உலைகள், நீர்மின் நிலையங்கள்) உலகில் முன்னணியில் உள்ளது.*

### இ. நிலச்சீர்திருத்தம் – நகரமயமாதல்

- *1949 புரட்சிக்குப் பிறகு நிலத்தில் தனியுடைமை ஒழிக்கப்பட்டுள்ளது. நாட்டுப் புறத்தில் நிலம் கிராம சமூகத்தின் கூட்டு உடைமையாக உள்ளது. 1980-களிலிருந்து நிலத்தின் பயன்பாட்டு உரிமை தனிப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*
- *நகர்ப்புறங்களில் 1980-களுக்கு முன் அரசு நிறுவனங்களுக்குச் சொந்தமான குடியிருப்புகள், 1990களில் அதில் குடியிருந்தவர்களுக்கு குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. அவற்றை விற்கும் உரிமையும் பிற வீடுகளை வாங்கும் உரிமையும் சட்டப்படியானதாக்கப்பட்டது. இது நகர்ப்புற வீட்டுமனைச் சந்தைப் பெருக்கத்தைத் தூண்டிவிட்டுள்ளது.*

### ஈ. சீன நிறுவனங்களின் கட்டமைப்பு

- *விமானப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, ஆற்றல் – கச்சா எண்ணெய், எரிவாயு, நிலக்கரி உற்பத்தி, உருக்கு, அலுமினியம், பெட்ரோ வேதிப் பொருட்கள், கனரகத் தொழில்கள், உள்கட்டுமானம், வாகன உற்பத்தி, இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி அரசுக் கட்டுப்பாட்டில் உள்ளன. பொருளாதாரத்தில் செயல்திறனை மேம்படுத்துவதற்கு முன்தேவை தனியார் மூலதனம் இல்லை, போட்டியே என்ற அடிப்படையில் ஒன்றுக்கும் மேற்பட்ட அரசு நிறுவனங்கள் இந்தத் துறைகளில் போட்டியிடுகின்றன. நுகர்பொருள் துறைகள், சில்லறை விற்பனை, உணவகங்கள் போன்ற சேவைத் துறைகளில் தனியார் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.*
- *சீனாவின் நிதித்துறை கறாராக ஒழுங்குபடுத்தப்பட்டு வரம்பிடப்பட்டுள்ளது. வங்கித் துறை அரசு வங்கிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. நிதித்துறை சூதாட்டக் கருவிகள், பங்குச் சந்தை சூதாட்டம் கடுமையாக ஒழுங்குபடுத்தப்படுகிறது.*

### உ. உள்நாட்டில் சீனாவுக்கு முன் நிற்கும் சவால்கள் – ஆசிரியரின் தீர்வு

- *பொருளாதார ஏற்றத்தாழ்வும் ஊழலும் சீன அரசு சரிசெய்ய வேண்டிய மிகப்பெரிய சவால்களாக உள்ளன.*
- *சீனா தொடர்ந்து பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டுமானால், ஆதாரங்களைத் திரட்டுவதன் மூலம் வளர்ச்சி (resource mobilization phase) என்பதிலிருந்து செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் வளர்ச்சி (efficiency phase) என்பதை நோக்கி நகர வேண்டும்.*
- *சீனாவின் வேகமான வளர்ச்சி அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள், இந்தியா போன்ற ஆசிய நாடுகள், ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்துக்கும் வெவ்வேறு வகையான வாய்ப்புகளையும் சவால்களையும் வழங்குகிறது.*

*கிரோபர் இந்நூலை 13 இயல்களாக அமைத்துள்ளார். முதல் இயலில் சீனாவின் அரசியல் பொருளாதாரத்தின் பொதுவான தன்மைகளை விளக்குகிறார். இயல்கள் 2, 3, 4 முறையே வேளாண்மை, தொழில்துறை, நகரமயமாக்கம் முதலிய அடிப்படைப் பொருளாதார இயக்கங்களைப் பற்றிப் பேசுகின்றன.*

சீனாவில் வணிக நிறுவனங்களின் கட்டமைப்பு (அரசுத் துறை, தனியார் நிறுவனங்கள்) இயல் 5 இலும், சீனாவின் மைய அரசுக்கும் மாகாண அரசுகளுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையிலான நிதி உறவைப் பற்றி இயல் 6 இலும், வங்கிகள், பங்குச் சந்தைகள் உள்ளிட்ட நிதித்துறை அமைப்பு பற்றி இயல் 7 இலும் பேசப்படுகிறது.

ஆற்றலும் சுற்றுச் சூழலும், மக்கள்தொகை மாற்றங்களும் உழைப்பாளர் சந்தையும், நுகர்வோர் பொருளாதாரம் ஆகியவை இயல்கள் 8, 9, 10 ஆக அமைகின்றன.

சீனா எதிர்கொள்ளும் உள்நாட்டு சவால்களான பொருளாதார ஏற்றத்தாழ்வும் ஊழலும் பற்றிய இயல் 11 உம், சீனா தனது வளர்ச்சி முறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் இயல் 12 உம், சீனாவும் உலக நாடுகளும் எனத் தொகுத்துக் கூறும் இயல் 13 உம் நூலை நிறைவு செய்கின்றன.

இந்நூலில், பிற நாடுகளுடன் குறிப்பாக அமெரிக்காவுடன் சீனாவின் உறவு பற்றியும், சீனாவின் வளர்ச்சியை முடக்குவதற்கு அமெரிக்கா எடுக்கும் முயற்சிகள் பற்றியும் பேசப்படவில்லை. இந்நூல் சீனாவின் உள்நாட்டு அரசியல் பொருளாதாரத்தை மட்டுமே தனது ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டுள்ளது.

## 2. சீனாவின் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு

சீனா உலகின் மிகப் பழமையான அரசு அமைப்பைக் கொண்டுள்ளது. பொ.ஆ ஆறாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட அதிகாரத்துவ முறையும் தேர்வு முறையும் சாராம்சத்தில் மாறாமல் தொடர்கின்றன. அத்தகைய வரலாற்றுத் தொடர்ச்சியில் 1949 இல் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்துக்கு வந்ததும் 1979இல் **சீர்திருத்தங்கள் திறந்து விடுதல்** என்ற பாதையை மேற்கொண்டதும் முதன்மையான திருப்பு முனைகளாக அமைந்தன.

சீனாவின் பொருளாதார வளர்ச்சிப் பாதையைப் பின்வரும் கட்டங்களாகப் பிரிக்கலாம்.

- 1979 முதல் 1991 வரை – முதல் தலைமுறை சீர்திருத்தங்கள்
- 1991 முதல் 2001 வரை – இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்கள்
- 2001 முதல் 2008 வரை – சீனா உலக வர்த்தகக் கழகத்தில் உறுப்பினராவது, ஆலை உற்பத்தி, நகர்ப்புற வீடு கட்டுமானம், ஏற்றுமதி முதலியவற்றின் வியத்தகு வளர்ச்சி
- 2008 முதல் இப்போது வரை – மேற்கத்திய நாடுகளில் பொருளாதார நெருக்கடி, சீனா உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் (பெல்ட் ரோட் முன்னெடுப்பு) உள்கட்டமைப்புகளில் பெருமளவு முதலீடு செய்வது, அறிவியல் – தொழில்நுட்ப வளர்ச்சி.

1979 இல் ஏற்றுமதி ஆலை உற்பத்திக்கான சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தென்சீனாவின் கடற்கரையோர வட்டாரங்களான ஷென்ஜென் (Shenzhen), ஜுஹாய் (Zhuhai), ஷியாமன் (Xiamen), ஷான்தௌ (Shantou) ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்பட்டன. அவற்றுக்குள் பொருட்களை இறக்குமதி செய்வது வரியின்றி அனுமதிக்கப்பட்டது. அந்நிய முதலீடுகள் பெருமளவில் ஊக்குவிக்கப்பட்டன.

இந்தப் பகுதிகள் சீனாவின் தென் எல்லையில் உள்ள ஹாங்காங், தைவான், மக்காவ் ஆகிய தன்னாட்சிப் பகுதிகளை ஒட்டி (இடையே கடல்) அமைந்திருப்பதால் வணிகத்துக்கும் அந்நிய முதலீட்டுக்கும் பொருத்தமான இடங்களாக இவை அமைந்திருந்தன.

இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வெற்றியைத் தொடர்ந்து பிற பகுதிகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1984 ஆம் ஆண்டில் 14 கடலோரத் திறந்த நகரங்கள் என்ற கொள்கையின்படி 14 கடற்புற நகரங்களில் அந்நிய வணிகமும் முதலீடும் அனுமதிக்கப்பட்டன. குறிப்பாக, 1990 ஆம் ஆண்டில் ஷாங்காய் (Shanghai) மாநகரத்தின் வளர்ச்சியடையாத கிழக்குப் பகுதி மிகப்பெரிய சிறப்புப் பொருளாதார மண்டலமாக கட்டமைக்கப்பட்டது. இந்தக் கொள்கைகள் படிப்படியாக நாடு முழுவதற்கும் விரிவுபடுத்தப்பட்டன.

1970-களின் இறுதியில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் பயன்பாட்டிலும் மேற்குலகத்தை விடப் பின்தங்கிய நிலையில் இருந்தது, சீனா. 1970-களில் அமெரிக்காவுடன் அரசுறவை ஏற்படுத்திக் கொண்டது, சீனா. பிற கிழக்காசிய நாடுகளைப் போல உள்நாட்டு தொழில் குழுமங்களைச் சார்ந்திருக்க முடியாத நிலை இருந்தது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

- ஒன்று, சீனாவில் 1949 ஆம் ஆண்டு புரட்சியின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகு தனியார் முதலாளித்துவக் குடும்பங்களின்

ஆதிக்கம் ஒழித்துக் கட்டப்பட்டிருந்தது. தொழில் வணிக நிலையங்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டிருந்தன.

- இரண்டாவதாக, ஜப்பான், தென் கொரியா, தைவான் போன்ற பகுதிகளைப் போல அமெரிக்காவின் கீழ்ப்படிந்த நாடாக சீனா இல்லாத நிலையில் அந்நிய நிறுவனங்களின் நேரடி முதலீட்டை அனுமதித்தால்தான் தொழில் வளர்ச்சியை எட்ட முடியும், தொழில்நுட்பங்களைப் பெற முடியும் என்ற நிலை இருந்தது.

ஜப்பான், தென் கொரியா, தைவான், ஹாங்காங் பகுதிகளில் செழித்து வளர்ந்திருந்த ஏற்றுமதிசார் தொழில்கள் சீனாவின் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்குள் தமது உற்பத்தியை நகர்த்தத் தொடங்கின. பொருளின் வடிவமைப்பு ஒரு நாட்டில், கச்சாப் பொருள் தொடங்கி அடுத்தடுத்த உற்பத்திக் கட்டங்கள் பல்வேறு நாடுகளில் அமைந்த ஆலைகளில் நடந்து விற்பனை முதன்மையாக அமெரிக்க, ஐரோப்பியச் சந்தைகளில் என்ற உலகளாவிய உற்பத்திச் சங்கிலிகளின் பகுதிகளாக அவை அமைந்தன.

- 1992 முதல் 2001 வரை ஆண்டுக்கு $3,700 கோடி அந்நிய நேரடி முதலீடுகள் சீனாவுக்குள் வந்தன.
- 2001 முதல் 2010 வரை ஆண்டுக்கு $10,000 கோடி அந்நிய நேரடி முதலீடுகளை சீனா ஈர்த்தது.

2014 ஆம் ஆண்டில் உலக ஏற்றுமதியில் சீனாவின் பங்கு 12% ஆக இருந்தது. உலக அளவில் ஆலை உற்பத்தி ஏற்றுமதியில் சீனாவின் பங்கு 18 விழுக்காடு ஆகும். சீனா உலகளாவிய உற்பத்தி வலைப்பின்னல்களின் மையமாக ஆகியுள்ளது.

### சீன நிறுவனங்களின் கட்டமைப்பு

சீனாவின் பெரும்பான்மையான பெருநிறுவனங்கள் அரசு நிறுவனங்களாக உள்ளன. நுகர்பொருள் துறையிலும் சேவைத் துறைகளிலும் செயல்படும் சிறிய/நடுத்தர தனியார் நிறுவனங்கள் மொத்த உற்பத்தியிலும் வேலை வாய்ப்பிலும் பெரும்பங்கு வகிக்கின்றன.

2002இல் சீனாவில் 200 தொழில் குழுமங்கள் (qiye jituan) இருந்தன. Zhuda fangxiao (பெரியவற்றை வலுப்படுத்தல் – சிறியவற்றைக் கைவிடுதல்) என்ற கொள்கையின் கீழ் பெரு நிறுவனங்கள் வலுப்படுத்தப்பட்டன. சிறு நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டன அல்லது இழுத்து மூடப்பட்டன. நுகர்வோர் துறைகள், சில்லறை விற்பனை, உணவகங்கள் தனியார் மூலதனத்திடம் விடப்பட்டன.

2013 இல் 1.5 இலட்சம் அரசு நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் ஒட்டுமொத்த சொத்துமதிப்பு 16.8 இலட்சம் கோடி டாலர். 92 நிறுவனங்கள் உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் பட்டியலில் உள்ளன. அவறில் 89 மைய அரசு நிறுவனங்கள், 23 உள்ளூர் அரசாங்க நிறுவனங்கள், 10 தனியார் நிறுவனங்கள், 6.5 கோடி பேர் அவற்றில் வேலை செய்தனர். அவை மொத்த உற்பத்தியில் 30%ஐ பங்களிப்பு செய்தன.

சீன மக்கள் வங்கி, சீன வங்கி, சீன வணிக வங்கி, சீன கட்டுமான வங்கி, சீன தொழில் வணிக வங்கி இவை நிதியமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. நகர்ப்புற கடன் கூட்டுறவு சங்கங்கள் நகர்ப்புற வங்கிகளாகவும் நாட்டுப்புற கடன் கூட்டுறவு சங்கங்கள் நாட்டுப்புற வங்கிகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. இவை அனைத்துமே அரசுக்குச் சொந்தமானவை.

### கம்யூனிஸ்ட் கட்சி கட்டுப்படுத்தும் அரசு

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி அரசியல், அரசாங்கம், இராணுவம் என மூன்று அதிகார மையங்களையும் கட்டுப்படுத்துகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மைய இராணுவ ஆணையத்தின் தலைவராகவும் குடியரசின் தலைவராகவும் பொறுப்பு வகிக்கிறார். 1978 முதல் 1992 வரை தெங் ஷியாவ்பிங் (Deng Xiaoping), 1992 முதல் 2002 வரை ஜியாங் செமின் (Jiang Zemin), 2002 முதல் 2012 வரை ஹு ஜின்தாவ் (Hu Jintao) இந்த உச்சநிலைப் பொறுப்பை வகித்துள்ளனர். 2012 இலிருந்து ஷி ஜின்பிங் (Xi Jinping) தலைமைப் பொறுப்பில் உள்ளார்.

முடிவுகள் உயர்நிலைத் தலைவர்கள் குழுவின் கூட்டுத்துவ அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. இந்த உயர்நிலைத் தலைவர்களின் குழுவில் கடந்தகாலத் தலைவர்களும் அடங்குவர். கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்புத் துறை அமைப்பாக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்துக் கட்டுப்படுத்துகிறது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் 2025 நிலவரப்படி 10 கோடி உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் நாடு முழுவதும் கட்சியின் கொள்கைகளை செயல்படுத்துவதற்கான முகமைகளாக உள்ளனர்.

சீனாவில் மாகாண மட்டத்திலான 31 ஆட்சிப் பகுதிகள் உள்ளன. அவற்றில், சீனாவின் தென்மேற்கில் இந்திய எல்லையில் உள்ள திபெத் தன்னாட்சிப் பகுதி 30 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டது, சீனாவின் தென்கிழக்கில் ஹாங்காங், தைவான் அருகில் இருக்கும் குவாங்தோங் மாகாணத்தின் மக்கள் தொகை 10.4 கோடி. பாதிக்கும் மேற்பட்ட மாகாணங்களின் மக்கள்தொகை 4.6 கோடிக்கும் அதிகம். அதாவது, பல மாகாணங்கள் உலகின் பல நாடுகளை விடப் பெரியவை. கொள்கை முடிவுகள் ஒரு பகுதியில் சோதிக்கப்பட்டு கிடைக்கும் விளைவுகளைப் பொறுத்து நாடு முழுவதும் விரிவாக்கப்படுவது என்ற அணுகுமுறைக்கு இந்தக் கண்ட அளவிலான நாட்டின் அமைப்பு ஏதுவாக உள்ளது.

சீனாவின் உள்நாட்டு அரசியல் பொருளாதாரம் பற்றிய ஆர்தர் கிரோபரின் கண்ணோட்டத்தைப் பின்வருமாறு தொகுத்துச் சொல்லலாம்.

அரசியல் பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தொடங்கிய 35 ஆண்டுகளில் சீனா உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாகவும் பல தொழில்நுட்பங்களில் அமெரிக்காவுடன் போட்டியிடக் கூடியதாகவும் வளர்ந்திருப்பது அதன் தனித்துவமான வரலாற்றுப் பின்னணி, கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சிமுறை, உலகச் சூழல்களை சரியாகப் பயன்படுத்திக் கொண்டது, உள்நாட்டு முரண்பாடுகளைச் சரிவரக் கையாண்டது முதலிய காரணிகளால் நிகழ்ந்திருக்கிறது. சீனா, தனது வளர்ச்சியைத் தொடர வேண்டுமானால், சீர்திருத்தங்களைத் தீவிரப்படுத்தி முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக முறையையும், தனியார் மூலதனத்தையும் முழுமையாக ஊக்குவிக்க வேண்டும்.

### 3. சீன அரசியல் பொருளாதாரம் பற்றிய மார்க்சியப் பார்வை

இந்நூல் சீனாவின் வளர்ச்சிப் பாதையை 1978 **சீர்திருத்தம் - திறந்து விடுதல்** என்பதிலிருந்து தொடங்கிப் பேசுகிறது. இதுவே, மேற்கத்திய ஆய்வாளர்களின் வழக்கமான அணுகுமுறை.

1949 புரட்சி முதல் 1978 வரை சீனாவின் அரசியல் பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்நிலையிலும் ஏற்பட்ட மாற்றங்களை ஆர்தர் கிரோபர் போன்ற ஆய்வாளர்கள் எதிர்மறையாகப் பார்க்கின்றனர். 1949க்கு முன்னர் சீனாவின் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு அதைத் தொடர்ந்த உள்நாட்டுப் போர் என்று பின்தங்கிய, குழப்பமயமான நிலையில் இருந்தது. புரட்சிக்குப் பிந்தைய அடுத்த 30 ஆண்டுகளில் நிலச்சீர்திருத்தம், பண்பாட்டுப் புரட்சி நடத்தப்பட்டன. தாய்சேய் நலம், கல்வி, மருத்துவம், ஊட்டச் சத்து போன்ற மனிதவளக் குறியீடுகளில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டது. இதுதான் **சீர்திருத்தம் – திறந்து விடுதல்** கொள்கைகளை செயல்படுத்துவதற்கான அடித்தளத்தை உருவாக்கியிருந்தது. இதனை ஆர்தர் கிரோபர் பொருட்படுத்தவில்லை.

கிரோபரின் நூல், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளை அடுத்தடுத்த தலைமுறை தலைவர்களின் தனிப்பட்ட ஆளுமைகள் மூலமாகவும் பல்வேறு மட்டங்களில் உள்ள ஊழியர்களின் தனிப்பட்ட ஆளுமைகள் விருப்பங்கள் மூலமாகவும் புரிந்து கொள்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் வெகுமக்கள் வர்க்கங்களின் சர்வாதிகாரம் என்பதை அதிகாரத்துவ மேலாதிக்க அரசு என்று வரையறுக்கிறது. இதற்குச் சரியான பெயர் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்.

இது பெரும்பான்மை மக்களுக்கு ஜனநாயகத்தையும் சிறுபான்மை சுரண்டும் சக்திகள் மீது சர்வாதிகாரத்தையும் சுமத்துகிறது. இதன் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளது. அது மார்க்சிய லெனினியக் கருத்தியலின் அடிப்படையில் சோசலிசத்தைக் கட்டியமைப்பதற்கான திட்டத்தை வழிநடத்திச் செல்கிறது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி **சீர்திருத்தம் – திறந்து விடுதல்** என்ற கொள்கையைச் செயல்படுத்தத் தொடங்கிய பிறகும் பின்வரும் கோட்பாடுகளை உறுதியாகப் பின்பற்ற வேண்டும் என்று, சீர்திருத்தங்களை முன்னெடுத்த சீனத் தலைவர் தெங் ஷியாவ்பிங் வரையறுத்துள்ளார்

1. சோசலிசப் பாதையில் உறுதியாக நிற்றல்
2. வெகுமக்களின் ஜனநாயக சர்வாதிகாரத்தைப் பராமரித்தல்
3. கட்சியின் தலைமைப் பாத்திரத்தை உறுதி செய்தல்
4. மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனையைப் பின்பற்றுதல்

கிரோபர் குறிப்பிடும் அதிகாரத்துவ மேலாதிக்கம், கொள்கையளவில் மையப்படுத்தல் நடைமுறையில் பரவலாக்கம், நகர்ப்புறத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடைவெளியைக் குறைத்தல், ஊழலின் தோற்றமும் அதை எதிர்த்த போராட்டமும், ஏற்றத்தாழ்வுகளை சமன் செய்தல்

இவை அனைத்தும் ஒரு முழுமையான திட்டத்தின் பகுதிகளாக உள்ளன. அந்தத் திட்டம் நிலம், ஆலைகள், தொழில்நுட்பம் போன்ற உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவத் தனியுடைமையை ஒழித்து சுரண்டலை அழித்தொழிக்கும் சோசலிசத்தைக் கட்டியமைப்பதாகும்.

சீன அரசின் திட்டங்கள் மைய அரசினால் வகுக்கப்பட்டு, மாகாணங்களிலும் உள்ளூர் பகுதிகளிலும் தனிப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களால் திட்டமிட்ட முறையில் செயல்படுத்தப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, சீனாவில் அறுதி வறுமையை ஒழித்தல் என்ற திட்டத்தை கம்யூனிஸ்ட் அரசு செயல்படுத்திய முறையைப் பார்க்கலாம்.

2019 ஆம் ஆண்டு ஜூன் 17 அன்று, குவாங்ஷி தன்னாட்சி மண்டலத்தின் கம்யூனிஸ்ட்டுக் கட்சிச் செயலாளர் ஹுவாங் வென்ஷியோ (Huang Wenxiu) என்ற பெண் ஊழியர் மலைச்சரிவில் சிக்கி உயிரிழந்தார். அவரது வயது 30.

மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் ஹுவாங் பெய்ஜிங் நார்மல் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். இப்பல்கலைக்கழகம் சீனாவின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். பெய்ஜிங்கில் பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் தனது பணிவாழ்வைத் தொடர்வதற்கு மாறாக ஹுவாங், சீனாவின் மேற்குப் பகுதியில் உள்ள பின்தங்கிய மாகாணமான குவாங்ஷியில் உள்ள தனது சொந்த ஊருக்குத் திரும்பினார். மிகவும் பின்தங்கிய, தொலைதூர கிராமமான லெஇய மாவட்டத்தில் பணியாற்ற முன்வந்தார். பணியின் போது இயற்கையின் சீற்றத்துக்குப் பலியானார்.

1978க்கும் 2013க்கும் இடையே அறுதி ஏழ்மையில் வாழும் சீன மக்கள் தொகை மொத்த மக்கள்தொகையில் 80 விழுக்காட்டிலிருந்து 9 விழுக்காடாகக் குறைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டு அறுதி ஏழ்மையை முற்றிலும் ஒழித்துக் கட்டுவது என்ற இலக்கை சீன அரசு அறிவித்தது. அதன்படி எட்டு இலட்சம் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள், தன்னார்வலர்கள் திரட்டப்பட்டனர். அவர்கள் கள ஆய்வு மூலம் நாடு முழுவதிலும் 1.28 இலட்சம் கிராமங்களில் வசிக்கும் 2.94 கோடி குடும்பங்களில் 8.96 கோடி ஏழை மக்களை அடையாளம் கண்டனர்.

30 இலட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி ஊழியர்கள் 2.55 இலட்சம் குழுக்களாக ஏழ்மை நிலவும் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் கிராம அரசு அலுவலர்கள், ஏழைக் குடும்பங்கள், தன்னார்வலர்கள் முதலியோரோடு இணைந்து ஏழ்மைக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைய வேலை செய்தனர். அவர்களில் ஒருவர்தான் மேலே குறிப்பிட்ட ஹுவாங் வென்ஷியோ. வேலை வாய்ப்புகளை உருவாக்குவது, தொழில்களை கிராமப் புறங்களுக்கு மாற்றுவது, காடுகளையும் புல்வெளிகளையும் மீட்டமைப்பது, கல்வியறிவை மேம்படுத்துவது எனப் பல்முனை நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன.

இவற்றின் விளைவாக அறுதி ஏழ்மையில் உள்ள மக்கள் தொகை சுமார் 10 கோடி என்பதிலிருந்து சுழியாக ஆனது. நீடித்த வாழ்வாதாரங்களை உருவாக்குவதன் மூலம் குடும்பங்கள் மீண்டும் ஏழ்மையில் வீழ்வது தடுக்கப்பட்டுள்ளது.

சீனாவில் நிலத்தில் தனியுடைமை ஒழிக்கப்பட்டிருக்கிறது. தனியார் முதலாளிகள் கடுமையான ஒழுங்குபடுத்தலுக்கு உள்ளாகிறார்கள். மூலதனத்தால் ஊழல்படுத்தப்பட்ட கட்சி ஊழியர்கள் மரண தண்டனை வரையில் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள். அவர்கள் கொள்ளையடித்துச் சேர்த்த சொத்துகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படுகின்றன. பொதுவான வளம் என்ற முழக்கத்தின் கீழ் பொருளாதார ஏற்றத்தாழ்வு சமன் செய்யப்படுகிறது.

சோசலிசத்தை நோக்கிய சீன மக்களின் பயணத்தை இந்த அடிப்படையில் புரிந்து கொள்வதற்கு படிக்க வேண்டிய நூல்கள்

- கைலே ஃபெர்ரனா எழுதிய **உலகிற்கு சீனா ஏன் தேவை - வளர்ச்சி, சூழலியம், முரண்பாடுகளுக்குத் தீர்வு, பொதுவான செழுமை** *(Why the World Needs China – Development, Environmentalism, Conflict Resolution & Common Prosperity by Kyle Ferrana)*,
- கார்லோஸ் மார்ட்டினஸ் எழுதிய **கிழக்கு இன்னும் சிவப்பாகவே உள்ளது. 21 ஆம் நூற்றாண்டில் சீன சோசலிசம்** *(The East is Still Red – Chinese Socialism in the 21st Century by Carlos Martinez)*,
- ரோலண்ட் போயர் எழுதிய **சீனப் பண்புகளுடன் கூடிய சோசலிசம்: வெளிநாட்டவர்களுக்கு ஒரு கையேடு** *(Socialism with Chinese Charecteristics – A Guide for Foreigners by Roland Boer)*

●

**கட்டுரையாளர்: மார்க்சிய செயல்பாட்டாளர், மொழிபெயர்ப்பாளர்.**

### நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடாக

# மீள் புரிதல் நோக்கில் செவ்வியல் நூல்கள்

## தமிழாய்வு வரலாற்றில் ஓர் அரிய முயற்சி

**கூர்மையான, பல அடுக்குத் திட்டமிடலுடன்**
**பல முறை பலரால் மதிப்பீடு செய்யப்பெற்று**
**'விழி' - இணைய அமர்வில் விவாதித்து மேம்படுத்தப்பட்ட**


**64 அறிஞர்களின் ஆய்வுரைகள் 1300 பக்கங்களில்**
**12 தொகுதிகளாக விரைவில் வெளிவருகின்றன**





05.05.2025 அன்று தில்லி JNU இல் நிகழ்ந்த புத்தக வெளியீட்டு விழாவில் JNU தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் மொழிபெயர்த்த, பதிப்பித்த NCBH இன் நூல்கள் வெளியிடப்பட்டன. JNU துணைவேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் வெளியிட தில்லி தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையர் திரு ஆஷிஷ் குமார் இ.ஆ.ப அவர்கள் பெற்றுக்கொண்டார்.


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 85/-




₹ 50/-




₹ 180/-




₹ 90/-





₹ 200/-




₹ 80/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in




சந்தியா பதிப்பகம் | விலை ரு 600.

# சிகரம் ச.செந்தில்நாதனின் அமர படைப்பு

தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சியில் பக்தி இலக்கியங்களுக்கும் பெரும் பங்குண்டு, மதங்கள் உருவாக்கிய பக்தியும் அவற்றுக்கிடையே நடந்த போர்களும் பல்வகைப்பட்டவை; இவைபற்றி ஆசிரியர் செந்தில்நாதன் பதினைந்து நூல்கள் வரை எழுதியிருக்கிறார், முத்தாய்ப்பாக இந்நூல் பெருநூலாக வெளிவந்துள்ளது.

சைவமும் பௌத்தமும் சமணமும் இலக்கிய வளர்ச்சிக்கு பங்கு வகித்தது போலவே ஒன்றையொன்று அழித்த வரலாறுகளும் உள்ளன.மதங்களின் போர்களில் அனல்வாதம் புனல்வாதம் முதல் கழுவேற்றம் துஷாக்கினி போன்ற கொலைத்தாண்டவங்களும் நிகழ்ந்துள்ளன.

இவற்றை ஆதிமுதல் ஆசிரியர் வகைப்படுத்துகிறார். கோவில் வெறும் இறைவழிபாடு சார்ந்ததாக மட்டுமில்லை, துன்பப்படும் மக்களுக்கு ஆறுதல் தருவதாகவும் மகிழ்வுடன் வாழ்வோர்க்கு இது கடவுள் போட்ட பிச்சை என்று நம்புவோரின் உறைவிடமாகவும் உள்ளது.



**எஸ்.ஏ.பெருமாள்**

மதம் அதன் அடையாளமான கோவில்கள் பலரது பிழைப்பிற்கு ஆதாரமாயிருக்கிறது என்று சிந்தனைச் சிற்பி தோழர் சிங்காரவேலர் மிக விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழ்ச் சமூகத்தில் உருவான ஆதிகால வழிபாடுகள் முருக வணக்கம் பற்றி சுமார் நூறு பக்கங்களுக்குமேல் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை முருகன் பற்றிய கேள்விகள் அனைத்திற்கும் விடையளிக்கிறது.

அதே போல் விநாயகர் வழிபாடு வந்தமை குறித்தும் வரலாற்று ஆதாரங்கள் தரப்பட்டுள்ளன. ஆகமங்கள் மந்திரங்கள் வந்த விதங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ஆனால் சிவன்தான் மூத்தக் கடவுள் என்று திருமூலர்,

**"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை**

**அவரோடு ஒப்பார் இங்கு யாருமில்லை"**

என்கிறார்.

தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் ஏழாம் நூற்றாண்டு முக்கிய காலகட்டமாகும், சமணம் பௌத்தம் இரண்டையும் ஒழிக்க சம்பந்தரும் நாவுக்கரசரும் தலைதூக்கி நின்ற காலம். அவர்கள் இயற்றிய தேவாரம் மக்களை ஈர்த்து, கடுங்கோடையில் ஒருவனுக்கு மரத்தின் நிழல் தரும் குளிர்ச்சியைப் போன்றதுதான் கடவுள் என்கிறது மூவரின் தேவாரம்.

தேவாரமும் திருவாசகமும் நிலப்பிரபுத்துவத்தை பாதுகாக்கும் ஆயுதங்களாகின. சங்ககாலத் தமிழனுக்கு சொர்க்கம் நரகம் தெரியாது, ஆனால் தேவார காலத்தில் அவை தமிழனுக்குத் தெரிந்து விட்டன. ஆதிசங்கரர் வழியாக சுந்தரர் வந்து,

**"வாழ்வாவது மாயம் இது**
**மண்ணாவது திண்ணம்"**

என்றார்.

இந்நூல் பற்றிக் கூற ஏராளமான விசயங்கள் உள்ளன. தமிழகத்தை ஆட்சி செய்தவர்களின் பட்டியல் அவர்கள் காலத்தில் மதங்களின் நிலைகள் குறித்து விவரங்கள் உள்ளன. மூவேந்தராட்சி, இசுலாமியராட்சி, நாயக்கர்களாட்சி, சேதுபதிகள், ஆற்காடு நவாப்புகள், மராட்டியர் ஆட்சிவரை அக்காலங்களில் மதங்களின் நிலை கூறப்பட்டுள்ளது.

சிறுதெய்வ வழிபாடு, பெண்தெய்வ வழிபாடு விவசாய மக்களிடம் தொடர்கிறது. மேலும் சம்பந்தரும் அப்பரும் சனாதனத்தை ஏற்காமல் எதிர்த்தார்கள் என்பதற்கான ஆதாரம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சைவ சித்தாந்தமானது வடமொழி வேதத் தத்துவங்களோடும் மரபுகளோடும் முரண்பட்டு நிற்பதையும் குறிப்பிடுகிறது.

தமிழகத்தில் வைணவம் தொன்மையானது என்பதை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்"**

என்று தொல்காப்பியம் கூறுகிறது.

அதேபோல் பழங்காலத்தில் பொருள்முதல் வாதம் இருந்துள்ளது. அது லோகாயதம் என்றழைக்கப்பட்டுள்ளது. சித்தர்களில் உலகாயதச்சித்தர் என்று ஒருவர் இருந்துள்ளார். அவரது பாடல்கள் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டன என்று கூறப்படுகிறது. மதமாற்றங்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் பெருமளவு நடந்துள்ளன. நூலின் இறுதிப்பகுதியில் மதங்களின் இன்றைய போக்குகள் குறித்து விரிவாகக் காட்டப்பட்டுள்ளது.

நாம் கற்றது கைமண்ணளவே என்பதை இந்த நூலினை வாசிக்கையில் உணர முடிகின்றது. தோழர் செந்தில்நாதனுக்கு அவரது மார்க்சீய ஆய்வுகளுக்காக புகழ்மாலை சூட்டுகிறேன்.

தோழர் செந்தில்நாதன் தமிழகத்தில் ஒவ்வொரு மதமும் தோன்றிப் பரவிய விதங்களையும், ஒன்றுடன் ஒன்று மோதி அழித்த கதைகளையும் மிக விரிவாக ஆய்வு செய்துள்ளார். ஏற்கெனவே மயிலை சீனி.வேங்கடசாமி போன்றோர் சமணர் படுகொலைகள் பற்றியும் பௌத்தர் படுகொலை பற்றியும் விரிவாக எழுதியுள்ளனர். எனினும் இந்நூல் அப்போர்களைப் பற்றியும் அதன்முடிவில் வைணவத்தின் வருகை பற்றியும் தெளிவாக்குகிறது.

சைவம், சமண, பௌத்த மதங்களை வீழ்த்தியபின் வைணவத்தின் வருகை சைவ வைணவ மோதலாய் மாறியதையும் இந்நூல் தெளிவாக்குகிறது. தத்துவ வாதப்பிரதிவாதங்களில் தோற்றவர்களைப் படுகொலை செய்யும் சைவத்தின் பயங்கரம் கொடூரமானது.

வாதுசெய் சமனும் சாக்கியப்பேய்கள் நல்வினை நீக்கிய வல்வினையாளர் என்று சம்பந்தர் புத்த சமணர்களைப் பழிக்கிறார். கல்வியிற் சிறந்து விளங்கிய புத்தநந்தி என்பாரை வாதுக்கழைத்து

அவரை தலையறுத்துக் கொலைபுரிகிறார்கள் சம்பந்தரின் சீடர்கள். நாவுக்கரசர், அஞ்சுவதுமில்லை அஞ்சுவது யாதொன்றுமில்லை என்கிறார்.

தமிழ்நாட்டில் பேரரசுகளை நிறுவியது பிற்காலச் சோழர்களே. அவர்கள் சைவத்தை முதல்நிலைப்படுத்தினர். மதம் வெறும் நம்பிக்கைகளின் தொகுதி அல்ல. அது சமூக உறவுகளுடன் உற்பத்தி உறவுகளுடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டது. தேவார மூவரும் அவர்களது தத்துவங்களும் நிலப்பிரபுத்துவ சாம்ராஜ்யத்தை அமைக்க உதவின.

தமிழகத்தில் எண்ணாயிரம் சமணரைக் கழுவேற்றியது பற்றி ஒரு கூட்டம் மறுப்புத் தெரிவித்தது. இந்நூலைப் படித்தால் பிற மதத்தினர்மீது சைவம் காட்டிய படுகொலைகள் ஆய்வறிஞர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளதை உணரமுடியும்.

கழுவேற்றி கொலை செய்தபின் எண்ணாயிரம் சமணரின் குடும்பங்களும் பிள்ளைகுட்டிகளும் மதுரை கீழக்குயில்குடி அருகில் சம்பந்தரை சுற்றி தங்கள் எதிர்காலம் பற்றிக் கேட்டதாகவும் அவரும் வேறுவழியின்றி சமணப் பள்ளிகளனைத்தையும் சைவக் கோவில்களாக மாற்றி சமணரை பிராமணராக்கி வாழ்வளித்ததாய் ஒரு கதையும் உண்டு. இந்த மதம் மாறிய பிராமணரை அஷ்ட பிராமணர் என்றழைப்பதாகவும் தெரிய வருகிறது.

பல அபூர்வச் செய்திகளை இந்நூல் எளிமையாய் சொல்லிச் செல்கிறது. மதங்கள் தோன்றிய போதே மதமாற்றங்களும் தோன்றிவிட்டன. இம் மதமாற்றங்கள் மன்னர்களால் ஆனவை.

பெருந்தெய்வ வழிபாடு சிறுதெய்வ வழிபாடு முதல் பட்டியல் சாதிவழிபாடுகள் வரை நூலில் விரிவாய் கூறப்பட்டுள்ளது. மேலும், சிறுதெய்வ வழிபாடு என்பது சமூகப் போராட்டங்களின் அங்கமே என்றும் ஆசிரியர் முடிவுக்கு வருகிறார்.

475 பக்கம் கொண்ட இந்நூலில் தோழர் செந்தில்நாதன் நூற்றுக்கணக்கான விசயங்களை அடுக்கியுள்ளார். அதனால் இந்நூலைப் பொறுமையாக வாசித்தால் மதங்கள் பற்றிய சரியான பார்வையும், மக்களின் ஒற்றுமை பற்றியும் அறிந்து வழிகோல முடியும். பகுதி பகுதியாக நானே இதை நான்குமுறை வாசித்து சுருக்கி எழுத முடிந்தது. தோழர் செந்தில்நாதன் அவர்களின் அமர படைப்பு இது என்பேன்.


●

**கட்டுரையாளர்: மார்க்சிய வரலாற்று ஆய்வாளர்**

## அஞ்சலி

இடதுசாரி மக்கள் இசைப் பாடகர் ‘கரிசல் குயில்’ கிருஷ்ணசாமி மறைவுக்கு ‘நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்’ அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.


காற்றில் கலந்த அவரது குரலிசை காலமெல்லாம் ஜீவனோடு உயிர்த்திருக்கும்.



# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
# இம்மாத வெளியீடாக...

’புரட்சியில் பொருள்’ என்ற இந்நூல் ப.கு.ராஜன் அவர்களின் பல்லாண்டு கால தொடர் உழைப்பின் விளைச்சல். இத்தகைய நூல்கள் தமிழில் அரிதாகவே வெளிவருகின்றன. ஆழமும் கனமும் மிக்க இது போன்ற நூல்களை எழுத வருடக்கணக்கான விரிந்த வாசிப்பு அவசியப்படுகிறது. வாசிப்போடு சிந்தனையும் படிப்பறிவோடு பட்டறிவும் தேவைப்படுகிறது. பொறுமையும் வைராக்கிய உணர்வும் இருந்தால் மட்டுமே இது சாத்தியப்படுகிறது."

**- த. ஸ்டாலின் குணசேகரன்**





## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**ஜுன் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6881 | 2674 | 2671 | 5522 | 2677 | 3749 |
| 6879 | 2675 | 5524 | 5521 | 2797 | 6880 |
| 4711 | 2676 | 5525 | 5415 | 5824 | 7984 |
| 1900 | 2672 | 5523 | 7798 | 1720 | 5414 |
| 1899 | 2673 | 5520 | 1914 | 3750 | 5416 |


**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00, / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00


*சந்தாத் தொகையை*
**New Century Reader’s Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

கட்டுரை

# உண்டி கொடுத்து உயிரும் காத்த உத்தமர் நடேசய்யர்






கிருங்கை சேதுபதி

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'[1] என்பது மணிமேகலைக் காப்பியத்தின் மங்கலத் தொடர்களுள் ஒன்று. அதனை அதற்கும் முன் மொழிந்தவர், குடபுலவியனார்.[2] அவற்றின் வழி வந்த அருள்தொடர் ஒன்று, மகாகவி பாரதியின் வாக்காக மலர்ந்தது. அது விடுதலை இந்தியாவின் குறிக்கோள்களில் ஒன்றாகவும் இருந்தது.

**வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் - இங்கு**

**வாழும் மனிதருக் கெல்லாம்**

**பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்**

**பாரை உயர்த்திட வேண்டும்"[3]**

அதற்காகவே, பிறந்த ஊர் விட்டு, வாழும் இடம் விட்டுப் புதுவைக்குப் புலம் பெயர்ந்து, உணவு, உறக்கம் இருந்தும் இல்லாமலும் அரும்பாடுபட்டவர் பாரதியார். தன்னொத்த வீரர்களைத் தன்னுடன் வரவழைத்துக் கொண்டு, புதுவையில் அவர்கள் செய்தது, விடுதலை வேள்வி.

குடும்பமாக வதிந்த காலத்திலும், செல்லம்மா, கடையம் சென்ற காலத்திலும், பாரதி பசியாரப் புசித்தது சில நாட்களே. கிடைத்தவரையில் நண்பர்களுடன் உண்டு, இல்லாதபோது பாடலால் பசியாறி, வாழ்ந்த நாட்களை வரலாறு நன்கறியும்.

மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;

எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி

**அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்;**

**கருமமே கண்ணாயி னார்.[4]**

என்ற நீதி நெறிவிளக்கப்பாடல், இவர்களுக்கு மிகப் பொருந்தும்.

பாரதியின் 'இந்தியா' இதழ்ப் பணிகளுக்காக, புதுவைக்கு வந்த நெல்லைச் சீமைக்காரர், என். நாகசாமி, பாரதியுடன் உண்டு, பசியாறியவர். பல

நாட்களில் எளிமையுறச் சமைத்தும் பரிமாறியவர். இல்லாத நாட்களில், புதுவையில் இருந்த உணவு விடுதிகளில் எடுத்துக் கொண்டுவந்து பாரதிக்கு அளித்தவர்.

அவர் எழுதுகிறார்: "பாரதியார் சென்னையை விட்டு சென்னை அரசாங்கத்தின் தொந்தரவு இல்லாமல், நிம்மதையாய் நாட்டுக்குச் சேவை செய்துகொண்டு வாசஞ் செய்ய புதுச்சேரி வந்ததும், முதலில் கலவை பங்களாவில் குளத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு சிறு தளம் போட்ட கட்ட்டத்தில் வசித்தார். அதன் மேல் காற்றோட்டமாய் தங்கியிருக்க கீத்துக் கொட்டகையும் இருந்தது. பகல் முழுவதும் 'இந்தியா' ஆபீஸில் நாட்டுக்குத் தொண்டு புரிந்துவிட்டு, இரவில் மெத்தை (மாடி) மேல் படுத்துத் தூங்கி இளைப்பாறி வந்தார் பாரதியார். அந்தப் பங்களாவில் சாமிநாதய்யர் என்ற ஓர் பிராமணன் மாதக் கணக்கில் உத்தியாகத்திருந்தோர்க்குப் பணம் வாங்கிக் கொண்டு சவுகர்யமாக சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தார். பாரதியாரும் அவரிடமே சாப்பிட்டு வந்தார். முதலில் ஹரிஹரசர்மா அவருக்கு உதவியாக வந்து சேர்ந்தார். பிறகு நானும் அவர்கள் கூடவே வந்து சேர்ந்தேன். நாங்கள் மூவரும் நாட்டுக்கு தேசிய பத்திரிகை 'இந்தியா' மூலம் தொண்டு செய்தோம். ஆனாலும் மேலும் தொண்டர்கள் பத்திரிகைக்கு ஊழியஞ் செய்யத் தேவையாயிருந்தது. நாங்கள் சென்னை ராஜ்யத்திலுள்ள நண்பர்களுக்கு, 'இந்தியா' பத்திரிகையில் சேவை செய்யத் தொண்டர்கள் தேவையென்று வேண்டுகோள் விடுத்தோம். எங்கள் விஞ்ஞாபனத்தை சிரமேற்கொண்டு வெளியே இருந்து சிலர் உடனே வந்தார்கள். அவர்கள் வசதியாய்த் தங்கவும் சாப்பிடவும் கலவை பங்களா தோதில்லாமலிருந்தது. ஆகையால் நாங்கள் வசதியாக வசித்துக் கொண்டும், வந்தவர்களுக்கு வேண்டிய சவுகர்யம் கொடுத்து, 'இந்தியா' பத்திரிகைக்குத் தொண்டு புரியச் செய்யவும் வாடகைக்கு ஒரு இடம் பார்த்து வந்தோம்.

ஈஸ்வரன் தர்மராஜா கோயில் தெருவில் எங்கள் பிரியம்போல் வாடகை குறைவாகவும், சவுகர்யமாகவும் விளக்கெண்ணெய்ச் செட்டி வீடு எங்களுக்குக் கிடைத்தது. அதற்கு வாடகைச் சீட்டு எழுதிக் கொண்டு, பழுது பார்த்து, வெள்ளையடித்து கொடுக்கச் சொல்லி, அதில் வசிக்க எல்லோரும் சென்றோம்.

அப்பொழுது பாரதியாரைச் சேர்த்து நாங்கள் ஏழு பேர். அந்தவீட்டில் வசிக்க ஆரம்பித்தோம். நாங்களெல்லாரும் அதிகாலையில் சுமார் ஐந்து மணிக்கே எழுந்து உடற்பயிற்சி செய்தோம். பிறகு, கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து குளித்துவிட்டு, உடைகளைத் துவைத்து உலர்த்திவிட்டு, காய்ந்த துணிகளைக் கட்டிக் கொண்டு, நாஸ்தா செய்தோம். பின்பு மூன்று பேர் இந்தியா பத்திரிகைக்கு காலையில் தொண்டு புரிந்துவிட்டு மாலையில் வீட்டில் எல்லாருக்கும் சமையல் செய்து வந்தார்கள். மூவர் காலையில் ஜாகையில் சமையல் செய்தார்கள். மாலையில் தேசீயப் பத்திரிகைக்கு சேவை செய்து வந்தார்கள். இவ்வாறாக, நாங்களே எல்லாம் செய்துகொண்டு வந்தோம். நாங்கள் எல்லோரும் ஒருமித்து எவ்வித வேற்றுமையுமில்லாமல், அந்யோந்யமாய் தேசபக்தியோடு சேவை புரிந்தோம். ஆரோக்கியமான எளிய உணவையே மண் சட்டிகளில் நாங்கள் ருசியாயும், சந்தோஷமாயும் சாப்பிட்டு வந்தோம்."[5]

குருகுல வாசம்போல் இனிதே நடந்த இந்த வாழ்க்கை, பின்னர் ஆங்கில ஒற்றர்களின் நெருக்கடிகளால் தள்ளாடத் தொடங்கியது. இந்தப் பொது வாழ்க்கை, பின்னர் 'தருமம்' இதழினை வெளியிடும் இல்லமான தர்மாலயம் இல்லத்தில் ஓரளவு நிலை கொண்டது. பாரதி முதலானோர் அவ்வில்லத்தின் விருந்தினர்கள் ஆனார்கள். அந்த வாழ்வில் நிகழ்ந்த சில அனுபவங்களையும் சூழலுக்கேற்ப நினைவுகூர்ந்து நாகசாமி உள்ளிட்டோர் எழுதி இருக்கின்றனர்.

இதழ்ப் பணிகள் முதலான இயக்கப்பணிகள் நெருக்கடிக்கு உள்ளான காலக்கட்டங்களில், செல்லம்மா பாரதி கூட வந்து இருந்து நடத்திய வாழ்வில், நேர்ந்த அனுபவங்கள் பல. அவ்வப்போது அவர்களின் ஊடலுக்குப் பணத் தேவையும் காரணமாய் இருந்தது. உணவோடு சேர்த்து, பசியையும் அவர்கள் பரிமாறிக் கொண்டனர். அதுமாதிரியான நாட்களில் ஒருநாள் தர்மாலயத்திற்கு வந்து நாகசாமியுடன் பாரதி தங்கியிருந்ததும் உண்டு.

★

'இன்று பிக்ஷை (உணவு) இங்கேதாண்டா' என்று சொல்லி, காலையில் தர்மாலயத்திற்கு வந்த பாரதியை உபசரித்த நாகசாமி, "நான் ஹோட்டலுக்குப் போகிறேன். உங்களுக்கு என்ன வாங்கிவரட்டும்?" என்று கேட்கிறார்.

உடனே, "காபி மட்டும் வாங்கி வா. வேறு எதுவும் எனக்குத் தேவையில்லை" என்று பாரதி சொல்லியிருக்கிறார். ஆனால், நாகசாமி காபியுடன் ஒரு நெய்த்தோசையும் வாங்கிவந்து கொடுக்க, பாரதியார் தோசையை மகிழ்ச்சியுடன் சாப்பிட்டுவிட்டு காபியை அருந்தியிருக்கிறார்.

அவ்வளவு பசி. 'காபி மட்டும் போதும்' என்று சொன்னது ஒரு பேச்சுக்கு.

செல்லம்மாவுடன் ஊடல் கொண்டு வந்துவிட்ட பாரதிக்கு அன்று அங்கேயே உணவு சமைத்துப் பரிமாறினார் நாகசாமி. சாப்பிடும் வேளையில், குள்ளச்சாமியும் வந்து உண்டு கிளம்பிவிட, பாரதி சற்றே படுத்துறங்கி எழுந்து, "நான், இன்று வழக்கத்துக்கு மேல் அரை பங்கு கூடவே, சாப்பிட்டேண்டா. அப்பாடா வீட்டில் இன்று காலையில் ஏற்பட்ட கவலையும் ஒருவாறு நீங்கிற்று. சிறிது நிம்மதியாகவும் இருந்தேண்டா. ஆனால், செல்லம்மாள் என்ன செய்தாளோ? அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது" என்று சொல்லிக் கிளம்பியிருக்கிறார்.6

ஊடலைத் தீர்க்கும் உணவைத் தந்த நாகசாமிக்கும், அவர் ஒத்த அன்பர்களுக்கும் அப்போதைக்கப்போது உணவு வாங்கிக் கொள்ள வசதியாய், நடேசய்யர் ஓட்டல் இருந்து வந்திருக்கிறது. அது அந்த நாளில் புதுவையில் இயங்கிய பிரபல்யமான ஓட்டல். அதுபோல், பாரதி தன் நண்பர்களுடன் சென்று உணவருந்திய மற்றொரு ஓட்டல், திருச்சி மாடல் ஓட்டல். பிந்தைய ஓட்டலின் சாப்பாடு சலித்துப்போய், பாரதி கட்டளையிட்டதற்கிணங்க, வில்லியனூரில் நண்பர்கள் புடை சூழச் சென்று நிலாச் சோறு சாப்பிட ஏற்பாடு செய்தவரும் நாகசாமியே.

பசிக்கும் ருசிக்கும் அப்பால் நாட்டு விடுதலை ஒன்றே இவர்களின் நாட்டமாக இருந்தது. அதனால் அவர்கள் பட்ட தொல்லைகள் பலவாய் அமைந்தன.

"எங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் இழைத்த தொந்தரவுகள் இவ்வளவுதான் என்று சொல்ல இயலாது. தபால் காரியாலயம் மூலம் எங்களுக்கு எதுவும் கிடைக்கவிட்டதில்லை. அப்படியே தவறி ஏதாவது, பறிமுதல் செய்து வந்தார்கள். புதுவைவாசிகளிடம் தேசபக்தர்கள் பேசினால், உடனே அவர்களிடம் சி.ஐ.டி. சென்று அவர்களை பயமுறுத்திப் பேசாமல் செய்துவந்தார்கள். அப்படியும் அவர்கள் மீறிப் பேசினால், பிரிட்டிஷ் எல்லைக்குள் சென்றபொழுது அவர்களைக் கைது செய்து இம்சித்து வந்தார்கள்.... தேசபக்தர்கள் தனியே அல்லது சேர்ந்து வெளியே சென்றால் சி.ஐ.டி. சிறிது தூரத்தில் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் எங்கெல்லாம் போனார்கள், யார் யாரைக் கண்டு அவர்கள் பேசினார்கள் என்று சி.ஐ.டி. கவனித்து வந்தார்கள்"[7]

என்று பொதுவாய் எழுதும் நாகசாமி, சிறப்பான ஒரு நிகழ்வைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அது நாம் முன்னர்க் குறிப்பிட்ட ஓட்டல் பற்றியது.

"அந்நாளில் புதுவையில் நடேசய்யர் காபி ஓட்டல் மிகவும் பிரசித்தி பெற்றது. அதல் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நான் சிற்றுண்டி சாப்பிட்டு வந்தேன். சி.ஐ.டி. நடேசய்யரிடம் சென்று காபியில் தாங்கள் கொடுக்கும் மயக்க மருந்தைக் கலந்து எனக்குக் கொடுக்கச் சொன்னார்கள். என்னை மயக்கத்திலேயே பிரிட்டிஷ் எல்லைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, நடேசய்யருக்கும் தக்க வெகுமதி தருவதாய்ச் சொல்லி ஆசை காட்டினார்கள். இம்மாதிரி காரியத்துக்கு வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள். என்னிடம் வராதீர்கள் என்று தைரியமாய்ச் சொல்லிவிட்டார் நடேசய்யர். நடேசய்யர் உடனே என்னை அழைத்து,சி.ஐ.டி. இவ்வாறெல்லாம் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு என்னை ஜாக்கிரதையாய் இருக்க எச்சரித்தார்."[8]

அது எவ்வளவு பெரிய தியாகம்? உண்டி கொடுத்த நடேசய்யர் உயிரும் காத்திருக்கிறாரே?

இன்றைக்கும் புதுவை நகரில் சைவ உணவு தேடி, ஓட்டலுக்குப் போகிறபோது, நடேசய்யரின் காபி ஓட்டலே நினைவுக்கு வருகிறது. அவரும் அவர் நடத்திய ஓட்டலும் இப்போது இல்லை. ஆனால், பாரதி வரலாற்றில், நாகசாமியின் பதிவில் அவர் எப்போதும் இல்லாமல் இல்லை.

**சான்றெண் விளக்கம்**

1. மணிமேகலை- பாத்திரம் பெற்ற காதை-96.
2. புறநானூறு-18.
3. பாரதியார் கவிதைகள், முரசு- 30.
4. குமரகுருபரர், நீதிநெறிவிளக்கம்- 52.
5. புதுவையில் தேசபக்தர்கள், பக்.35-36.
6. மேலது, பக்.17-19.
7. மேலது, ப.53.
8. மேலது, ப.54.

**துணைநின்ற நூல்கள்**


1. குமரகுருபரர் நீதி நெறி விளக்கம்
2. பாரதியார் கவிதைகள்
3. புதுவையில் தேசபக்தர்கள், சாரதி பதிப்பகம், சென்னை, மு.ப.1966.
4. புறநானூறு
5. மணிமேகலை


●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



# தமிழிலிருந்து தமிழியல் நோக்கிய பயணம்

போரின் வடுக்கள்... தீய்ந்துபோன விழுப்புண்கள்... காணாமல் போதல்கள்... உடல் ஊனமுறுதல்... இழப்பின் துயர் தரும்வலி... போரிலிருந்து மீண்டெழ முடியாதபடியான போர்ப்பொருளாதாரச் சம்மட்டி அடிகள்... மேற்கிளம்பி எழமுடியா விழுதல்கள், நிமிர்தல்கள் என, ஈழத்துமண்ணில் பயணம் மேற்கொண்டது குறித்து வழக்கமான ஒரு பயணக் கட்டுரையைப் போல எழுத முடியாத ஆதங்கமும் நெருடலும் இந்தக் கட்டுரையில் மையம் கொண்டிருப்பதைத் தவிர்க்கத்தான் முடியவில்லை.

19.03.2025 முதல் 31.03.2025 முடிய 11 நாட்கள் கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஒழுங்கு செய்திருந்த, கல்விசார் களப்பயணத்தில் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்யப் போகிறோம் என்கிற பெருமிதத்தில், நாங்கள் அமர்ந்திருக்க, இண்டிகோ விமானம் தன் சிறகை விரித்துப் பறந்தது... பத்தாண்டுகளுக்கு முன்பு போரின் குரூரமான உடனடி அழிமானங்களும் வீழ்ச்சிகளும் மரணமுறும் காலத்தின் கெடுவாய்ப்புகளும் புடைசூழ அமைந்த; வழிநெடுக பெருஞ்சோதனையின் அல்லற்பாடுகளை எதிர்கொண்ட அந்தப் பயணத்திலிருந்து ஒரு தசாப்தம் கடந்து இப்போது பயணிக்கிறோம்.



பேரா. தெ.வெற்றிச்செல்வன்

கட்டுநாயக்கா விமானத்தளத்தில் எதிர்கொண்டு வரவேற்றனர், கொழும்பு தமிழ்ச்சங்க இலக்கியப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் ஊடகர் மதுசூதனன் மற்றும் ஆசிரியர் சேந்தன் ஆகியோர். நீண்ட காலத்துக்குப் பிந்தைய சந்திப்பின் நெகிழ்வுகளும் பார்த்தவுடன் தகவல்களைப் பரிமாறிக் கொட்டித்தீர்க்கும் ஆவலாதிகளும் ஆட்கொள்ளப் பயணம் நெடுகப் பேசிக்கொண்டே கொழும்புத் தமிழ்ச்சங்கம் சென்றடைந்தோம். அன்றைய நாள் இரவு ஓய்வுக்குப் பிறகு, எங்களுடைய முதல் நிகழ்வாக மலையகப் பயணம் அமைந்தது.

வழக்கமாக இலங்கைக்குப் போகிறவர்கள், யாழ்ப்பாணம் கொழும்பு இப்படி மையங்களை நோக்கிப் பயணிப்பார்கள் என்பதிலிருந்து விடுபட்டு, விளிம்பு நிலையான மலையகத்தில் எங்கள் நிகழ்வைத் தொடக்க நிகழ்வாக, கொழும்புத் தமிழ்ச்சங்கம் அமைத்துக் கொடுத்ததென்பது தனிச் சிறப்பு. கொழும்பிலிருந்து மலையகத்திற்கு எங்களோடு எழுத்தாளரும் மேனாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மல்லியப்பூ சந்தி திலகர், வழிநெடுக மலையகத்தின் ஆற்றாமைகளை; மலையகப் பிரதிநிதித்துவப்படுத்தலில் இருக்கிற விடுபாடுகளை; இன்றைக்கு இருக்கிற அரசியல் சமூகப் பொருளாதாரச் சூழல்களை... ஈழத்துப் போருக்குப் பிந்தைய போர்ப் பொருளாதார வாழ்வியல் நெருக்கடிகளை என, எல்லாவற்றையும் பேசியபடியே வந்தார்.

20-03-2025 அன்று விடியலில் புறப்பட்டு, மூன்று மணியளவில் நாங்கள் போய்ச் சேர்ந்த இடம் மலையகத்தின் பதுளைத் தோட்டப்புறப் பள்ளிக்கூடம் ஒன்றின் அரங்கு. அங்கேதான் முதல் பொழிவாக பேராசிரியர் வீ.அரசு பாடத்திட்டத்தின் பழமைவாதப் போக்கிலிருந்து புதிய திசைவழிகளைச் சுட்டிக் காட்டும் உரை ஒன்றை விரிவாக நிகழ்த்தினார். தமிழ் என்கிற ஒரு நிலையிலிருந்து தமிழியல் என்கிற பல்பரிமாண நிலையில் பாடத்திட்டத்தை வடிவமைப்பதற்கு மொழி வரலாறு, இலக்கியம்-இலக்கணம், சமூகவரலாறு, ஊடகவரலாறு, பண்பாட்டுவரலாறு என்கிற பல கூறுகளில் இருந்து இலக்கியக் கல்வியை, குறிப்பாக ஆசிரியர் பயிற்சியில் ஆசிரியர்கள் பெறவேண்டிய மேன்மையான கல்வி அருமைப்பாடுகள் குறித்த விரிவாக உரையை நிகழ்த்தினார். வழக்கமான நிர்வாக இடர்கள், புதிய மாற்றங்களை மேற்கொள்வதற்கான அனுமதி பெறுவது சார்ந்த இடர்பாடுகளை ஆசிரியர்கள் பெரிதும் பகிர்ந்து கொண்டார்கள். அப்போது குறுக்கிட்ட பேராசிரியர் வீ. அரசு, இப்படி எல்லாம் இடர்பாடுகள் இருக்கத்தான் செய்யும். ஆனால், புதியன செய்ய விரும்புகிறவர்கள் வாளாவிருந்து விடமுடியாது. பொருளாதார நெருக்கடிகள் இருக்கின்றன. ஆசிரியர் பணியிடப் பற்றாக்குறைகள் இருக்கலாம். பாடத்திட்ட மாறுதல்களைப் பெறுவதற்கான அனுமதிகளில் இடர்பாடுகள் ஏற்படலாம். எல்லா நெருக்கடிகளுக்கு மத்தியிலும்தான் நாம் கடமையாற்ற வேண்டியிருக்கிறது. வழக்கமான ஒப்பளிக்கப்பட்ட பாடத்திட்டம் என்கிற ஒரு சட்டக முறைமையில் மட்டுமல்லாது, ஒரு புதிய / ஆகச்சிறந்த / தேவையான நவீன மாற்றங்களுக்கு உட்பட்ட ஒரு பாடத்திட்ட முறைமையை மனதிற்கொண்டு மாணவர்களுக்குப் புதியன புகுத்தலாம் என்று முடித்தார். பிறகு பேச அழைக்கப்பட்டபோது, நவீன கற்கைநெறி சார்ந்த ஊடகப் பயன்பாடுள்ள மாற்றுத்திரை முயற்சிகளை, குறிப்பாகக் குறும்படங்கள் ஆவணப்படங்கள் சிலவற்றைத் திரையிட்டு, இவற்றைக் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்துவது குறித்ததான தலைப்பில் என்னுடைய உரை அமைந்தது. ஸ்மார்ட் கிளாஸ் எனப்படுகிற திறன்மிகு வகுப்புகளில் இதுபோன்ற காணொளிக் காட்சிகள், மாற்றுத்திரை முயற்சிகளைப் பயன்படுத்துவது கற்போரால் வெகுவாக விரும்பப்படும். தவிரவும் ஆசிரியர்கள் பெரிதும் குறைபட்டுக் கொள்வதுபோல, திறன்பேசிகள் கைக்கு வந்துவிட்ட பிறகு; மடிக்கணினிகள் மாணவர்களுக்கு வந்துசேர்ந்துவிட்ட பிறகு, அது சார்ந்த ஈர்ப்பில் அவர்கள் படிப்பதில் சுணக்கம் காட்டுகிறார்கள். அல்லது பொழுதழிப்பாக மாறுகிறது என்கிற ஒரு முகச்சுழிப்பை மாற்றி, அந்த ஊடகங்களின் வாயிலாகவே கற்றல் கற்பித்தலின் அனுகூலமான நல் வாய்ப்புகளை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது குறித்துத்தான் நாம் யோசிக்கவேண்டும்.

கோடியக்கரை எனும் தமிழகத்தின் கடைக்கோடி ஊரில் மாடுகளின் தோலில் உரிமையாளரின் பெயரைச் சூடுபோட்டுக் காடுகளில் கொண்டுபோய் விட்டுவிடுவதைப் போல (பிறகு கறவைக் காலத்தில் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வருவார்கள்) மலையகம் வந்த தமிழர்களைக் கால்நடைகள்போல் நடத்தி, செங்கொட்டைகளால் அடையாளச் சூடுபோட்ட வரலாற்றையும், மலையகத்திலிருந்து நெருக்கடி

தாங்காமல் ஓடிப்போகிற ஆண்களை மரத்தில் கட்டிவைத்து உதைப்பதும், அதுவே ஓடிப்போவது பெண்களாயிருந்தால் கோணிச்சாக்கிற்குள் கழுத்துவரை ஓடிப்போன பெண்ணை அடைத்துவைத்து உள்ளே பூனை விடப்பட்டு சித்திரவதைப்பது போன்ற கொடுமைகளைத் தோலுரிக்கும் எனது 'பெண்ணென்றால்' ஆவணப் படத் திரையிடலுடனான எனது உரை அமைந்தது. கல்லிலிருந்து நார் உரிப்பது போன்றது, தமிழ்ச் சமூகவரலாறு எழுதுவது என்பார்கள். எனில் மலையிலிருந்து நார் உரிப்பது போன்ற வாழ்வியல் அறைகூவல்களின் பின்னணி சார்ந்த மலையகம் இன்று எழுந்து நிற்கிறது என்று என்னுடைய உரையை நிறைவு செய்தேன்.

அடுத்தநாள் நாங்கள் சென்றடைந்த இடம், இலங்கை மலையகத்தின் கொட்டகல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. அங்கும் இதேபோன்ற பொழிவுகளை நாங்கள் நிகழ்த்தினோம். வலதுசாரித் தாக்குதல்களில் இருந்து தப்பிப் பிழைக்க வேண்டிய அறிவிக்கப்படாத நெருக்கடி நிலைக் காலமாக இருக்கிற இந்தக் காலத்தில் மிகக்கவனமாக சமயச்சார்பற்ற தமிழ் மொழியின் மேன்மைகளை தலைமுறைகள் கடந்து, கொண்டுசெல்லவேண்டிய பாங்குகள் குறித்து, பேராசிரியர் வீ.அரசு அவர்களும், பாடத்திட்ட நவீனமாக்கல்; நவீன கற்கைநெறி சார்ந்த முறைமைகள்; பண்பாட்டு மேலாதிக்கங்களை உடைத்துக்கொண்டு முன்னேறுகிற பாய்ச்சல்கள் போன்றவற்றை நானும் என, எங்களுடைய பொழிவுகளைக் கட்டமைத்துக் கொண்டோம்.

அன்றைய இரவு மலையகத்தில் தங்கி, அடுத்தநாள் எங்கள் வாகனம் பயணத்தைத் தொடர்ந்தது. கவிஞர் சு.முரளிதரன் வீட்டில் விருந்தோடு ஏராளமான நூல்களை வாரி வழங்க, வழிநெடுக மலையக ஆசிரியர்களைச் சந்தித்ததும் அவர்களுடைய நெருக்கடிகள் குறித்து மனம்விட்டுப் பகிர்ந்ததும் அதுசார்ந்த தீர்வுகளை எடுத்துவைத்ததுமான நினைவுகளை அசை போட்டபடி மலைத்தோட்டச் சரிவுப்பாதையில் எங்கள் வாகனம் கொழும்பு நோக்கிப் பயணித்தது.

2. 22-03-2025 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பேராசிரியர் சு.வித்தியானத்தன் நூற்றாண்டு விழாவுக்கான சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டிருந்த பேராசிரியர் வீ. அரசு சிறப்புரையாற்றினார். ஈழத் தமிழ்ப் பேராசிரியர்களின் செவ்வியல் மரபு குறித்த ஆய்வுகளை மீள் பார்வையாகக் காணும்போது, அவற்றின் பல்பரிமாணங்களை உணரமுடியும். பேராசிரியர்கள் தனிநாயக அடிகள், சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, க.கைலாசபதி, ஆ.வேலுப்பிள்ளை ஆகியவர்களின் செவ்விலக்கிய மரபுகள் குறித்த ஆய்வுகளை உரையாடலுக்கு உட்படுத்த வேண்டும். செவ்விலக்கிய ஆய்வுகள் குறித்த உரையாடலுக்கு தொல்லியல், மரபணுவியல் மற்றும் தொல்லெழுத்தியல், தொல்குடியியல் ஆகிய பிற துறைகள் அடிப்படைகளாக அமைகின்றன. இவற்றின் வரலாறு, சமூக அசைவியக்கம், மெய்யியல் ஆகிய துறைகள் சார்ந்த பதிவுகளை ஈழப் பேராசிரியர்களின் ஆய்வுகளின் மூலமாகக் கண்டறியும் முயற்சி மிக முக்கியமானது.

அடுத்து எங்களுடைய திட்டங்கள்... யார் யாரைச் சந்திக்கப் போகிறோம்? என்னென்ன பேசப் போகிறோம்? என்பதாக அன்றைய இரவு நேரத்தில் ஒரு ஒரு முன்மொழிவை மதுசூதனன் தயாரிக்க, நாங்கள் வந்திருக்கிறோம் என்பதறிந்து, கிளிநொச்சித் தமிழ்ச்சங்கம்... கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகம்... நூலகம். org... கவிஞர் த.மலர்ச்செல்வன் எனப் பல்வேறு தரப்பில் நிகழ்ச்சிகளை வடிவமைத்து இசைவுபெற்று அடுத்தடுத்த கட்டமாக எங்களை அழைக்க ஆர்வம் கொண்டு பணிகளை மேற்கொண்டார்கள்.

தொடர்ந்து, நாங்கள் யாழ்ப்பாணக் கல்வி வலயம் சார்ந்த 130 ஆசிரியர்களுக்குப் பாடத்திட்டப் புதுமைகள், குறிப்பாகத் தமிழ்க் கல்வியை எப்படித் தமிழியல் கல்வியாக பல பரிமாணத் தளத்தை நோக்கி நகர்த்துவது...மொழிவரலாறு, பண்பாட்டுவரலாறு, கலைவரலாறு, சமூகவரலாறு, ஊடகவரலாறு என்கிற பலநிலைகளில் தமிழியல் கல்வியை விரிவான தளங்களில் கொண்டுசேர்ப்பது... புலம்பெயர்ந்தோர் இலக்கியங்களை கவனத்தில் கொள்வது... புதிய போக்குகள் குறித்து அவதானிப்பது என்று, பல தளங்களில் பேரா.வீ.அரசு அவர்களின் உரை அமைந்திருந்தது.

அடுத்து, யாழ்ப்பாணம் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கூட்டம். அதில் தமிழ்ச் செவ்வியல் மறுவாசிப்பு குறித்த விரிவான உரையை நான் நிகழ்த்தினேன். தமிழ்ச் செவ்வியல் என்பது சமயச்சார்பற்ற; அறிவியல் மனப்பான்மை கொண்ட; பிற்பாடு அவைதீகப் போக்குகளின் இசைவான நிலைகள் குறித்த வலிமையான தரவுகளோடு எடுத்துப்பேச

வாய்ப்புக் கிடைத்தது. குறிப்பாக மழை குறித்து வேதங்களில் சொல்லப்படுவதும், சங்கச் செவ்வியல் பனுவல்களில் சித்திரிக்கப்படுவதற்குமான பாரதூரமான வேறுபாடுகள் கொண்ட அறிவியல் பார்வை, தொல்காப்பியம் உலகத் தோற்றக் கதை குறித்த பார்வையைச் சொன்ன அறிவியல் மனப்பான்மை, வடமொழி மேலைத்தேய ஆரிய மொழிகள் போலல்லாது, தமிழ்மொழியின் கட்டமைப்பில் அஃறிணைப் பொருள்களுக்குப் பால் பாகுபாடு கிடையாது என்பதில் , (வடவாரிய மற்றும் ஜெர்மன், பிரெஞ்சு போன்ற மேலை ஆரிய மொழிகளில் பெரிய மேசையை ஆண்பாலிலும் சிறிய பலகையைப் பெண்பாலிலும் குறிக்க வேண்டும்) ஆணாதிக்கச் சிந்தனை அற்ற; அறிவியல் மனப்பான்மை என இவற்றை எடுத்துப் பேச நேர்ந்தது. பேராசிரியர் வீ.அரசு அவர்கள், தமிழியலின் பல்பரிமாண நிலையைச் சுட்டிக்காட்டி, பாடத்திட்டங்களை புதுக்கவேண்டிய செய்திகளையும் வலதுசாரிக் கருத்தாடல்களில் கல்விப்புலங்கள் சாய்ந்து விடாமல் முற்போக்குக் குணாம்சங்களோடு காத்திரமான அறிவியல் மனப்பான்மையோடு எப்படித் தமிழியல் கல்வியைக் கொண்டு சேர்ப்பது என்பது குறித்து மிக விரிவாகப் பேசினார்.

அன்று மாலை ஈழத்து நூல்கள் பலவற்றையும் மின்னூலகமாக ஆக்கித் தரவிறக்கம் செய்து வாசிப்பதற்கும், பார்வை நூல்களாகக் கருதிப் பயன்படுத்துவதற்கும் ஏதுவான மிகப் பெரிய நூலக வலைத்தள அமைப்பான நூலகம். org... சார்ந்த ஒரு கூட்டம். அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் பேராசிரியர் வீ அரசு அவர்கள், தான் சேர்த்திருக்கிற 40 ஆயிரம் நூல்களைக் கொண்ட கல்மரம் வீட்டில் பராமரிக்கப்படுகிற அருமையான நூலகத்தைக் குறித்தும் அதில் மேற்கொண்ட மென்பொருள் சார்ந்த உத்திகள்... குறித்தெல்லாம் பேசியதோடு மட்டுமல்லாமல் நூலகம்.org... அமைப்புக்கென்று சுவடி வாசிப்புப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதாகவும், அவருடைய உரை அமைந்தது.

சுவடிப் பாதுகாப்பு போன்றவற்றில் நாம் எப்படி அனல்வாதப் புனல்வாதப் போக்குகள் மத்தியில் சுவடிகளைக் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். அழிந்தவை எவ்வளவு? மீந்தவை எவ்வளவு? இவற்றிற்கு மத்தியில் தான் நம்முடைய வரலாற்றுக் கருவூலம் தங்கி நிற்கிறது. இந்த வரலாற்றைத் தொடர்ந்து பேண, பாதுகாக்க மின் நூலகம் பயன்படுகிறது; என்னுடைய நூலும் இதில் இடம்பெற்று இருப்பது என்கிற அடிப்படையில் நன்றி உணர்ச்சியோடு நான் பேசுகிறேன் என்று என்னுடைய உரையில் குறிப்பிட்டேன். அதோடு கூடவே, இந்த நூலகம் உலகு தழுவிய தமிழ் நூலகமாகவும், அச்சு ஊடகம் மட்டுமல்லாமல் காட்சி ஊடக / மாற்றுத்திரை சார்ந்த குறும்பட ஆவணப்படங்களைச் சேகரித்து அவற்றின் நூலகமாகவும் விரிவு பெற வாழ்த்து தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்தேன்.

அடுத்து எங்கள் பயணம் கிளிநொச்சித் தமிழ்ச்சங்கத்தை நோக்கித் தொடர்ந்தது. கிளிநொச்சித் தமிழ்ச்சங்கத்தில் பேராசிரியர் சு.வித்யானந்தன் நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டது. அந்த நூற்றாண்டு விழாவில், பேராசிரியர் வீ.அரசு, சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு முதன்மை உரை ஆற்றினார். சு.வி.யின் நாட்டுப்புறப் பாடல்கள் தொகுப்பு முயற்சிகள், அவரது தமிழர்சார்பு நூல் உருவாக்கம், அவற்றையெல்லாம் தாண்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக அவர் பணியாற்றி தமிழ்க் கல்விப்புலத்தை மேன்மைப்படுத்தியது, இப்படியான பல தளங்களில் சு. வித்தியானந்தன் அவர்களுடைய பங்களிப்பைப் பற்றி விரிவாகப் பேசியதோடு, விபுலானந்தர், சு.வித்யானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி, ஆ.வேலுப்பிள்ளை, வி. செல்வநாயகம் போன்ற ஈழத்து அறிஞர் பெருமக்களை நினைவு கூர்ந்து தமிழ்நாட்டிற்கு வளம்சேர்த்த அந்த அறிவுப்பரம்பலின் தாக்கம் காரணமான நன்றி உணர்வோடு அவர் பொழிவாற்றினார். குறிப்பாக சு. வித்யானந்தன், நாட்டுப்புறக் கலைகள் சார்ந்த, நாடகம் சார்ந்த பங்களிப்புகளுக்கு எல்லாம் எவ்வாறு செயலாற்றினார்? அவருடைய கல்விப்புலம் சார்ந்த பங்களிப்பு எவ்வாறு விரிவாக அமைந்தது? என்பனவெல்லாம் குறித்தும் அவர் உரை நீண்டது. என்னுடைய உரையில் சு.வித்யானந்தன் தான், ஈழத்துத் தமிழ் அறிஞர் பெருமக்களிடத்தில் மிக அதிகமாகத் ‘திராவிட’ என்கிற சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார் இது ஒரு தனித்துவச் சிந்தனை என்பதைக் குறிப்பிட்டு நேரத்தின் அருமை கருதி அங்கே மிகச் சுருக்கமாகப் பேசினேன்.

இந்த உரைகளைத் தொடர்ந்து, கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் அளித்த வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுக்கொண்டு தொடர்ந்து

எங்களுடைய பயணம் மட்டக்களப்புத் தமிழ் வலய ஆசிரியர் சந்திப்பு என்கிற நிலையில் ஆசிரியர்களுக்கான கற்கைநெறி புத்தாக்கம் குறித்த உரையாடலாக அமைந்தது. மட்டக்களப்பிலிருந்து ஆசிரியப் பெருமக்கள் மத்தியில் தமிழில் கற்கைநெறி சார்ந்த விரிவான பார்வைகளையும், பாடத்திட்ட புத்துருவாக்கம் குறித்தும் பேராசிரியர் வீ. அரசு உரை நிகழ்த்த, மாற்றுத்திரை சார்ந்த முயற்சிகள் கற்கை நெறி சார்ந்த அவற்றினுடைய தாக்கங்கள் இவை குறித்தும் அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு குறித்தும் என்னுடைய உரை அமைந்தது.

**ஒரு பனை இரண்டு பாளை**
**ஒன்று நுங்கு ஒன்று கள்ளு**
**அறிவினில் அறிந்தபேர்க்கு**
**அதுவும் கள் இதுவும் கள்ளே**
**பறையனை இகழ்வதேனோ**
**பாய்ச்சலூர் கிராமத்தாரே"**

உள்ளிட்ட பாய்ச்சலூர்ப் பதிகம், பாடுதுறை, ஆவுடையக்காள் பாடல் திரட்டு எனத் தமிழ் மரபில் அதிகம் புழங்கப்படாத; அரிதான; அறியப்படாத தமிழிலக்கிய வரலாற்றை முன்வைத்த உரை அது.

மாலை வேளையில் கல்விப்புலத்திற்கு வெளியேயான, தோழர் ரவீந்திரன் வீட்டில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கிற அருமையான நூலகத்தின் மாடியில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்ட அரங்கில், எங்களுடைய உரைகள் அமைந்தன. குறிப்பாகப் பேராசிரியர் வீ.அரசு அவர்கள் இன்றைக்கு, ஈழத்துப் புலமைமரபு நாங்கள் பார்த்து வியந்த நிலையிலிருந்து சற்று தளர்ச்சி அடைந்திருக்கிறதா? அதை எப்படி மீண்டும் எழுச்சிகரமானதாக மாற்ற வேண்டும்? ஈழத்து அரசியல்சூழல் எப்படி போய்க்கொண்டிருக்கிறது? இடதுசாரிகளின் போக்குகள்... ஈழத்து இடதுசாரிகள் தளர்ச்சி அடைந்த பின்புலச் சூழல்கள்... அதிலிருந்து எப்படி மீண்டு வருவது என்பதான அவதானிப்புகள்... இந்தியச் சூழலில் இருந்து, வலதுசாரிச் சிந்தனைப் பரவலாக்கமும் ஈழத்தை நோக்கி பாய்ந்து வந்து விடுவதற்கான அபாயகரமான போக்குகள் நிலவுகின்ற இக்கட்டான சூழலையும் அவற்றிலிருந்து தங்களுடைய தனித்தன்மையைப் பேணுவது... சமயச்சார்பற்ற தமிழ்மரபைக் கட்டிக்காப்பது போன்ற விடயங்கள் குறித்தும் பேராசிரியர் வீ.அரசு அவர்களுடைய விரிவான உரை அமைய, சமஸ்கிருதப் பண்பாட்டுக் காலனியாதிக்கம், அதிலிருந்து தமிழகத் தமிழ்ச்சூழல் விடுபட்டதற்கான போராட்டம் குறித்த பார்வைகள், அதனுடைய முற்போக்குப் பாத்திரம் இவை குறித்து, என்னுடைய உரை அமைந்தது. சமஸ்கிருத பண்பாட்டுக் காலனி ஆதிக்கம் இந்தியத் தமிழ்ச்சூழலில் எங்களுக்குக் கூடுதலான சுமையாக அமைந்தது. எடுத்துக்காட்டாக இலங்கை ஒல்லாந்தர் ஆதிக்கம் பொருளாதார அரசியல் காலனி ஆதிக்கம் அதன் பிறகு சுதந்திரப் போராட்டம் என்று ஒரு ஒற்றைத் தன்மையான போராட்டத்தை சந்தித்ததென்றால், இந்தியத் தமிழ்ச் சூழலில் நாங்கள் அரசியல்ரீதியான பொருளாதாரரீதியான காலனியாதிக்கத்தைப் போராடிக் கடந்துவிட்டபோதிலும், சமஸ்கிருதப் பண்பாட்டுக் காலனி ஆதிக்கம் எங்கள்மீது கவிந்து கனத்த படுதாக்களை; கனத்த போர்வைகளை; கனத்த சுவர்களை எங்கள்மீது அழுத்திக்கொண்டிருக்கிற சூழலிலிருந்து நாங்கள் எப்படி மேற்கிளம்புகிறோம்? அது சார்ந்த போராட்டங்களை எப்படி முன்னெடுக்கிறோம்? அதனுடைய வளர்நீட்சியாக இன்றைய வாழ்வியல் எப்படி மாறியிருக்கிறது? இன்றைக்கு, சமூகநீதி எவ்வாறு நிலைநாட்டப் பட்டிருக்கிறது? என்பதான விரிவான பார்வைகளை முன்வைத்து என்னுடைய உரையை நிகழ்த்தினேன். பிறகு நல்ல கலந்துரையாடலும் நடைபெற்றது.

மேலும், "இன்று மாலை (25.03.2025) சத்தியமனை நூல்நிலையத்தில், பேராசிரியர் வீ.அரசு, பேராசிரியர் தெ.வெற்றிச்செல்வன் ஆகியோருடனான கலந்துரையாடல் இடம் பெற்றது. மதம், சாதியம், இந்திய மேலாதிக்கம் ஆகியவை யாழ்ப்பாண தமிழர்களிடையே தற்போது செலுத்தும் தாக்கம், யாழ்ப்பாணச் சைவர்களின் கிராமியத் தெய்வவழிபாட்டு இடங்கள் ஆகம ஆலயங்களாக மாற்றப்படுதல் ஆகிய தலைப்புகளில் சுவாரசியமான, விறுவிறுப்பான கலந்துரையாடல் நடைபெற்றது. தமிழகத்திற்கு நாம் சென்று அங்கு பத்தோடு பதினொன்றாக எமது கருத்துகளைச் சொல்லி வருகின்ற தற்போதைய காலகட்டத்தில், தமிழக அறிஞர்களை இங்கு அழைத்து, எமது பிரச்சனைகள் என்ன? எமது எண்ணக்கருக்கள் என்ன என்பதை இரத்தமும் சதையுமாகச் சொல்லக்கூடியதாக இந்நிகழ்வை ஏற்பாடு செய்த திரு மதுசூதனன், சத்தியமனை நூலகத்தைச் சேர்ந்த ரவீந்திரன் நடேசன், பூபிரவி ஆகியோரின் முயற்சி பாராட்டப் படவேண்டியது.'' என வடகோவை வரதராஜன் அவர்களின் பின்னூட்டமும் பகிரப் பட்டிருந்தது. இந்த உசாவல்களும் பின்னூட்டங்களும் எமக்கு மிகவும் உவப்பாக அமைந்ததோடு தொடர் பணிகளுக்கான உந்துசக்தியாகவும் அமைந்தன எனலாம்.

இதைத் தொடர்ந்து, கவிஞர் த.மலர்ச்செல்வன் ஒழுங்குசெய்த மட்டக்களப்பு மைய நூலக உரையரங்கு, கிழக்குப் பல்கலைக்கழகம் ஒழுங்குசெய்த உரையரங்குகள் முக்கியமானவை. சு. வித்யானந்தன் நூற்றாண்டு நிறைவுவிழாவை ஒட்டிய அவரது அரங்கச் செயல்பாடுகள் குறித்த பார்வைகள், விபுலானந்தர், கைலாசபதி, சிவத்தம்பி, வேலுப்பிள்ளை, செல்வநாயகம் போன்ற ஈழத்துப் புலமை மரபின் தொடர்ச்சியாக இன்றைக்கு நாங்கள் எப்படி செம்மாந்து நிற்கிறோம் என்பது குறித்த, ஒரு விரிந்த ஆற்றொழுக்கான உரையைப் பேராசிரியர் வீ. அரசு வழங்கினார். விபுலானந்தர் நுண்கற்கைகள் துறையில் உரையாற்ற அவர் விரைந்த பிறகு, எனது உரை தொடர, தமிழ்ச்சித்தம் என்பது ஒரு சிந்தனை மரபாக, மருத்துவ மரபாக, பகுத்தறிவு மரபாக, அவைதீக மரபாக, தமிழ்ச்சூழலில் உருவாகி வளர்ந்ததும், அதற்கு மூல முன்னோடியாக தமிழ்ச் செவ்வியல் அமைந்ததும், ஐந்து பொறிகளால்தான் (பஞ்சபூதங்கள்) உலகம் தோன்றியது எனும் அறிவியல்பார்வை தொல்காப்பியத்தால் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சித்தமருத்துவத்தில் நாடிபிடித்து ஐந்து பொறிகளில் எதன் தாக்க மிகுதியால் நோய் உருவானது என, நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி நோய்தீர்க்கிற அறிவியல் மனப்பான்மை, கோள்களின் இயக்கம் குறித்த பார்வைகள், இயற்கை சார்ந்த நுட்பமான அவதானிப்புகள்... என்று பல நிலைகளில் சங்கத்தமிழர் வாழ்வியல் குறித்த உரையாக என்னுடைய உரை அமைந்தது.

இப்படி, தொடர்ச்சியான உரைகளுக்குப் பிறகு 29.3.2025 அன்று மலையக எழுத்தாளர் தவச்செல்வனின் ‘சிங்கமலை’ சிறுகதை நூல் வெளியீட்டு ஆய்வுரை நிகழ்த்தினோம். மலையகம் சார்ந்த வாழ்வியல் குறித்து தவச்செல்வன் எப்படி ஒரு முன்னோடி எழுத்தாளராக சிறந்த படைப்பாளியாக விளங்குகிறார்? அவருடைய எதார்த்தமான பார்வை, படைப்பு நுட்பம் இவை மிக லாவகமாக அமைந்த புலப்பாட்டுத்திறன் இவற்றின் ஊடாக அதைக்கடந்து அடுத்த நிலைக்கு வளர்வதற்கான தேடல்கள் இவை குறித்து எல்லாம் பேராசிரியர் வீ.அரசு அவர்களும் நானும் உரைகள் நிகழ்த்தினோம்.


மலையகத்துக்கு என்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்பதைக் கொழும்பு தமிழ்ச்சங்கம் போன்ற அமைப்புகள் முன்னெடுத்து அதைக் கொண்டுவரவேண்டும். மலையக இலக்கியங்கள், மலையகக் கலைகள், மலையகம் சார்ந்த பார்வைகளை இன்னும் கூர்மையாக ஈழத்தில் வாசிக்கப்படவும் வளர்க்கப் படவும் முன்னெடுப்புகள் முகிழ்க்கவேண்டும் என்பதான பார்வைகளை முன்வைத்து, பேராசிரியர் வீ.அரசு அவர்களும் மலையகப் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும் என்கிற அவாவை வழிமொழிந்து என்னுடைய உரையும் அமைந்தது. அதோடுகூட தமிழ்நாட்டுத் தமிழ்ச்சூழலில் மறைமலை அடிகள் போன்றவர்கள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம் போன்ற அமைப்புகள் ஈழத்திலும் தேவைப்படுகிற அளவுக்கு ஈழத்துத் தமிழில் அதீதமான அளவுக்கு வடமொழிப் புழக்கம் இருக்கிறது. ஈழத்தமிழ் வடமொழியிலும் மணிப்பிரவாளத்திலும் மூழ்கடிக்கப்பட்டுவிடுமா என்று ஐயுறும்படியான கலவைமொழிப் பயன்பாடு கவலை அளிக்கிறது. ஈழத்துப் புலமை மரபை மெச்சி அதன் மேன்மைகளைப் பயின்று வளர்ந்தவர்கள் நாங்கள். எங்களுக்கு அந்தக் கவலை இருப்பது நியாயமானது. எனவே, இதைக் களைவதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகர்கள், கலைஞர்கள், அரசியலாளர்கள், வணிகர்கள், வெகுமக்களுக்கான போதுமான புலமைத்துவமும் பயிற்சிகளும் கலைச்சொல்லாக்கத் தேவையும் இயன்றவரை நல்ல தமிழில் மொழிப் புழங்காற்றலை வளர்த்தெடுக்கவுமான பார்வைகளை முன்வைத்து என்னுடைய உரை அமைந்தது.

மிகுந்த உடலியல் நெருக்கடிகளோடு இரண்டு பேராசிரியர்களும் தமிழ்நாட்டிலிருந்து வந்து இந்த நற்பயன்களை வழங்கியமைக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் நன்றிநவில, நிகழ்வுகள் ஒரு வழியாக நிறைவுற்றன. இந்தத் தேடல்கள்; இந்தப் பயணங்கள்; இதுபோன்ற முயற்சிகள் தொடர்ந்து ஈழத்தமிழ்ச் சமூகத்தைப் போர்ச்சூழலின் அதீதமான பாதிப்புகளில் இருந்தும் பேரிடர்களில் இருந்தும் காப்பாற்றி மீளவும் வாழ்வியல் சார்ந்த ஒரு இயல்பு நிலையைக் கொணர்ந்திங்கு சேர்க்கவேண்டும் என்கிற விழைவோடும் தமிழ்ப் புலமைத்துவச் செயற்பாடுகள் மேம்படவேண்டும் எனும் நம்பிக்கையோடும் விடைபெற, எங்கள் விமானம் புறப்பட்டது...

●

**கட்டுரையாளர்: பேராசிரியர், அயலகத் தமிழியல்துறை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 130/-




₹ 690/-




₹ 330/-




₹ 115/-




₹ 550/-




₹ 400/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in



# திருப்பூர் நகர 28 சிறுகதைகள்



**சுப்ரபாரதிமணியன்**

தமிழகத்தின் பல்வேறு மாவட்டத்தைச் சார்ந்த எழுத்தாளர்களின் கதைகளை மாவட்ட வாரியாக தொகுப்பாக்கி வெளியிட்டு வருகிறார் சேலம் பொன் குமார் அவர்கள். உழைப்பும் பணச் செலவும் கொண்டது. பெருமை கொள்ளத் தக்கது.

இந்தத் திருப்பூர் சிறுகதைகள் தொகுப்பை பொன் குமார் சிறப்பாக தொகுத்து அளித்திருக்கிறார். இந்தத் தொகுப்பை ஆர் சண்முகசுந்தரம் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார் அதைத் தவிர ஆர்.சண்முகசுந்தரம் அவர்களின் நாடக முடிவு என்ற சிறுகதை கூட உள்ளது. அவரின் முத்திரையும் கொங்குப் பிரதேச வாழ்க்கையும் எளிமையான காதல் வாழ்க்கையும் சொல்கிற கதை.

அம்பிகா குமரன் கதை திருப்பூர், சென்னை என்று இரண்டு தளங்களில் பயணப்படுகிறது. குடும்ப சூழ்நிலையில் ஒரு பெண்ணின் திருமண வாழ்க்கை முறையிலிருந்து வெளியேறுவது என்று நுணுக்கமான சில விஷயங்களைக் கொண்டு வந்திருக்கிறார். கடைசியில் அலைகள் வந்து கரைதொட்டுச் செல்லும் என்று அலைகள் வித்யா மனதிலும் ஆர்ப்பாட்டத்தைத்

தொடங்குகிறது. வித்யா கண்ணீரால் கணவனை திட்டத் தொடங்கியிருந்தாள் என்று முடிகிறது. இந்தக் கதை அப்படித்தான் மனதில் அலையாய் வந்து அடித்துக் கொண்டிருக்கிறது.


இத்தொகுப்பில் உள்ள பெண் வலிமையானவள் என்ற கதை எழுதி இருக்கிறார் தீபன். பத்திரிகையாளர், புகைப்படக் கலைஞர் கவிதை தொகுப்பு வெளியிட்டு இருக்கிறார். வழக்கமாக அவருடைய கதைகளில் விளிம்பு நிலை மக்களும் தாழ்த்தப்பட்ட சாதி சார்ந்த மக்களும் இருப்பார்கள். இக்கதையிலும் பெண்களின் வாழ்க்கை பல்வேறு மடங்கு வறுமையும் பாலியல் சீண்டலும் சமூக சூழ்நிலையால் புறக்கணிக்கப்பட்டதும் என்று இருப்பதை பல சம்பவங்கள் மூலமாக காட்டுகிறார். அவரின் தனித்துவத்திற்கு இந்த ஒரு கதை சான்று.

ரத்தினமூர்த்தி அவர்களின் அப்பாவின் நிழல் கதை, திருப்பூர் சூழலை மையமாகக் கொண்டிருக்கிறது. திருப்பூரின் வேலைச் சூழலும் தொழிலாளர்களின் பாதுகாப்பு இன்மை பற்றியும் பேசுகிறது. ஆனாலும் எனக்காக இந்த வாசல் எப்போதும் திறந்து இருக்கட்டும் என்ற நம்பிக்கையோடு முடிக்கிறார். அவரின் ஒரு சிறுகதைத் தொகுப்பு இந்தத் தலைப்பில் உயிர்மெய் பதிப்பகம் வெளியிட்டு இருக்கிறார்கள்

குழந்தைவேல் அவர்களின் படைப்புகள், நாவல்கள் தொடர்ந்து கவனத்தில் கொள்ள வேண்டியவை என்பது முக்கியம். இவர் சமீபமான சில ஆண்டுகளாக சுயநினைவு இல்லாமல் வாழ்ந்து வருகிறார், 80 வயதிற்கு மேல் இருக்கும். ஆனாலும் அவருடைய நாவல்களில் வருகிற வால்பாறை மின் தொழிலாளர் பற்றிய பிரச்சனைகளும், பகுத்தறிவு சார்ந்த நம்பிக்கைகளும் மிகவும் நம்பிக்கை தருவது, இத்தொகுப்பின் கதையைப் போல.

இந்தத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கோதை மணியன், வெண் புரவி, குணசுந்தரி ஆகிய எழுத்தாளர்கள் பெயர்கள் கேள்விப்படாது இருக்கிறது.

கிணற்றில் குதித்தவர்கள் என்ற என்.ஸ்ரீராம் கதை குறிப்பிடத்தக்க கதை. கொங்குப் பகுதி சார்ந்த நிலவியலை மிக அழகாக வழக்கமாக அவர் கதைகளில் கொண்டு வந்து விடுபவர். இந்தக் கதையில் வரும் கிணறு ஒரு படிமமாகவே மனதில் பதிந்து விடுகிறது. அவரின் முத்திரையை அழுத்தமாகப் பதிந்திருக்கும் ஒரு கதை.




**திருப்பூர் சிறுகதைகள் | தொகுப்பாசிரியர் பொன் குமார் | விலை ரூபாய் 300 | வேரல் புக்ஸ் சென்னை - வெளியீடு**

இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் வீடு சுகந்தி சுப்பிரமணியன் கதை, மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தக் கதை வெளிவந்த சமயத்தில் அசோகமித்திரன் அவர்கள் இந்தக் கதை பற்றி குறிப்பிட்டு கடிதம் எழுதி இருந்தார். வெகுவாகப் பாராட்டினார். பெண்ணின் இருப்பும் பாதுகாப்பின்மையும் பற்றி அவர் குறிப்பிட்டிருந்தார். பெண்ணுக்கு வீடு என்பது ஒரு பாதுகாப்பான இடம்; வாடகை வீடு என்பது தவிர்த்து, சொந்த வீடு கனவு என ஒரு பெண்ணுக்கு இருப்பதை இந்தக் கதை சொல்கிறது,

இரா.சிந்தன் சிறுகதை சிறப்பானது. திருப்பூரில் ஒரு மழை பெய்த நாளில் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த பலர் மதுபானக் கடையின் சுவர் இடிந்து விழுந்து இறந்து விட்டார்கள்! அந்த சம்பவத்தை மையமாகக் கொண்டு அந்தத் தொழிலாளர்கள் குடும்பங்களைப் பற்றியும் துயர சம்பவத்தையும் சிந்தன் அவர்கள் இந்தக் கதையில் விவரித்து இருக்கிறார்.

சுப்ரபாரதிமணியன், திருப்பூர் கிருஷ்ணன், கே.என்.செந்தில் உட்பட 28 கதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



# வள்ளிமலை வரலாறும் வழிபாடும் சமண சிற்பங்கள்



வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது வள்ளிமலை என்ற இயற்கை எழில் சூழ்ந்த பகுதி. அந்தக் கிராமத்தில் அந்த சிறிய மலைப் பகுதிக்கு அருகே மிகப்பெரிய குளம், அதை ஒட்டிய பகுதியில் வள்ளியின் கோயில் உள்ளது. வள்ளியின் சிலையில் பறவை, உண்டி வில், கவண்கல் உள்ளது போல அந்த சிற்பம் காணப்படுகிறது. இது தினைப் புனத்தில் பறவைகளை விரட்டுவதற்காக, வள்ளியின் கைகளில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. கி.பி.9ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது, இந்தக் கோயில், முருகனுடைய அறுபடை வீடுகளைக் கடந்த, ஒரு முக்கிய மலைக் கோயிலாக, அந்தப் பகுதியில் உள்ள மக்கள் நம்புகின்றனர்.

மேலும் முருகன், வள்ளியை காதலித்ததை, வள்ளியின் தந்தை நம்பிராஜன் பார்த்து விட்டதாகவும், அதனால் முருகன் வேங்கை மரமாக உரு மாறியதாகவும், அதுவே பின்னாளில் தல விருட்சமாக, இருப்பதாகவும், அந்தப் பகுதியில் உள்ள மக்களால் நம்பப்படுகிறது. மலைக்குக் கீழே உள்ள வள்ளியின் கோவிலில் இருந்து மலை மீது உள்ள வள்ளி, முருகன், தெய்வானை கோவிலுக்கு சுமார் 900 கருங்கல் படிக்கட்டுகளைத் தாண்டி பயணப்பட வேண்டும். சிறிய குன்றின் மீது வள்ளி, முருகன், தெய்வானையோடு இருப்பது போன்ற சிலைகள் உள்ளன. வெளியில் நுழைவு வாயிலுக்கு இடதுபுறம் வள்ளியின் சிலை பெரிய பாறையில் உள்ளது. இங்கே தினந்தோறும் வழிபாட்டிற்காக ஏராளமான மக்கள், பல்வேறு நம்பிக்கைகளோடு வருகிறார்கள். குறிப்பாக



முனைவர் கோ.ஜெயக்குமார்

முருகன் வள்ளி சந்திப்பு, இரவு நேரத்திலே நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அதனால் இங்கு அர்த்த ஜாம பூஜை நடைபெறுகிறது என்று கூறுகின்றனர். குறிப்பாக குறவர் மக்களுடைய உணவான, அவர்களது வாழ்வியலில் அந்தப் பகுதியில் விளையக்கூடிய கிடைக்கக்கூடிய திணை மாவும், தேனும் படையலிடப்படுகிறது.

மலைக்கோயிலில் கொடி மரத்திற்கு எதிரே விநாயகர் சிலை உள்ளது. முன் மண்டபத்தில் நவவீரர்கள், நம்பிராஜன் சிலைகள் உள்ளன. வலது புறம் சென்றால் சற்று தொலைவில் தினைப் புனத்தில், வள்ளி பறவைகளை விரட்டியதாகக் கூறப்படும் பகுதியில், நான்கு கல் தூண்களைக் கொண்ட 5 அடி உயரத்தில் 3 மண்டபங்கள் காணப்படுகிறது. வற்றாத சுனை, வள்ளி மஞ்சள் தேய்த்த இடம், முருகன் நீர் அருந்தியதாகக் கூறும் குமரி சுனை, இந்த சுனை சூரிய ஒளி, சந்திர ஒளி படாத சுனை என்று கூறப்படுகிறது. இங்குதான் வள்ளிக்கு திருமணம் நடந்ததாகவும், யானையாக வந்து விநாயகர், வள்ளியை பயமுறுத்திய சிறிய குன்று யானை போலவே உள்ளதாகவும், இதை யானைக்குன்று என்றும் அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். மேலும் அருணகிரிநாதர் திருப்புகழ் பாடல் பெற்ற தலம் என்ற நம்பிக்கை இம்மக்களுக்கு உள்ளது. வள்ளி தினைப்புனத்தில் முருகனுக்காகக் காத்திருந்ததை அப்பகுதி மக்கள் பாடல் மூலமாகக் கூறுகின்றனர். அந்தப் பாடல் வரிகள்,

**"வள்ளி எனும் மலைக்கிழவி**
**வள்ளிமலைக் காட்டினுள்ளே,**
**வள்ளல் அவன் வருவானெனக் காத்திருக்கிறாள்!**
**சொல்லி அவன் வருவானோ?**
**சொல்ல ஒரு மொழிதானோ?**
**சொல்வார் தான் யாருமின்றி தனித்திருக்கிறாள்!**
**கள்ளி அவள் காட்டினுள்ளே,**
**கள்ளன் அவன் மனதினுள்ளே,**
**கள்ளர் பயமின்றியந்த**
**வேடனுக்காகக் காத்திருக்கிறாள்."**

என்ற பாடல் வரிகள் மூலமாக அந்த சூழலை அவர்கள் விவரிக்கின்றனர். இந்தக் குன்றுகளில் உள்ள ஒரு கால் தடம் வைக்கும் அளவில் உள்ள பாறைகளின் வழியாகக் கீழே இறங்கி வருகிறபோது, தாமரை இலைகளும் பூக்களும் நிறைந்த, மிகப்பெரிய ஆலமரத்தின் கீழே குளம் ஒன்று எழிலோடு உள்ளது. இதனைக் கடந்து பத்தடி தூரத்தில் இடது புறமாக சமணர் குகையும், சிற்பங்களுக்கும் செல்லும் வழிகாட்டி பலகை வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் சிறிய அளவில் கம்பிகள் சார்ந்த வாயில்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

வாயில்களைத் திறந்து உள்ளே சென்றால் கல்வெட்டு ஒன்று தொல்பொருள் துறையால் வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கல்வெட்டில் காணப்படும் ஆதாரங்கள் ' சமணத் துறவிகளுக்கான இந்த தாழ்ந்த குகையில் பல முக்கிய கங்க பாண அரசர்களின் பிரதிமைகளும், கல் படுக்கைகளும், கல்வெட்டுக் குறிப்புகளும் உள்ளன. இதைக் குடைவித்த அரசன் கங்க இராசமல்லன் (816-843 கி.பி.) ஆவான். இவன் கங்க சிவமாறன் (679-725 கி.பி.) பேரனும், ரண விக்கிரமன் மகனுமாவான் என இங்குள்ள ஒரு கல்வெட்டு குறிக்கிறது. பாண அரசனொருவரின் மதகுருவான பவநந்தியின் சிஷ்யையான தேவசேனையின் பதுமையை இங்குக் காணலாம். இதையும் மற்றொரு பதுமையையும் இங்கு ஸ்தாபித்தவர் சமண குரு ஆர்ய நந்தியாவார் என தொல்லியல் துறை கல்வெட்டு கூறுகிறது.

குறிப்பாக கங்கர்குல அரசன் இராசமல்லன் (816-843 கி.பி) பள்ளிச்சந்தம் கல்வெட்டுகள் பிறப்பினால் உயர்வு தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மை சமண சமயத்தில் இல்லை, மேலும், உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி என்னும் நான்கு தானங்களைச் செய்வதை சமணர் தமது பேரறமாகக் கொண்டிருந்தார்கள். சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்களில் பலர் சமண சமயத்திற்கு பல்வேறு உதவிகளை வழங்கி உள்ளனர். அதுபோலவே கங்க அரசன் நன்கொடை கொடுத்து அமைக்கப்பட்டது வள்ளிமலை சமணர் பள்ளி என்பதை இங்குள்ள கல்வெட்டு ஆதாரங்கள் தெளிவாக்குகின்றன.

இக்குன்றின் கிழக்குப் பக்கத்தில் இயற்கையாக அமைந்துள்ள ஒரு திறந்தவெளி குகையின் மேலே சமண உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த சமண உருவங்களின் கீழ் கன்னட மொழியில் சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த எழுத்துக்கள் மூலம் இங்குள்ள குகையில் சமண சிற்பங்களை உருவாக்கியவர் இராசமல்லன் என்ற கங்ககுல அரசன் என்பது தெரிகின்றது.

மேலே உள்ள சமண உருவங்களின் கீழ்ப் பொலியப்பட்டுள்ள எழுத்துக்களில் ஒன்று 'அஜ்ஜ நந்தி பட்டாரர் இந்த பிரதிமையைச் செய்தார்' என்றும்,

இன்னொரு எழுத்தில் ஸ்ரீ பாணராயிரின் குருவாகிய பவணந்தி பட்டாரரின் மாணவராகிய 'தேவசேனபட்டாரரின் திருவுருவம்' என்றும், மற்றொரு வரிசையில் 'பாலசந்திரபட்டாரது

சீடராகிய அஜ்ஜநந்தி பட்டாரர் செய்த பிரதிமை என்று கூறுகின்றன. மேலும் தரையில் காணப்படும் கல் படுக்கைகளில் உள்ள கல்வெட்டுகள் தேய்ந்து காணப்படுகின்றன. சமண சமயத்தில் 23 வது தீர்த்தங்கரராகத் திகழ்ந்தவர் பார்சுவநாதர். இவர் முக்கூடையின் கீழ் அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளது. அந்த சிற்பங்களின் அமைப்பு முறைகளை பார்க்கலாம்.

இந்தப் பகுதியில் காணப்படும் முதல் தொகுதி சிற்பங்கள் வலது பக்கமாகவும், அடுத்த தொகுதிச் சிற்பங்கள் இடது பக்கமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வலது புறத்தில் ஒரே வரிசையாக ஆறு திருவுருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் முதலாவது சிற்பம் மிகவும் சிறியதாகவும், நாலாவது திருவுருவம் பெரியதாகவும் மற்றவை இதைவிட சிறியவையாகவும் உள்ளன. நான்காவது சிற்பம் தீர்த்தங்கரரையும், பிற திருவுருவங்கள் சமண சமய அறவோரையும் குறிப்பவையாகும். இந்த தீர்த்தங்கரர் தியானத்தில் அமர்ந்தவாறு காட்சியளிக்கிறார். இவரது தலைப்பகுதிக்கு மேல் முக்குடை வடிக்கப்பட்டிருக்கிறது. இச்சிற்பம் முதலாவது தீர்த்தங்கரராகிய ஆதிநாதர் எனக் கருதப்படுகிறது. ஆனால் அவருக்குரிய இலாஞ்சனையோ அல்லது இயக்கர், இயக்கியரது வடிவமோ அருகில் இல்லை. பிற சிற்பங்கள் இந்த தீர்த்தங்கரரைப் போன்ற உருவ அமைப்பினைக் கொண்டிருந்த போதிலும், அவற்றின் தலைக்கு மேலாக முக்குடை வடிவம் காட்டப்படவில்லை, இங்குள்ள சாசனங்களும் இவர்களைச் சமண அறவோர் என்றுதான் கூறுகின்றன.

குகையின் இடதுபக்கத்தில் இரண்டாவது தொகுதிச் சிற்பங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன. இவையும் இரண்டு இடங்களில் தனித்தொகுதிகளாக உள்ளன. இடது கோடியில் தீர்த்தங்கரர் சிற்பங்கள் இரு வரிசைகளாக வீற்றிருப்பதைக் காணலாம். முதல் வரிசையில் இரண்டு பார்சுவநாதர் சிற்பங்களும், அதனையடுத்து மற்றொரு தீர்த்தங்கரரும் இடம் பெற்றிருக்கின்றனர். பார்சுவ தேவரின் தலைக்கு மேல் ஐந்து தலைப் பாம்பு படம் விரித்த நிலையிலிருக்கிறது. இரண்டாவது வரிசையில் பார்சுவநாதர் பீடமொன்றில் அமர்ந்தவாறுள்ளார். இவரது தலைக்கு மேல் ஐந்து தலை நாகமும், அதற்கு மேல் முக்குடையும் காணப்படுகிறது. இவரது பீடத்தின் வலப்புறம் மாதங்க யக்ஷன் யானை மீதமர்ந்தவாறும், இடப்புறம் யக்ஷியின் சிற்பமும் சிறியனவாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. (தரணேந்திரனுக்குப் பதிலாக இங்கு மாதங்க யஷன் சிற்பம் காணப்படுகிறது.)

இதற்கு அடுத்து ஸ்ருத தேவியின் திருவுருவம் சற்று பெரிய அளவில் அரை வட்ட வடிவ மாடத்தினுள் அமைக்கப்பட்டிருக்கிறது. இத்தேவி பீடமொன்றில் அமர்ந்தவாறு வலது காலைத் தொங்கவிட்டும், இடது காலைப் பீடத்தில் மடக்கி வைத்தும் காணப்படுகிறது. இந்த சிற்பத்தின் நான்கு கரங்களுள் மேலுள்ள வலது கை அங்குசத்தையும், இடதுகை பாசக் கயிற்றினையும் கொண்டுள்ளன. கீழுள்ள வலதுகை அபய முத்திரையைக் குறித்தும், இடது கை தொடையின் மீது வைத்தவாறும் இருக்க தடித்த உடலமைப்பும், பருத்துத் திரண்ட மார்பகமும், ஒடுங்கிய இடையும் இச்சிற்பத்திற்கு அணி செய்வனவாக உள்ளன. மேலைக்கங்கர்களது கலைப்பாணியினைக் கொண்ட திருவுருவம் கி.பி.9-10-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஸ்ருத தேவிக்குச் சற்று தொலைவில் அமர்ந்த கோலத்தில் இரு தீர்த்தங்கரர்களது சிற்பங்கள் சற்று பெரியவையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவர்களது பீடத்தில் சிங்க வடிவங்களும், இருக்கையின் மேற்பகுதியில் நான்கு சாமரம் வீசுவோர் சிற்றுருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. தீர்த்தங்கரர்களது தலைக்கு மேலாக அரைவட்ட வடிவ பிரபையோ, முக்குடையோ இடம் பெறவில்லை. இவ்விருவருள் முதலாவது தீர்த்தங்கரரின் வலது புறம் மாதங்க யக்ஷன் யானையின் தலைப்பகுதியில் வீற்றிருப்பதைக் காணலாம். இரண்டாவது தீர்த்தங்கரரின் இடதுபுறம் யக்ஷி சிற்பம் ஒன்றுள்ளது. அமர்ந்த வண்ணமுள்ள இந்த யக்ஷியின் வலது கை அபய முத்திரையைக் (அல்லது சிம்ம கர்ண முத்திரை) குறித்தும் இடது கை பழம் ஒன்றினைக் கொண்டும் விளங்குகின்றன. இவளது காலின் அருகில் தனித்தனியாக இரு குழந்தைகளும், அதற்குக் கீழ் சிங்கவாகனமும் இருப்பதைக் காணலாம். இவளது தலையை அலங்கரிக்கும் கரண்ட மகுடத்தின் மேல் சிறிய அளவில் தீர்த்தங்கரர் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்த யக்ஷி அம்பிகா,-மர கூஷ்மாண்டினி என அழைக்கப் பெறும் தருமதேவியாவாள். இந்த சிற்பத் தொகுதியில் முதலாவது உள்ள தீர்த்தங்கரர் மகா வீரரைக் குறிப்பதால் அவரது வலது புறம் மாதங்க யக்ஷனையும், அடுத்துள்ள தீர்த்தங்கரர் நேமிநாதராகையால் அவரது இடது புறம் அம்பிகா யக்ஷியையும் செதுக்கியுள்ளனர். இந்த சிற்பங்களும் கங்கர்களது கலைப்பாணியைக் கொண்டவையாக இருப்பதால் கி.பி.9-10-ம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டவையாக இருக்கலாம் என்றும் கூறுகின்றனர். இங்கு தீர்த்தங்கரர்களுக்கு மட்டுமின்றி சமண சமய ஆன்றோர்களுக்கும் சிற்பம் தோற்றுவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ருத தேவி சிற்பம் போன்ற காலத்தால் முந்திய திருவுருவம் வேறெங்குமில்லை

கி.பி. 9-ம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 10-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கர்நாடக மாநிலத்திலுள்ள சிரவண பெலகோலாவைச் சார்ந்த சமணத் துறவியர் சிலர் தமிழகத்திற்கு வந்து சென்றுள்ளனர். இவர்களுள் ஆரியநந்தி என்பவர் குறிப்பிடத்தக்கவர். இதனை வள்ளிமலை, மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கீழக்குயில்குடி ஆகிய இடங்களிலுள்ள கன்னடக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

கீழக்குயில்குடியிலுள்ள (சமணர் மலை) கன்னடக் கல்வெட்டு பெலகோலாவிலுள்ள மூலச்சங்கத்தைச் சார்ந்த ஆரிய தேவர் (ஆரிய நந்தி), பாலச்சந்திர தேவர் ஆகியோரது பெயர்களையும் நேமி தேவர், அஜிதசேன தேவர், கோவர்த்தன தேவர் ஆகிய துறவியரது பெயர்களையும் குறிப்பிடுகிறது.

குறிப்பாக (கீழக்குயில்குடியிலுள்ள இந்த கன்னட சாசனம் கி. பி 12-ம் நூற்றாண்டைச் சார்ந்தது என கல்வெட்டுத்துறையினர் கருதுகின்றனர். இது சரியாகத் தோன்றவில்லை. 10-ம் நூற்றாண்டு என இருப்பதே பொருத்தமானதாக இருக்கலாம் என்று கணிக்கின்றனர்). ஆரிய நந்தி, பாலசந்திர தேவர் மட்டுமின்றி எஞ்சியுள்ள கோவர்த்தனர், அஜிதசேன தேவர், நேமிதேவர் ஆகியோரும் சிரவண பெலகோலாவைச் சார்ந்த துறவியராக இருக்கலாம். இவர்களுள் கோவர்த்தனருக்கு வள்ளி மலையில் சிற்பமும் சமைக்கப்பட்டிருக்கிறது.

வள்ளிமலையில் முதலாவது தொகுதியில் வரிசையாகக் காணப்படும் சிற்பங்களுள் நாலாவது தீர்த்தங்கரர் வடிவமாகும். இங்குள்ள கல்வெட்டின்படி இரண்டாவது உள்ளது தேவசேனரையும், ஆறாவது உள்ளது கோவர்த்தனரையும் குறிக்கும். ஒன்றாவது, மூன்றாவது, ஐந்தாவது திருவுருவங்கள் எந்த முனிவரைக் குறிப்பவை எனக் கல்வெட்டுக்கள் கூறவில்லை. ஆனால் கீழக்குயில்குடியிலுள்ள சாசனம் கூறும் பெயர்களை அடிப்படையாகக்கொண்டு வள்ளிமலையிலுள்ள முதல் சிற்பம் ஆரிய நந்தியையும், இரண்டாவது தேவசேனரையும், (அஜிதசேன தேவர் என்னும் பெயரை வள்ளிமலையில் தேவசேனர் என்று பொறித்திருக்கலாம்), மூன்றாவது பாலச்சந்திரரையும் (நான்காவது தீர்த்தங்கரர்), ஐந்தாவது நேமிதேவரையும் குறிப்பவையாகத்தானிருக்க வேண்டுமென்று கூறலாம். இந்த ஐந்து அறவோர் சிற்பங்களுக்கேற்ப ஐந்து பெயர்கள் கீழக்குயில்குடி சாசனத்திலும், வள்ளிமலைக் கல்வெட்டில் மூன்று பெயர்களும் இடம்பெற்றிருப்பது இக்கருத்தை மெய்ப்பிக்கிறது.

இந்த ஐந்து துறவியரும் சிரவணபெலகோலாவில் முக்கியப்பொறுப்பில் இருந்தவர்களாக (தலைமைத்துறவியராக) இருக்கலாம். இவர்களுள் கடைசியில் வாழ்ந்தவர் பாலச்சந்திர தேவரின் சீடராகிய ஆரிய நந்தியாவார். இவர் கங்க மன்னனாகிய இராசமல்லன் காலத்தில் வாழ்ந்தவராதலால் வள்ளிமலைக்கு வந்தபோது தமக்கு முன்பு வாழ்ந்த துறவியரின் சிற்பங்களை இங்கு வடிக்க வழிவகை செய்துள்ளார். இவர் இச்சிற்பங்கள் அமைக்கப்பட்டபோது உயிர் வாழ்ந்தவராதலாலும், மேற்கூறிய துறவியருக்குப் பின்னர் வந்தவராதலாலும் இவரது சிற்பம் மட்டிலும் சிறியதாக வடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த வரிசையில் இவரது திருவுருவம் (வலமிருந்து இடப்புறமாகப் பார்த்தால்) கடைசியில் இடம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வள்ளிமலையில் சமணக் குகைகளில் திகம்பரத் துறவிகள் வசித்து வந்துள்ளனர். இங்கு ஒரு காலத்தில் சமணப் பள்ளியாக இருந்ததை சிற்பங்கள் காட்டுகின்றன. இங்கு தீர்த்தங்கரர்கள் சிற்பங்களும், யக்ஷர்கள் மற்றும் யக்ஷியர்கள் சிற்பங்கள், சமண சமய ஆன்றோர்கள் சிற்பங்களும் காணக்கிடைக்கின்றன. இந்த சிற்பங்கள் சாதவாகனர்கள் மற்றும் கங்கர் ஆட்சிக் காலத்தில், சிற்பங்களின் நேர்த்தி மற்றும் நீண்ட நாட்கள் நிலைபெற்று இருக்க வழுவழுப்பான கருங் கற்பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

●

**கட்டுரையாளர்: தொல்லியல் ஆய்வாளர் ஊடகவியலாளர்,**

*(கடந்த ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி சென்னை பல்கலைக் கழகத்தினுடைய, கங்கு தொல்லியல் தேடிய பயணத்தின் ஊடாக, எனது பேராசிரியரும், தமிழ் இலக்கியத்துறை தலைவருமான முனைவர் ஆ.ஏகாம்பரம் அவர்கள் தலைமையில் முதுகலை மற்றும் ஆய்வு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட போது அவர்களுடன் நான் செல்லும் வாய்ப்பின் காரணமாக உருவான கட்டுரை. இந்த பயண வழிகாட்டுதலில் மிகப்பெரிய உதவி செய்த தினத்தந்தி செய்தியாளர் சகோதரர் பன்னீர்செல்வம் மற்றும் நியுஸ் ஜெ தொலைக்காட்சி செய்தியாளர் சகோதரர் குமரன் ஆகியோருக்கு நன்றி.)*

# அன்றாட தமிழ் மொழிப் பயன்பாட்டுக்கான சிறந்த கையேடு






சி.பாலையா

நீண்ட அனுபவம் பெற்ற ஒரு நல்ல தமிழாசிரியர் என்பதோடு மட்டுமல்லாது, நமது தமிழ் மொழியையும், அதன் இலக்கிய இலக்கண வளங்களையும் வெவ்வேறு தளங்களில் மிகச் சிறப்பாகப் பயன்படுத்திவரும் கவிஞர் நா.முத்துநிலவன் அவர்கள் 'தமிழ் இனிது' என்ற நூலை தற்பொழுது படைத்துள்ளார். இந்நூலை மீண்டும், மீண்டும் படிக்கும்பொழுது, நமது தாய்மொழியாகிய தமிழை நாம் எவ்வாறெல்லாம் பிழைபடவும், தவறாகவும் எழுதி, பேசி வருகிறோம் என்பது நன்றாகத் தெரிய வருகிறது. கற்றவர்களும், குறிப்பாக ஆசிரியர்களும், எழுத்தாளர்களும் பாடலாசிரியர்களும் கூட அறிந்தோ அறியாமலோ இவ்வளவு தவறுகளைச் செய்துவருகிறோம் என்பதை அறியும்பொழுது, குற்ற உணர்வால் நெஞ்சம் பதைக்கிறது. இந்நிலை நீடித்துக் கொண்டே போனால் 'அமிழ்தினும்' இனிய நமது தமிழுக்கு பெருந்தீங்காகத்தான் அமையும் என்பதை நாம் உணர்ந்திட வேண்டும்.

நமது தாய்மொழி 'உயர்தனிச் செம்மொழி', 'சீரிளமைத்திறம் பெற்ற மொழி', உலகமெல்லாம் பரவிவரும் 'தேமதுரத் தமிழோசை' நிறைந்த மொழி, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணேன்' என்று புலவர் பெருமக்களால் புகழ்ந்தேத்தப்பட்ட மொழி, பிறமொழிக் கலப்பின்றி தனித்தே

செயல்படும் வளமும், செழிப்பும், நுட்பங்களும் நிறைந்த மொழி என்று பிறநாட்டு நல்லறிஞர்களே உளமாரப் போற்றிப் புகழ்ந்த மொழி.


இத்தகைய தனித்துவமிக்க நமது மொழியை நாமே இவ்வாறு பிழைபடப் பயன்படுத்தலாமா? அப்படியானால், எதிர்வரும் காலங்களில் 'மெல்லத் தமிழ் இனி......' எந்நிலை அடையும்? இந்நிலையை நன்கு உணர்ந்து, அதுவும் ஆய்வுநோக்கில் உய்த்துணர்ந்து, 'இவ்வாறான தவறுகளைக் களைந்திட ஏதாவது செய்தாக வேண்டும்' என்ற நல்ல மொழிப்பணி நோக்கில் தோழர் முத்துநிலவன் இந்நூலைப் படைத்துள்ளார். இதுபோன்ற நூல் காலத்தின் கட்டாயம். தொடர் கட்டுரைகளாக வெளிவந்த 50 கட்டுரைகளை ஒருங்கிணைத்து, 'இந்து தமிழ் திசை'யால் வெளியிடப்பட்ட இந்நூல் 'காலத்தினால் செய்த நன்றி' என்பதே சாலப் பொருந்தும்.

'தமிழ் இனிது' என்ற இந்த நூலைப் பற்றி சற்று விரிவாகப் பேச வேண்டும். இந்நூலின் தலைப்பை, 'பிழையின்றி தமிழ் பயில்வோம்' என்றோ, 'தற்காலத் தமிழ் படும்பாடு' என்றோ நூலாசிரியர் அமைத்திருக்கலாம். ஒரு தமிழாசிரியர் என்பதோடு, தமிழ் மொழியை உளந் தோய்ந்து, உள்ளும் புறமும் நன்கு ஆய்ந்து, ஒருவகைத் தீராத்தாகத்துடன், தமிழைத் தாம் கற்றுணர்ந்து, களிபேறுவகையடைந்த காரணத்தினால், நமது தாய்மொழியின் இயல்பான இனிமைத் தன்மை சிதைந்துவிடக் கூடாது என்ற உள்மன உந்தலால் 'தமிழ் இனிது' என்ற தலைப்பைத் தேர்வு செய்துள்ளார் நூலாசிரியர். இதற்கு முன்பு, பலருக்கு எட்டிக் காயாகப்படும் இலக்கணத்தைப் பற்றி ஒரு நூல் எழுதும்பொழுதே 'இலக்கணம் இனிது' என்ற தலைப்பில் ஆய்ந்தவர். ஒரு பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர், அந்தப் பாடத்தின் 'உயிர்ப்பு' நீடித்து நிலைபெற வேண்டும் என்ற உள்ளுணர்வோடு செயல்படுவது ஒரு ஆசிரியரது உயரிய கற்பித்தல் கடமையாகும். இதில் தமது ஒவ்வொரு வகுப்புக் கற்பித்தல் பணியையும் தவறாது மகிழ்வுடன் கற்பித்தல் என்ற கடமையும் உள்ளடங்கும்.

இந்நூலின் தலையாய நோக்கத்தை, இதன் 37 ஆம் பக்கத்தில் நூலாசிரியர் தெளிவாக வரையறை செய்துள்ளார். "நம்மைச் சுற்றியடிக்கும் காற்று, நம் தலையில் குப்பையைக் கொட்டிவிட்டுப் போவது இயல்பு. பிறகு நம்மை நாமே தூய்மை செய்து கொள்கிறோம் அல்லவா? அதுபோல, அரசியல், பொருளியல், பண்பாட்டு வாழ்க்கை மாற்றம் காரணமாக நம் கண், காதுகளில் தாமே வந்து விழும் தவறான தமிழ்ச் சொற்களைத் திருத்திக் கொள்ள முயல வேண்டும்". இதில் 'நம்மைச் சுற்றியடிக்கும் காற்று' என்பது, இன்றைய நமது அவசர அலங்கோலக் காலச் சுழற்சியில் நாம் செய்யும் மொழிப்பிழைகளுக்கான 'சூழல்கள்' என்பதே ஆகும்.

நமது தமிழ்கூறும் நல்லுலகில் 'தமிழ் இனிது' என்ற இந்நூல் நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்கும் பாராட்டிற்குமுரியதாகும். படைப்பாற்றல் மிகு ஒரு நல்ல கலை இலக்கியச் செயல்பாட்டாளராக நூலாசிரியர் தாம் பதித்து வந்த நீண்ட வரலாற்றுத் தடங்களில், இது ஒரு சீரிய தமிழ்ப் பணி அடையாளமாகும்.

இந்நூலின் மிகக் குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவென்றால், நாம் தவறாகப் பயன்படுத்தும் சொற்களை ஒவ்வொரு தலைப்பிலும் எடுத்து விளக்கும்பொழுது, அச்சொற்கள் இடம் பெற்றுள்ள அல்லது அச்சொற்களுக்கான விளக்கங்களைத் தரும் பழம்பெரும் நூல்களான தொல்காப்பியம், நன்னூல், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியப் படைப்புகள் மற்றும் நமது தமிழ் மூதாட்டி ஔவையாரது நூல்கள் போன்றவை ஆங்காங்கு மிகப் பொருத்தமாக எடுத்தாளப்படுகின்றன. இதுமட்டுமல்ல, அந்நூல்களின் செய்யுள் எண், மற்றும் வரிகள்




**தமிழ் இனிது | நா.முத்துநிலவன்**
**வெளியீடு: இந்து தமிழ் திசை | விலை: ரூ. 1602/-**

துல்லியமாகக் குறிப்பிடப்படுகின்றன. அதேபோல், அச்சொற்களின் ஏதோ ஒருவகைத் தொடர்புள்ள இக்காலப் படைப்புகள், ஆசிரியர்கள், திரைப்படங்கள் மற்றும் கலைஞர்களின் பெயர்கள் எல்லாம் மிகச் சரளமாக ஆங்காங்கு குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறான நூலாசிரியரது விரிந்த பார்வையானது தாம் எடுத்துக் கொண்ட ஒரு அரிய தமிழ்ப் பணி மீது நல்ல நம்பகத்தன்மையையும் நூலைப் படிப்போருக்கு அலாதியான கவன ஈர்ப்பையும் உண்டாக்குகிறது.

நூல் முழுவதும் ஒவ்வொரு கட்டுரையிலும் தவறாகப் பயன்படுத்தும் பல்வேறு சொற்கள் விளக்கப்படுகின்றன. அச்சொற்களின் பிழைகள் சுட்டிக்காட்டப்பட்டு, அத்துடன் சரியான சொற்களும் தரப்படுகின்றன. இந்நூலின் முத்தாய்ப்பான பயன் இதுவேயாகும். எடுத்துக்காட்டாக:

மங்களம் - மங்கலம் - (பக்-43) , கட்டிடம் - கட்டடம் - (47), அருகாமை -அருகில் - (46), விபரம் - விவரம் - (93), லோகம் - உலகம் - (95), சித்தரித்தல் - சித்திரித்தல் - (35), சிகப்பு - சிவப்பு - (36), பதற்றம் - பதட்டம் - (37), வாய்ப்பாடு -வாய்பாடு - (89), 60ம், 60 தாம் - 60 ஆம், 60 ஆவது - (29), நினைவு கூறுதல் - நினைவு கூர்தல் - (73), முகம் 'சுழித்தல்' - முகம் 'சுளித்தல்' - (101), ஆத்திச்சூடி -ஆத்திசூடி - (87), துவக்கப்பள்ளி - தொடக்கப்பள்ளி - (43), கோயில் - கோவில் - (60), முன்னூறு - முந்நூறு - (54), கோறல் - கோரல் - (69), துள்ளியமானது -துல்லியமானது - (75), தடையம் - தடயம் - (111), நாட்காட்டி - நாள்காட்டி - (90).

இந்த 20 சொற்களும் ஒரு எடுத்துக் காட்டுக்காகத்தான். இதே போல் பல்வேறு சொற்களை நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் நூலாசிரியர் சுவைபட விளக்குகிறார். இத்துடன் ஒரே சொல்லை இருவிதமாகப் பயன்படுத்தும் இக்கால நடைமுறையை ஏற்றுக் கொள்ளலாம் என்றும், அதற்குப் பல நூல்களில் உள்ள சான்றுகளையும் கோடிட்டுக்காட்டுகிறார். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சில சொற்கள்:

1. ஒரு - ஓர் 2. எத்தனை - எத்துனை 3. உடம்பாடு - உடன்பாடு 4. எல்லோரும்-எல்லாரும் 5. காவிரி - காவேரி 6. பழமை - பழைமை 7.ஐந்நூறு - ஐநூறு 8. செய்நன்றி - செய்ந்நன்றி.

இவ்வாறு, பல சொற்களின் இக்கால இருவிதப் பயன்பாடுகளையும், ஏற்றுக் கொள்ளலாம் என்றால், இன்னும், ஒரு குறிப்பிட்ட இடைவெளிக் காலத்தில், இதற்குமுன் பட்டியலிடப்பட்ட 'சரி - தவறு' சொற்கள் இரண்டையுமே ஏற்றுக் கொள்ளலாம் என்ற நிலை வருமானால், நமது ஒட்டுமொத்த 'மொழிமாண்பு' ஒரு காலத்தில் எங்கு போய் நிற்கும் என்பது நமக்குள் எழும் ஒரு வினாவாகும்.

தனித்த சொற்களின் தவறான பயன்பாடுகளை மட்டும் நூலாசிரியர் ஆய்ந்திடவில்லை. மாறாக, பல்வேறு சொற்றொடர்கள், வாக்கிய அமைப்புகள் மற்றும் அவை பயன்படுத்தப்படும் தற்கால, எழுத்து வழக்குகள், பாடல்வரிகள் ஆகியவற்றையும் தம் ஆய்விற்கு எடுத்துக் கொள்கிறார். எடுத்துக்காட்டாக: 'அவனின்றி ஓரணுவும் அசையாது' (அவன் இன்றி)' ஆவண செய்வது - (ஆவன செய்வது)' பகலிரவு பாராமல் (இராப்பகல் பாராமல்) இத்துடன், 'திருவளர் செல்வன் - திருநிறைச் செல்வன்' என்ற சொற்களிலும், 'சிந்தாமல் சிதறாமல் என்ற சொற்களிலும், 'சட்டமன்ற உறுப்பினரோடு அமைச்சரும் வருகிறார்' போன்ற சொற்றொடர்களிலும் இவ்வளவு நுட்ப-திட்பங்கள் இருப்பதை 'தமிழ் இனிது' நூல்தான் நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறது. மொழியைக் கவனத்துடனும் தவறின்றியும் பயன்படுத்த வேண்டும் என்பது இவற்றிலிருந்து புலனாகிறது.

இந்நூலில் நூலாசிரியர், தமது ஆய்விற்கு எடுத்துக் கொண்ட 'மொழியியல் சிந்தனைக்கு' அப்பாற்பட்டு, தேவைக்கேற்ப ஆங்காங்கு அவர் குறிப்பிடும் முந்தைய எழுத்தாளுமைகள், புதிய படைப்பாளிகள், இன்றைய எழுத்துலகிலும், இலக்கியத்தளத்திலும் தடம் பதித்துவரும், ஆனால் பரந்துபட்ட பொதுவெளியில் அதிக அறிமுகமில்லாத எழுத்தாளர்கள் ஆகியோரது பெயர்களையும் அவர்களது படைப்பாக்க எடுத்துக்காட்டுகளையும் தொடர்ந்து குறிப்பிடும்பொழுது, அவற்றை வாசிக்கும் நமக்கு வியப்பு மேலிடுவதைத் தவிர்க்க முடியவில்லை. உ.வே.சா, சி.வை.தா., திரு.வி.க., வ.சுப.மா, பாவாணர், சிவத்தம்பி, உடுமலை நாராயணகவி, கண்ணதாசன், ஜெயகாந்தன், வாலி, வைரமுத்து, தமிழண்ணல், பெருமாள் முருகன் போன்ற முதுபெரும் ஆளுமைகளை நாம் அறிவோம். அதேசமயம், நா.கணேசன், முனைவர் வ.கிருஷ்ணன், பேச்சிமுத்து, நவஜீவன், இராம. கி.ஜூலியானா ஜோசப் விஜூ போன்ற இன்றைய நல்வரவுகளையும் குறிப்பிட்டு எழுதுகிறார். இது நூலாசிரியரது பரந்துபட்ட தமிழ் கூறும் நல்லுலக வாசிப்பு அனுபவத்தையும், அனைத்துப் படைப்பாளிகளிடமிருந்தும் பொதுச் சமூகம் தெரிந்து கொள்ள வேண்டிய பல நுட்பங்கள் உள்ளன என்பதையும் அறியத் தருகிறது.

'தமிழ் இனிது' நூலில், ஆய்விற்கு எடுத்துக் கொண்டுள்ள சொற்களது ஒன்று அல்லது இரண்டு எழுத்து மாறுபாடுகளால் ஏற்படும் தவறுகள், ஒரு சொல்லிலோ, அல்லது சொற்றொடரிலோ உள்ள சிறு மாறுபாட்டால் ஏற்படும் தவறுகள், ஆங்கில மொழிப்பயன்பாட்டிலும் உண்டா என்பதைத் தெரிந்து கொள்வதும் நன்று. ஆங்கில மொழியின் எழுத்து அல்லது பேச்சு பயன்பாட்டில், உச்சரிப்புப் பிழை *(WRONG PRONUNCIATION)* இலக்கணப் பிழை *(GRAMMATICAL ERROR)* எழுத்துப் பிழை *(SPELLING MISTAKES)* மற்றும் வாக்கிய அமைப்புப் பிழை *(CONSTRUCTION MISTAKES)* ஆகிய தவறுகள் ஏற்படலாம். இது இயல்பானது. ஆனால், நமது தமிழ் வாக்கியங்களில் உள்ள சொற்களில் தவறாகப் பயன்படுத்தும் ஓரிரு எழுத்துகளினால் ஏற்படும் மொழி இயல்புத் தவறுகள், சொற்களை மாற்றிப் போடுவதால் ஏற்படும் தவறுகள் மற்றும் இத்தவறுகளால் ஏற்படும் பொருள் மாறுபாடுகள் ஆகியன ஆங்கில மொழியில் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. இது, ஒரு வகையில் மக்களது இயல்பிற்கு ஏற்ப, எப்படிப் பயன்படுத்தினாலும் அதன் பொருள் தன்மை மாறாது என்ற நமது மொழியின் ஏற்புடைமைப் பண்பாகுமா? இதிலும், ஆங்கில மொழிப் பயன்பாடு நாட்டுக்கு நாடு இப்பொழுது மாறுபடுகின்றன. *(AMERICAN ENGLISH, BRITISH ENGLISH)* இத்துடன் இந்நூலாசிரியர் பல இடங்களில் தேவையான ஆங்கில இணைச் சொற்களைப் பயன்படுத்தியும் விளக்கங்கள் தருவது சிறப்பானதாகும்.

பொதுவாக, ஒரு உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். நூலாசிரியர் தேவையான இடங்களில் நன்னூல், தொல்காப்பியம் ஆகிய நூல்களில் வரும் வரையறைகளை (சூத்திரங்கள்) எடுத்தாண்டு 'உயிர்முன் மெய்' என்றும், 'மாத்திரை' என்றும் 'எழுத்து, சொல், யாப்பு' என்றும் விளக்குகிறார். பொதுவான வாசகர்களுக்கு இவற்றைப் புரிந்து கொள்ள முயற்சிக்கும்போது கண்டிப்பாகத் 'தலைசுற்றல்தான்' வரும். எல்லோரும் இலக்கண வல்லுனர்களாகவோ *(GRAMMARIANS)* நூலாசிரியர் போன்று சொல்லாய்வாளர்களாகவோ *(RHETORIC)* இருப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. இருப்பினும், தமிழ் இலக்கணச் சிறப்பை எடுத்துரைப்பதும் தேவையே.

நூல் முழுவதும் பழைய மற்றும் புதிய திரைப்படப் பெயர்கள், கலைஞர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக திரை நட்சத்திரங்களின் எடுப்பான புகைப்படங்கள் ஆகியவை நிறைய இடம் பெற்றுள்ளன. நூலாசிரியரது மொழி தொடர்பான பிழைதிருத்தம் என்ற நன்னோக்கு, மேற்குறிப்பிட்டவைகளால் ஏற்படும் வாசகர்களது கவனச் சிதறலினால் அடிபட்டுப் போகுமே என்ற குறுக்கீடும் ஏற்படலாம். ஒருக்கால், 'இந்து தமிழ் திசையின்' தொழில்நுட்ப உத்தியாகவும் இது இருக்கலாம். அதே சமயம், புலவர்கள் அறிஞர் பெருமக்கள், மக்கள் தலைவர்கள் ஆகியோரது படங்கள் மற்றும் சில வலைதளப் படங்கள் இடம் பெற்றிருப்பது கவனத்தை ஈர்க்கின்றன. நூலில் மேலும் ஒரு சிறப்பு, நூலின் இறுதியில் பட்டியலிடப்பட்ட 'சொல் அடைவு' மற்றும் 'உதவிய நூல் பட்டியல்' ஆகியவையாகும். இந்நூலைப் படைக்க நூலாசிரியரது அசாத்தியமான கணினி, விக்கிபீடியா, யூடியூப், முகநூல் ஆகிய சாதனங்களின் பயன்பாட்டு அறிவு மிகவும் துணை நின்றுள்ளன. ஒவ்வொரு தற்காலத்தமிழ் குடும்பத்திலும், தமிழ் வாசகரிடமும் இருக்க வேண்டிய நூல் 'தமிழ் இனிது.

தமிழ் மொழியின் அன்றாடப் பயன்பாட்டிற்கான சிறந்த கையேடாகப் பயன்பட வேண்டிய நூல் 'தமிழ் இனிது' என்றால் அது மிகையல்ல.

●

**கட்டுரையாளர்: ஓய்வு பெற்ற ஆசிரியர்,**
**பயிற்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளர்.**

**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

கட்டுரை

# குயிலனின் 'முச்சந்தி'யில் மூதறிஞரும் ஈ.வெ.ராவும்

**முனைவர் த.கண்ணா கருப்பையா**



தமிழிலக்கியப் பெரும்பரப்பில் 1939இல் தொடங்கி 2002 வரைக்குமான காலவெளியில் அசாத்தியப் பல்திறப் படைப்பாளியாகத் திகழ்ந்தவர் கவிஞர் குயிலன் என்ற கு.இராமலிங்கன். இலக்கிய வகைமையில் நூற்றுக்கும் மேலதிக ஆக்கங்களுக்கு உரித்தானவர். கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், உரைநடைச் சித்திரங்கள், மொழிபெயர்ப்புகள், திரைப்படப்பாடல்கள், திரையாக்க வசனங்கள் என்பதான படைப்பாக்கங்களில் ஐந்து மொழிகளின் புலமையோடு பங்களித்தவர். பல்வேறான இதழ்களின் ஆசிரியராகவும் தனித்திறனோடு திகழ்ந்தவர். குயிலனுக்கு கவிஞராய் பேரடையாளமிருந்தும் 'தென்றல்' (இலக்கிய மாத இதழ்), 'முன்னணி' (முற்போக்கு அரசியல் இலக்கிய வார இதழ்), 'வாரம்' (முற்போக்கு கலை, இலக்கிய அரசியல் வார இதழ்) என இதழாசிரியராய் தனித்துவத்துடன் விளங்கினார். இக்கட்டுரை, ஐம்பதுகளில் 'வாரம்' இதழில் பொறுப்பாசிரியராய் பணிபுரிந்த தருணங்களில் குயிலனின் விமர்சன ரீதியிலான எழுதுதிறன் புலப்பாட்டை 'முச்சந்தி' பகுதியின் ஊடாகப் பேசு பொருளாக்கியுள்ளது.

### குயிலனின் 'வாரம்' இதழ்

கவிஞர் குயிலன், தன் தலைமறைவு வாழ்வின் பிற்பகுதியிலும் இணைந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பின்னாகவும் எவ்வியக்கத்திலும் பங்களிக்காது தமிழ்த் திரைத்துறைக்குள் இயங்கினார். அக்காலச் சூழலில் 1952இல் 'வாரம்' என்ற முற்போக்கு கலை இலக்கிய அரசியல் வார இதழைத் தொடங்கினார். "ஊருக்கு நல்லது சொல்வேன் – எனக்கு / உண்மை தெரிந்தது சொல்வேன்" (ப.2) என்கிற பாரதி பாடலைக் குறிக்கோள் மேற்கோளாக்கி 'வாரம்' வார இதழ் ஒரு அணா விலையோடு வெளிவந்துள்ளது. இவ்விதழ் அரசியல் ரீதியாகப் பொதுவுடைமைச் செல்நெறியோடும் இலக்கிய ரீதியில் கம்யூனிஸ்ட் போக்கிலிருந்தும் சற்று மாறுபாடுடன் வெளிவந்தது. இதழின் பொறுப்பாசிரியர் கவிஞர் 'குயிலன்' என்றாலும் 'முச்சந்தி' என்ற

பகுதியில் கு.ரா (கு.இராமலிங்கன்) என்ற புனைபெயரில் அவரே சமகாலச் சமூக, அரசியல் நடைப்பியலைப் பேசுபொருளாக்கி பகடியோடு விமர்சித்துரைக்கிறார். முப்பாதைகள் சந்திக்குமிடம் 'முச்சந்தி'யாகக் கருதப்படும் வெகுஜனப் பொதுவெளியில் சமூகஞ்சார் உரையாடல் நிகழ்வதுண்டு. இப்படியானதொரு காரணப் பெயரை முன்வைத்து கவிஞர் குயிலன் தன் 'வாரம்' இதழ்களின் (17.08.1952, 26.10.1952, 02.11.1952) 'முச்சந்தி'ப் பகுதியில் சமூக, அரசியல் நடப்பியல் செய்திகளை விமர்சித்துள்ளார். இக்கட்டுரையானது 'வாரம்' இதழின் (17.08.1952) நாளிட்ட 'முச்சந்தி'ப் பகுதியை மட்டும் முன்நிறுத்துகிறது.

### பெரியார் – இராஜாஜி மீதொரு 'விமர்சனம்'

குயிலனின் 'வாரம்' இதழின் (17.08.1952) 'முச்சந்தி' எனும் பகுதியில் ஈ.வெ.ரா 'மூதறிஞர்' இராஜாஜி நட்புறவு குறித்த கு.ரா.வின் விமர்சனப் பாங்கிலான விளக்கம் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக "போட்டி ஒழிக!" பெரியார் - இராஜாஜி உபதேசம் (ப.8) எனும் தலைப்பில் அமைந்துள்ளது. இப்பகுதியில் கு.ரா. உள்ளடக்கச் செய்திகளின் விமர்சிப்பிற்கு இயைபுற தமிழிலக்கியக் கவிதைகளைக் குறியீட்டு நோக்கில் சுட்டுகிறார். அதில்,

**"புகைநடுவினில் தீயிருப்பதை**
**பூமியில் கண்டோமே - நன்னெஞ்சே**
**பூமியில் கண்டோமே**
**பகைநடுவினில் அன்புருவாகிய**
**பரமன் வாழுகின்றான்-நன்னெஞ்சே**
**பரமன் வாழுகின்றான்' (ப.8)**

என்கிற பாரதி கவிதை வரிகளைப் பதிவிட்டு பெரியாரும் இராஜாஜியும் வேறான சித்தாந்தப் பின்புலமுடைய சமூக அரசியல் களத்தில் பயணித்தாலும் இருவருக்குள்ளும் ஒருமித்த புரிதலும் பேரன்பும் ஓர்மையும் உள்ளார்ந்து கிடந்ததாகக் குறிப்பிடுகிறார். கு.ரா.வின் 'முச்சந்தி' விமர்சிப்பில் இவ்வெடுத்துரைப்பை எள்ளல், அங்கதம் தொனிக்கப் புலப்படுத்திக் காட்டுகிறார். "போட்டி ஒழிக!" விமர்சிப்பில் இராஜாஜிக்கும் பெரியாருக்குமான பேரன்புணர்வை கு.ரா., "பகை நடுவினில் அன்பிருப்பதற்கு அத்தாட்சி வேண்டுமா? தாராளமாக இருக்கிறது. வேறெங்கும் தேடி அலைய வேண்டாம்! இராஜகோபாலாச்சாரியாரையும் ராமசாமிப் பெரியாரையும் எடுத்துக் கொள்ளுங்கள். இருவரும் நெருங்கிய நண்பர்கள். அன்று மட்டுமல்ல இன்றும் கூடத்தான். ஊடே ஏதோ பகை! ஆனால் இந்தப் பகை நடுவிலே இருவருக்கும் இருக்கும் அன்பு உங்களுக்கெப்படித் தெரியும்?" எனக் கூறிவிட்டு அவரே "நாயக்கர் என்மீது அன்பில்லை என்று அடிக்கடி கூறி வருகிறார். அதையெல்லாம் நம்பாதீர்கள். அவருக்கு என்மீது உண்மையான அன்பு உள்ளுக்குள் இருக்கிறது" என்பார் இராஜாஜி.

"அதெல்லாம் இல்லை, ஊகூம்" என்று மறுப்பார் பெரியார்.

இதெல்லாம் வெறும் ஊடல். தாம்பத்யச் சண்டை. 'அரிசி விலையின் ஏற்றம் இறக்கத்தைப் போல' அவ்வளவு தான். இருவரும் அத்யந்த நண்பர்கள் தான்.

இல்லாவிட்டால், தனது பல்லாயிரக்கணக்கான தொண்டர்களை யெல்லாம் புறக்கணித்துவிட்டு 'கல்யாண' நிச்சயதார்த்தத்திற்கு பெரியார் இராஜாஜியைத் தேடிச் சென்றிருக்க முடியுமா?

தாம்பத்ய ஊடலிலே மனைவி சொல்லும் யாவையும் புருஷன் மறுப்பான். அதே மாதிரி புருஷனை மனைவி பொய்யனாக்குவாள். எல்லாம் வேடிக்கைக்காகத்தான்.

"ஆச்சாரியார் ஆட்சியை ஐந்து வருடங்களுக்கு அசைக்க முடியாது" என்று ஊர்ஜிதம் செய்வார் பெரியார்.

"அப்படியொன்றும் நினைக்காதீர்கள், ஈ.வெ.ரா சொல்வதை நம்ப வேண்டாம் என்பார் இராஜாஜி" என்று கு.ரா. இருவருக்குமான மறைமுகத் தோழமையைப் புலப்படுத்துகிறார். மேலும், "பகைநடுவினில் அன்பிருப்பதற்கு இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்?" என்று கு.ரா. கூடுதலாக மற்றொன்றையும் கூறும்பொழுது, "இந்த உதாரணம் இரண்டு பேரும் ஒரே மனம் படைத்தவர்கள் என்பதையே காட்டும்.

நகரசபைத் தேர்தல் வருகிறதல்லவா? அதைப் பற்றி பெரியார் என்ன சொல்கிறார் தெரியுமா?

"ஸ்தல ஸ்தாபனங்கள் - நகர சபைகள் முதலியவற்றுக்குத் தேர்தல் தேவையே இல்லை....

ஸ்தல ஸ்தாபனங்களில் கட்சிகள் கோஷ்டிகள் கூடாது" என்கிறார்.

நமது பெரியாருக்கு "போட்டி" மனப்பான்மையை வளர்க்கும் இந்தத் தேர்தல் முறையில் பிடித்தமில்லையாம். இந்த மாதிரி போட்டி போட்டு கோஷ்டிச் சண்டை போடுவது

மிகவும் விரும்பத்தகாத செய்கையல்லவா? அதற்காக வேண்டித்தான் பெரியார் தனது கட்சியைப் பொறுத்தவரையிலும் கூட இந்தக் கொள்கையை அனுஷ்டிக்கிறார் போலும். கட்சி நிர்வாகிகள் தலைவர்களாகத் தேர்ந்தெடுப்பது கூடப் போட்டி மனப்பான்மை தானே?

எனவே, திராவிடத் தந்தை "போட்டி ஒழிக" என்று உபதேசம் செய்ய வருகிறார். வெல்க அவருடைய உபதேசம் வெல்க வெல்க" என்று எள்ளலுடன் கு.ரா. விமர்சித்திருப்பதை நோக்கலாம்.

ஈ.வெ.ரா.வின் மனச்சாய்வையே இராஜாஜியும் பிரதிபலித்திருப்பதை கு.ரா. 'முச்சந்தி'யில் எடுத்துரைக்கையில், "இம்மாதம் 7ந் தேதி தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர் சங்கத்தில் பேசும்பொழுது இராஜாஜியும் "போட்டி ஒழிக" என்று உபதேசித்துள்ளார்.

"தேர்தலுக்காக அதிகம் போட்டி போடக்கூடாது" என்கிறார். எதிர்க்கட்சி வாலிபர்களும் மற்றவர்களும் "இராஜாஜி தேர்தலுக்கு நின்று போட்டி போடவில்லை. புழைக்கடை வழியாக வந்தவர் என்று அடிக்கடி குத்திக்காட்டுகிறார்கள். வேண்டுமானால் நான் ராஜினாமா செய்கிறேன். நின்று போட்டியிட்டு வரட்டும் என்று சிலர் வலுச்சண்டைக்கு இழுக்கிறார்கள்! இவர்கள் எல்லாம் இராஜாஜியை நன்கு அறிந்து கொள்ளாதவர்கள். சுத்த அசட்டு ஜனநாயக வாதிகள்!"

இராஜாஜி போட்டி போட விரும்பவில்லை. தேர்தலுக்காக அதிகம் போட்டி போடக்கூடாது என்பது தான் அவருடைய கொள்கையாச்சே!

இன்னுமொன்று இராஜாஜி தான் தேர்தலுக்கு நிற்காமல் மேல் சபைக்குள்ளும் மந்திரி சபைக்குள்ளும் நுழைந்துவிட்டதற்கே சப்பைக் கட்டு கட்டுகிறார் என்று தவறாக நினைக்க வேண்டாம்.

இராஜாஜி எப்பொழுதுமே "போட்டி ஒழிக" என்ற கோஷத்தைக் கிளப்பி வந்திருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முன்பு கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்பதற்கு சிறிது நேரத்திற்கு முன் அவர் கூறிய தலைப்பில் ஒரு புத்தகம் கூட எழுதினார் (இந்தப் புத்தகத்தை அவர் சொல்லச் சொல்ல அவர் முன்னர் இருந்து என் கைப்படவே நான் எழுதினேன்-கு.ரா).

இப்பொழுது என்ன சொல்கிறீர்கள். நண்பர்கள் இருவரும் வாய்வேறாக இருந்தாலும் மனம் ஒன்றாகி விடுகிறார்களல்லவா? என்கிற கு.ரா மேலும், "போட்டி ஒழிக" என்பது குறித்தான இராஜாஜியின் மனச்சாய்வையும் 'வாரம்' இதழினூடாகப் புலப்படுத்திக்காட்டுகிறார். அதில், இராஜாஜியின் 'தாம்பரம்' கூட்ட உரையை எடுத்துரைக்கையில், "ஒருமுறை தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர் அடுத்த வருஷம் எந்தப் பதவிக்கும் தேர்தலில் போட்டியிடக் கூடாதென்று ஒரு விதி செய்து கொள்ளவேண்டும். அரசியல் தேர்தல்களிலும் இப்படி நடந்தால் நல்லது. அப்படி இல்லாததால் தான் எல்லாக் கஷ்டங்களும். என் அனுபவத்தைக் கொண்டு நான் இதைச் சொல்கிறேன்" என்ற அவரின் மனப்பாங்கையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்.

மூதறிஞரின் இம்மனப்பாங்கைப் பற்றி கு.ரா. விமர்சிக்கையில், "மாகாணப் பிரதமராகவும் பின்னர் கவர்னராகவும் கவர்னர் ஜெனரலாகவும் மத்திய மந்திரியாகவும் பதவி வகித்து 'ரிட்டையரான' இராஜாஜி மறுபடியும் பதவிக்காகப் போட்டியிடுவது நல்லதல்ல" என்பதை தமது சொந்த அனுபவத்தின் மூலம் ஒப்புக்கொள்கிறார்.

பதவிக்காகப் போட்டியிடுவது நல்லதல்ல. எனவே தான் பதவிக்காக போட்டியிடாமல் வந்தார். அவரைப்போய் மறுபடியும் "போட்டியிடு போட்டியிடு" என்று நச்சரித்தால் நன்றாக இருக்கிறதா! என்று அங்கதம் தொனிக்க விமர்சிக்கும் கு.ரா., "நன்றாக இல்லை. நான் சொல்கிறேன் இது அறவே நன்றாக இல்லை. எனவே தொண்டை கிழியக் கத்துகிறேன்: "போட்டி ஒழிக" என்று எள்ளலும் அங்கதமும் மிகுவிக்க 'முச்சந்தி'ப் பகுதியைக் கட்டமைத்துள்ளார்.

குயிலன் பொறுப்பாசிரியராகப் பணிபுரிந்த 'வாரம்' வார இதழ் 'உண்மை தெரிந்தது சொல்வேன்' என்கிற இதழ் குறிக்கோளின் பாரதி கவிதை வரிகளுக்கு ஏற்பவே 'முச்சந்தி' பகுதியைக் கட்டமைத்திருப்பதும் மூதறிஞருக்கும் ஈ.வெ. ராவுக்கும் இடையிலான இருவேறான நட்புறவின் சூசகத்தைப் புலப்படுத்துவதிலும் எள்ளலும் அங்கதமும் தன் எழுதுதிறனில் மிகுவித்து தேர்ந்ததொரு விமர்சகராகவும் குயிலன் என்கிற கு.ரா.வை அடையாளப்படுத்துகிறது.

●

**கட்டுரையாளர்: வருகைதரு புலமையாளர், காந்தி கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம். காந்திகிராமம்.**

திறனாய்வு

# ஒரு நூற்றாண்டுப் பெண்களின் கதை




அறவி | அகிலா | காலச்சுவடு பதிப்பகம் | விலை: ரூ.300/-

எழுத்தாளர் அகிலாவின் இரண்டாவது நாவல் 'அறவி.' இவர் ஏற்கெனவே 'தவ்வை' என்றொரு நாவல் எழுதியுள்ளார். மனநல ஆலோசகராகப் பணியாற்றுகிறார். இந்தப் பணி அனுபவம்தான் 'அறவி' நாவலுக்குப் பின்னணியாகச் செயல்பட்டுள்ளது. அக மனதின் விளைச்சல்கள்தாம் படைப்புகள் என்கிறது உளவியல் ஆய்வு. 'படைப்புகள் அனைத்தும் நனவிலி மனதிலிருந்தே உருவாகின்றன' என்கிறார் ப்ராய்ட். ஒடுக்கப்பட்ட அல்லது நசுக்கப்பட்ட ஆசைகள், தீர்க்கமுடியாத முரண்கள், இறந்தகால நினைவுகள் உள்ளிட்டவை சேர்ந்துதான் நனவிலி மனதைக் கட்டமைக்கின்றன என்பதும் ப்ராய்டின் கருத்து. அவர் நனவிலி மனதை அடிமனம், ஆழ்மனம் என இரு வகையாகப் பிரிக்கிறார். இத்தகைய நனவிலி மனதின் மடைமாற்றம்தான் படைப்பு. சமூக ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்ட ஒருவர், தன்னைப் பாதுகாத்துக்கொள்ள தன் ஆசைகளைப் புதைத்துக்கொள்கிறார். அந்த ஆசைகள் நனவிலி மனதில் தொடர்ந்து சேகரமாகின்றன. வாய் தவறிப் பேசுதல், அறியாமல் எழுதிவிடுதல், கனவுகள் ஆகியவை இந்தச் சேகரத்திலிருந்தே வெளிப்படுகின்றன என்று உளவியல் திறனாய்வு சொல்கிறது. படைப்பாளர்கள் இந்தக் கனவுகளை மொழிப்படுத்தி படைப்புகளாக மாற்றுகின்றனர். பிறருக்கு அது வெறும் கனவாகவே நின்று விடுகிறது.



சுப்பிரமணி இரமேஷ்

தேவகி, வசுமதி என்ற இரு பெண்களின் கதைகளை ‘அறவி’ என்ற புனைவாக எழுதியிருக்கிறார் அகிலா. இரண்டு பெண்களுமே வெவ்வேறு வகைகளில் குடும்பத்தினரால் ஒடுக்கப்படுகின்றனர். ஐம்பது வயதைக் கடந்தபிறகுதான் இவர்களே இதனை உணருகின்றனர். புனைவின் கதை முன்னும் பின்னுமாக இருவரின் நினைவுகளினூடாக நகர்கிறது. இருவரும் எழுதிக்கொள்ளும் கடிதங்களின் வழியாகவும் கதை சொல்லப்படுகிறது. குடும்ப அமைப்பே பெண்களுக்கு எதிரானதாக இருக்கிறது என்ற கதையாடல் தொடர்ச்சியாக வெவ்வேறு இலக்கிய வகைமைகளில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. ‘அறவி’ நாவலும் இந்தக் கதையாடலுக்குள் தன்னை இணைத்துக் கொள்கிறது. ஆனாலும் சில உத்திகளின் வழியாகப் புனைவை வாசிப்புக்குரியதாக அகிலா மாற்றியிருக்கிறார்.

தேவகி இந்நாவலின் மையமாக இருக்கிறாள். தேவகியின் பாட்டி செல்லம்மா; மகள் யமுனா; தேவகி ஆகிய மூவருமே வெவ்வேறு காலத்தின் குறியீடுகள். தேவகியின் அம்மாவிற்குப் புனைவில் பெரிய அளவில் இடமில்லை. ஆக, மூன்று தலைமுறைப் பெண்களின் வாழ்க்கை இந்நாவலில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. காலமும் இவர்கள் பயணிக்கும் நிலமும் புனைவுக்குப் பின்னணியாக அமைந்துள்ளன. இம்மூவருடன் வசுமதி என்ற கதாபாத்திரம் குறித்தும் புனைவு விரிவான உரையாடலை நிகழ்த்தியிருக்கிறது. வசுமதி, தேவகியின் நெருங்கிய தோழி. குடும்பம் எவ்வாறு ஒரு பெண்ணை அவளுக்கே தெரியாமல் சுரண்டிக் கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்த வசுமதி கதாபாத்திரத்தை அகிலா இந்நாவலுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். பெண் குழந்தைகள் மீதான பாலியல் மீறல் நெருக்கமான உறவினர்களிடமிருந்தே தொடங்குகிறது என்ற கதையாடலுக்கு தேவகி கதாபாத்திரம் பயன்பட்டுள்ளது. யமுனா நவீன காலப் பெண்ணின் இருப்பை வெளிப்படுத்தும் கதாபாத்திரம். தேவகியை வடிவமைத்தவள் செல்லம்மா. தேவகியின் இன்ப துன்பங்களுக்குக் காரணமாக இருந்தவளும் செல்லம்மாதான். இந்தக் கதாபாத்திரமும் புனைவுக்குப் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கின்றன.

செல்லம்மா நிலவுடைமைச் சமூக கால கட்டத்தைச் சார்ந்தவள். திருச்செந்தூர்தான் இவளது நிலம். ஆனால், நிலம் புனைவில் எவ்வித குறுக்கீட்டையும் ஏற்படுத்தவில்லை. செல்லம்மா, மாமியாரால் தொடக்கத்தில் கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகிறாள். வீடு முழுக்க முழுக்க மாமியாரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மாமியாரின் இறப்பிற்குப் பிறகு கொஞ்சம் ஆசுவாசமும் கணவரின் மறைவிற்குப் பிறகு சுதந்திரமும் கிடைக்கிறது. செல்லம்மா தன்னை அதிகாரம் மிக்கவளாக உணர்கிறாள். இந்தத் தன்மையை செல்லம்மா அவளது மாமியாரிடமிருந்து பெற்றுக்கொள்கிறாள். பண்ணை ஆட்களும் இவளுடைய மகன்களும் இவளுக்குக் கட்டுப்பட்டே நடக்கின்றனர். தவறு செய்த மூத்த மகனை வீட்டைவிட்டே வெளியேற்றுகிறாள். பெண்கள் தங்களது வீட்டை அதிகாரம் செலுத்தும் மையமாகக் கருதுகின்றனர். உண்மையில் ஆண்கள் அந்தப் போதைக்கு பெண்களைப் பழக்கப்படுத்தி அடிமையாக வைத்திருக்கின்றனர். இதனை வேலைக்குச் செல்லும் புதிய தலைமுறையைச் சார்ந்த பெண்கள்தாம் புரிந்துகொண்டனர். அந்த வகையில் செல்லம்மா முதல் தலைமுறையைச் சார்ந்தவள். யமுனா புதிய தலைமுறையின் வார்ப்பு.

மழலைப் பருவத்திலேயே பெண் குழந்தைகள் அவர்களுக்கு நெருக்கமான ஆண்களால் பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். தன் உடல்மீது நிகழ்த்தப்படுவது பாலியல் மீறல் என்பதே அந்தக் குழந்தைக்கு அப்போது தெரிவதில்லை. Good touch, Bad touch பற்றிய புரிதல் சமீப காலங்களில்தாம் பெண் குழந்தைகளுக்குச் சொல்லித் தரப்படுகிறது. அதுவும்கூட எல்லா குழந்தைகளுக்கும் சென்று சேர்ந்திடவில்லை. நெருக்கமான உறவுகளின் தொடுதல் அன்பு சார்ந்த ஒன்றாகவே குழந்தைகள் புரிந்துகொள்கின்றனர். தேவகி அப்படித்தான் தன் தாய்மாமாவின் தொடுதலைப் புரிந்துகொள்கிறாள். உறவுகள்மீது ஏற்கெனவே ஒரு புனித பிம்பம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் புனிதத்தன்மை குறித்துக் குழந்தைகளிடமும் கற்பிக்கப்படுகிறது. செல்லம்மா அப்படித்தான் தன் மூத்த மகனைப் பற்றித் தேவகியிடம் கூறியிருந்தாள். எதிர்பாலின தொடுதல்களைப் பாலியல் விருப்பத்தின் உந்துதலாகவே ப்ராய்ட் அவதானிக்கிறார். இந்தத் தன்மையில் குழந்தைகளுக்குச் சொல்லித் தரப்படுவதில்லை. அளவுக்கதிகமான அன்பில் கொஞ்சம் காமமும் கலந்திருக்கிறது. ஏழு வயதிலிருந்தே தன் மாமனால் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகிறாள் தேவகி. செல்லம்மா நேரில் பார்க்கும்வரை இது தொடர்கிறது. உறவுகள் குறித்த புனிதம் அந்த அளவுக்கு இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதனை ஆண்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்நாவல் இந்தப் புள்ளியில் தீவிரமாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதனுடன் சேர்த்து

வெவ்வேறு பிரச்சினைகளையும் நாவல் கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

தேவகி கனவுத் தொந்தரவுகளால் கடுமையாகப் பாதிக்கப்படுகிறாள். இதற்காக மருத்துவச் சிகிச்சையும் பெறுகிறாள். அந்தக் கனவுகளுக்கான காரணத்தை மருத்துவரும் யமுனாவும் தேடுகின்றனர். வெவ்வேறு மிருகங்கள் அவள் கனவுகளில் வந்து தொந்தரவு செய்துகொண்டே இருக்கின்றன. மிருகங்கள் நம்முடைய நிறைவேறாத ஆசைகளையும் பாலியல் விருப்பங்களையும் குறிக்கும் குறிப்பான்கள் என்கிறது உளவியல். பிறரிடம் பகிர்ந்துகொள்ள இயலாத மனதின் ஆசைகளுக்குக் கனவுகள் உருவங்களைக் கொடுக்கின்றன. அதில் ஒன்றுதான் மிருகம். ஒவ்வொரு மிருகத்திற்கும் தனித்தனி குணமிருக்கிறது. ப்ராய்ட் இந்தக் கனவுகளுக்கு அணுக்கமான காரணங்களைக் கூற முயன்றிருக்கிறார். ஆண், பெண் உடல் குறித்த புரிதல் இல்லாத பருவத்தில் தேவகிமீது நிகழ்த்திய பாலியல் வன்முறை; திருமணத்திற்குப் பிறகு அவளுக்கிருந்த நிறைவேறாத பாலியல் விருப்பங்கள். இவ்விரண்டுமே தேவகியின் கனவுகளுக்குப் பிரதி முன்வைக்கும் காரணங்கள். மனநிலை பாதிக்கப்பட்ட செல்லம்மாவின் இளைய மகனுக்குத்தான் தேவகி வாழ்க்கைப்படுகிறாள். அவனிடமிருந்து இவள் ஒன்றையும் பெறவில்லை. அவன் இறப்பதுவரை அவனைப் பாதுகாக்கும் தாதியாகத்தான் தேவகி பயன்படுத்தப்படுகிறாள். இதுதான் தேவகியின் பிரச்சினை. ‘சந்தோசமாகத்தான இருக்க’ என்ற வசுமதியின் கேள்விக்கான உள்ளர்த்தத்தைக்கூட தேவகியால் புரிந்துகொள்ள முடியவில்லை.

தேவகியின் கணவனான வரதன் குழந்தையிலிருந்தே மனநிலை பாதிக்கப்பட்டவன். ‘திருமணத்திற்குப் பிறகு சரியாகிவிடுவான்’ என்ற வழமையான நம்பிக்கையில் பலரது எதிர்ப்பையும் மீறி தேவகிக்குத் திருமணம் செய்து வைக்கிறாள் செல்லம்மா. ஆனால், வரதன் இறக்கும்வரை அப்படியேதான் இருந்தான். தேவகிக்கு அப்போது முப்பத்தோர் வயது. இடையில் வரதனின் சிகிச்சைக்காகக் கொடைக்கானல் சென்றபோது தேவகிக்கு சுகவனம் என்பவன் அறிமுக மாகிறான். அவனிடமிருந்துதான் ஆணுடல் பற்றிய புரிதலை அறிகிறாள். இதில் அவளுக்கு எவ்வித குற்றவுணர்ச்சியும் இல்லை. ஆனால் அந்த உறவு கொடைக்கானலுடன் முடிந்துபோகிறது. இந்த இடத்தில் பிரதி நவீனத்தன்மையுடன் இருக்கிறது. ஆனால், அதன்பிறகு எதேச்சையாக நடந்த வரதனுடனான உறவில்தான் யமுனா பிறந்தாள் என்று பிரதி கூறுகிறது. இதில் தர்க்க முரணும் தமிழ்ப் பண்பாட்டை மீறிவிடக் கூடாது என்ற நுண்ணுணர்வும் படைப்பாளிக்கு இருப்பதாகவே கருதுகிறேன். இந்த இடத்தில் மரபைக் காப்பாற்ற பிரதி கடும் முயற்சி எடுத்திருக்கிறது. அறநிலை சார்புத்தன்மையை நவீனத்துவம் முழுமையாக நிராகரித்தது. அதே நேரத்தில் மரபான கலைப்பண்பிற்கு நேர் எதிரான அலைகளை உருவாக்குவதையும் சோதனைகளை முன்னெடுப்பதையும் நவீனத்துவம் விரும்பியது. படைப்பாளியின் அறச்சிந்தனையால் நாவல் நவீனத் தன்மையிலிருந்து விலகிவிடுகிறது.

வசுமதியின் கதை தேவகி கதைக்கு நேரெதிரானது. கணவன், மகன், மருமகள், மகள், மருமகன், பேரக்குழந்தைகள் என அனைவருடனும் வாழ்பவள் வசுமதி. வாழ்க்கைப்பட்ட நிலத்தைவிட்டுத் தாண்டாத வாழ்க்கை. வசுமதியின் உலகம் குடும்பம் மட்டும்தான். அப்படித்தான் அவளுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அன்பு அடிமைப்படுத்தும் தன்மை வாய்ந்தது என்பதை வசுமதியின் வாழ்க்கையின் மூலமாகப் பிரதி பகிர்ந்திருக்கிறது. கணவன் முதல் பேரக்குழந்தைகள் வரை காட்டும் அன்பிற்குப் பின்னால் அவர்களுக்கு ஒரு தேவை இருக்கிறது என்பதைக் காலம் கடந்தே வசுமதி புரிந்துகொள்கிறாள். ‘நீ சமைப்பதைப் போல வருமா?’ என்று ஒவ்வொருவரும் வெவ்வேறு தருணங்களில் கூறுகிறார்கள். இந்தப் பாராட்டு தரும் போதையிலிருந்து வசுமதியால் வெளியே வரமுடியவில்லை. அதற்குப் பின்னாலுள்ள உழைப்புச் சுரண்டலை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. தன்னைப் புரிந்துகொள்ள வேண்டிய மகளே தன்னைச் சுரண்டுகிறாள் என்பதைக் காலம் அவளுக்கு உணர்த்துகிறது. தேவகிதான் இந்தப் புரிதலை வசுமதியிடம் ஏற்படுத்துகிறாள். ‘கொஞ்ச காலமாவது உனக்காக வாழ்’ என்பதன் அர்த்தத்தை வசுமதியால் உள்வாங்க இயலவில்லை. விடியற்காலை முதல் இரவு படுக்கும்வரை அவள் வேலை செய்துகொண்டே இருக்கிறாள். ஒருவரும் அவளை ஓய்வெடுக்கச் சொல்லி அறிவுறுத்தவில்லை. ‘என் பிள்ளைகளுக்கும் அவங்களோட பிள்ளைகளுக்கும் ஊழியம் செய்து கொண்டிருக்கிறேன். அப்போது இவர்களுக்கு நான் யார்?’ என்ற கேள்வி வசுமதிக்கு எழுகிறது. வரிசைக்கிரமமாக நினைத்துப் பார்க்கும்போது அனைவரும் இவளை வேலைக்காரியாகவே இதுவரை நடத்தி வந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்கிறாள்.

வசுமதியின் இளைய மகன் சரவணன். பெங்களூரில் வேலை செய்கிறான். அவனுடன்

சென்று சில நாட்கள் தங்கவேண்டும் என்ற ஆசையை வசுமதி ஒருநாள் வெளிப்படுத்துகிறாள். குடும்பத்தில் அனைவரும் பதற்றமடைகின்றனர். வசுமதியின் கணவர் இறந்த பிறகே பெங்களூர் பயணம் அவளுக்குச் சாத்தியமாகிறது. ‘நீ இல்லேன்னா இந்த வீடு என்னவாகும்மா. வயசான காலத்துல புள்ளைகளைப் பாத்துக்கிட்டு பேசாம கெடக்காம இது என்ன ஊர் ஊரா போற பழக்கம்?’ என்று மகன் கேட்கிறான். அப்போது வசுமதிக்கு ஐம்பத்தாறு வயது. கணவனின் இடத்தை தற்போது மூத்தமகன் எடுத்துக் கொள்கிறான். ‘வாழ்க்கையை இவ்வளவு மகிழ்ச்சியாகக்கூட வாழ முடியுமா?’ என்பதையும் ‘தன்னைத் தன் குடும்பம் ஒரு செக்குமாடு போலதான் நடத்தியிருக்கிறது’ என்பதையும் பெங்களூர் வாழ்க்கை அவளுக்கு உணர்த்துகிறது. ஆனால், மீண்டும் தன் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது வீடு பெரிய அளவில் மாறியிருப்பதை அறிகிறாள். தான் ஆட்சிசெய்த இடத்திற்குத் தற்போது மருமகள் வந்திருப்பதை உணர்கிறாள். இந்த வீழ்ச்சியை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வீடு தன்னைவிட்டு வேறொருவர் கைக்குச் சென்றுவிட்டதை அவளால் இயல்பாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பெண்களின் இத்தகைய மனநிலையை ‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’ என்ற சிறுகதையில் அம்பை அருமையாக எழுதியிருப்பார். வீடு தனக்கே தெரியாமல் தன்னைச் சுரண்டுகிறது என்பதைப் பெண்கள் உணர்ந்தே இருந்தனர். ஆனாலும் அவர்களால் அந்த இடத்தைப் பிறருக்கு எளிதில் விட்டுக்கொடுக்க முடியாது என்பதை வசுமதி கதாபாத்திரம் மூலம் அகிலா உணர்த்துகிறார். வீடு தனக்கான அதிகார மையமாகப் பெண்கள் கட்டமைத்துக் கொண்டதன் விளைவாகவும் இதனைப் பார்க்கலாம்.

நவீனத் தன்மைகளை உள்வாங்கிய கதாபாத்திரம் யமுனா. சுய தேர்வுடன் வாழ்பவள். அமெரிக்காவுக்குப் படிக்கப்போன இடத்தில் தமிழகத்தைச் சேர்ந்த ஹரியை விரும்பித்தான் திருமணம் செய்துகொள்கிறாள். ஆனாலும் ஹரியுடன் தன்னால் ஒத்துப்போக முடியாது என்பதை விரைவில் உணர்ந்து கொள்கிறாள். யமுனாவிற்கு இங்கிலாந்தில் வேலை கிடைக்கிறது. ஹரி அமெரிக்காவைவிட்டு வரமுடியாது என்கிறான். தம் விருப்பங்களைத் துறந்து எப்போதும் பெண்கள்தாம் ஆண்களின் பின்னால் செல்லவேண்டி இருக்கிறது. ‘வினையே ஆடவர்க்கு உயிர்’ என்ற மரபிலிருந்து வந்தவர்கள் என்பதால், தன் மனைவியின் விருப்பத்திற்காக எந்தவொரு ஆணும் தன் வேலையை விட்டுவிடத் தயாராக இருப்பதில்லை. இதுதான் கள யதார்த்தம். யமுனா, கணவனா வேலையா என்பதில் வேலையைத் தெரிவு செய்கிறாள். எனவே, தேவகியை அழைத்துக்கொண்டு இங்கிலாந்துக்கு வந்துவிடுகிறாள். மகளைப் புரிந்துகொள்ளும் அம்மாவாகத் தேவகி இருக்கிறாள். யமுனாவும் அம்மாவின் கடந்த காலத் துயரங்களை அறிந்துகொண்டு, அதிலிருந்து அவளை வெளியே கொண்டுவர முயற்சிக்கிறாள். காலமும் நிலமும் யமுனாவிற்கு இத்தகையதொரு வெளியை உருவாக்கிக் கொடுக்கின்றன. திருமண உறவை ஹரியும் யமுனாவும் மனமொத்து முறித்துக் கொள்கின்றனர். இப்படியொரு சமூகம் உருவானால் நன்றாகத்தான் இருக்கும். யமுனாவிற்குக் குழந்தை இல்லை; அதனால் உடனடியாக இப்படியொரு முடிவை அவளால் எடுக்க முடிகிறது. சரவணனும் அவளைத் திருமணம் செய்துகொள்ள முன்வருகிறான். பிரதி சில விஷயங்களில் முன்னோக்கி நகர்ந்தாலும் பண்பாட்டு நெருக்கடிகளையும் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கேற்ப கதையாடலைத் திட்டமிட்டு அமைத்துக்கொண்டிருக்கிறது.

தீவிர எழுத்துக்கும் வெகுசன எழுத்துக்கும் இடையில் ஓர் எழுத்து வகைமை காலந்தோறும் இருந்து வந்திருக்கிறது. மு.வரதராசன், அகிலன், நா.பார்த்தசாரதி, ராஜம் கிருஷ்ணன், லக்ஷ்மி, திலகவதி உள்ளிட்டோர் எழுத்துக்களை இவ்வகைக்குள் அடக்கலாம். இன்றும் இந்த வகைமை இருக்கிறது. அப்படியொரு எழுத்தாகவும் ‘அறவி’ நாவலை வாசிக்கலாம். தீவிரமாகத் தொடங்கிய நாவல், இறுதியில் வெகுசன வெளியில் கரைந்துவிடுகிறது. எடுத்துரைப்பியலில் பிரதியாசிரியர் கூடுதல் சிரத்தையுடன் செயல்பட்டிருக்க வேண்டும். பெண்களின் அன்றாடங்களை எடுத்துரைக்கும்போது படைப்பாளர் தானொரு பெரும் பண்பாட்டின் தொடர்ச்சி என்பதிலிருந்து முழுமையாகத் துண்டித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அது இங்கே நிகழவில்லை. செல்லம்மா, தேவகி ஆகியோரது அக வாழ்க்கை பண்பாட்டுக் கத்தரியால் ஆங்காங்கே நறுக்கப்பட்டிருக்கிறது. அவர்களது தூய்மைக்குப் பிரதி அதிக கவனம் கொடுத்திருக்கிறது. இதெல்லாம் என் தனிப்பட்ட வாசிப்பில் கண்டடைந்த அனுமானங்கள்தாம். பிரதி இதனையும் கடந்து வெவ்வேறு வாசிப்புகளை வாசகர்களுக்கு அளிக்கும். அதற்கும் பிரதியில் இடமிருக்கிறது.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன்செட்டி இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை.**




# சோழ மண்டலக் கடற்கரையின் உணவுப் பண்பாட்டின் ஆவணம்

முனைவர் அ. பகத்சிங, தோழி ர. நிரஞ்சனா ஆகிய இருவரால் கடலோர மக்களிடையே நேர்காணல் செய்யப்பட்டு, மீன் உணவுகள் குறித்த தரவுகளைச் சேகரித்து, தொகுத்து 2025 சனவரி மாதத்தில் உயிர் பதிப்பகத்தின் வெளியீடாகத் தமிழ் ஆய்வுலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ள நூல் "நெய்தல் கைமணம்" என்னும் நூல்.

முனைவர் பகத்சிங் அவர்கள் தற்போது வளர்ந்துவரும் மானிடவியலாளர்களில் குறிப்பிடத்தக்கவர். இவற்றோடு இனக்குழுவரைவியல், நாட்டார் வழக்காற்றியல் துறைசார்ந்த ஆழ்ந்த அறிவு கொண்டவர். பழங்குடி மக்கள் குறித்து நுட்பான ஆய்வுகளை மேற்கொண்டு, இவர்களின் வாழ்வியலை ஆவணப்படுத்திக் கொண்டிருப்பவர்.

உயிர் பதிப்பகத்தின் மூலம் 2019 நவம்பர் மாதத்தில் பகத்சிங் அவர்கள் வெளியிட்ட "வாழும் மூதாதையர்கள் – தமிழகப் பழங்குடி மக்கள்" என்ற நூல் பழங்குடி மக்கள் குறித்து இதுவரை வெளிவந்துள்ள நூல்களிலிருந்து மிகுந்த வேறுபாடுடையது. பழங்குடிகள் குறித்து தகவல்களைச் சேகரித்து, அந்தத் தகவல்களின் அடிப்படையில் நூலாசிரியர் உரையாடுவதாக மட்டுமே அமைவது ஒரு வகையான ஆராய்ச்சி நூல்வகை. ஆனால், முனைவர் பகத்சிங் அவர்களின் நூல் பழங்குடிகள் குறித்து தான் உரையாடுவதோடு, தங்களின் எளிய வாழ்வியலையும், பாரம்பரிய அறிவையும், நுட்பமான காட்டுயிர் பார்வையையும் தாங்கள் வாழும் இயற்கைவியல் சூழலோடு இணைத்து மக்கள் தங்களின் வாய்மொழியிலேயே உரையாடவும் செய்தவர். அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்களை நுட்பமாக தம் நூலில் ஆவணப்படுத்தியவர். பழங்குடி மக்களின் வாழ்வியலை நேரடியாக உரைக்கும் நிலையில் அரிய புகைப்படங்களை இணைத்திருப்பார். இந்தப் புகைப்படங்கள் பழங்குடிகளின்



முனைவர் மு.ஏழுமலை

வாழ்வியல்சார் பன்முகக் கருத்துகளைக் கொண்டு வாசகர்களோடு உரையாடும். மேலும், ஒரு நூல் எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதற்கான முன்னுதாரணமான செயல்பாடாக இந்நூல் அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலை இரண்டு நிலைகளில் நோக்கிப் புரிந்துகொள்ள வேண்டும்.

“நெய்தல் கைமணம்” என்னும் இந்நூலை இரண்டு நிலைகளில் நோக்கிப் புரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாமையாகும். ஒன்று, இந்நூலின் புறநிலை. அதாவது நூல் உருவாக்க முறையியல். இரண்டு, நூலின் உள்ளடக்கம் சார்ந்து பின்பற்றப்பட்டுள்ள ஆவணப்படுத்தியலின் முறையியல். இந்நூலின் புறநிலையை நோக்கும்போது, 1. இந்நூல் என்பது ஒரு சமூகத்தின் ஆவணப்பதிவு என்பதால் நூல் நீண்டகாலம் பழுதடையாமல் இருக்கும் அளவில் கெட்டியான அட்டயைக் கொடுத்திருத்தல். 2. நூலின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ளும் நிலையில் சிறந்ததொரு ஓவியத்தை நூலின் அட்டையில் கொடுக்கப்பட்டுள்ளது. 3. வழுவழுப்பான தரமான தாள்களைக் கொண்டு கருத்துகளை அச்சாக்கம் செய்திருப்பது. 4. நூல் கொண்டிருக்கும் உள்ளடக்கக் கருத்துகளுக்கு ஏற்ப அந்தந்த கட்டுகரைகளிலேயே தெளிவான புகைப்படங்களை சேர்த்திருப்பது. 5. அனைத்து கட்டுரைகளும் தமிழ், ஆங்கிலம் என இரண்டு மொழிகளிலும் இடம்பெற்றிருப்பது ஆகும். இவ்வாறான பல செயல்பாடுகள் நூலுக்குச் சிறப்பை சேர்க்கின்றன.

“நெய்தல் கைமணம்” நூல் குறித்தப் புரிதலின் இரண்டாம் நிலையான உள்ளடக்கம் குறித்த சிறப்பை நோக்கும்போது, இந்த நூலில் முனைவர் அ.பகத்சிங் அவர்களும், தோழி ர. நிரஞ்சனா ஆகிய இருவரும் மிகத் தெளிவான வரையறையோடு மீன் உணவுகள் குறித்த தரவுகளைச் சேகரித்துள்ளனர். மின முக்கியமான கடலோரப் பகுதிகளான எண்ணூர், பழவேற்காடு, காசிமேடு, அடையாறு, புதுச்சேரி மாநிலம் ஆகிய பகுதிகளை தங்களின் ஆய்வுக்கான எல்லைகளாகத் தேர்வு செய்து, அங்கு வாழும் மீனவக் குடும்பங்களை அணுகி அவர்களிடையே புழங்கும் மீன் உணவுகள் குறித்த குறிப்புகளை நுட்பமாக பதிவு செய்துள்ளனர். இத்தகையப் பதிவு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பன்முகங்களை வெளிப்படுத்தும் நிலையில் செரிவான திட்டமிடலோடு செய்யப்பட்டுள்ளது. பேராசிரியர் தொ.ப. அவர்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் உணவுப் பண்பாடு குறித்து விளக்கும்போது, “ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவர்தம் உணவுப் பழக்கவழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும். உணவுப் பழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை, வாழ்நிலத்தின் விளைபொருள்கள், சமூகப் படிநிலை, உற்பத்திமுறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமையும் ” என்று குறிப்பிடுவார். இந்த அனைத்துத் தன்மைகளையும் உள்வாங்கி கள ஆய்வுகளில் இந்நூலாசிரியர்கள் தரவுகளைத் திரட்டியிருப்பது, இந்நூலாசிரியரகள் பெற்றிருக்கும் பன்முகத் துறைசார் அறிவின் அடையாளம் என்றே குறிப்பிடலாம். பழவேற்காடு, எண்ணூர், புதுச்சேரி உள்ளிட்ட இடங்களில் மீனவர்களின் உணவு குறித்தப் பதிவில் அப்பகுதி சார்ந்த வரலாறுகளையும் சூழலியல் சார்ந்த தகவல்களையும் இணைத்து வெளிப்படுத்தியிருப்பது, ஒரு சமூகம் சார்ந்த ஆவணமாக்கலில் மானிடவியலாளர்களும், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களும், இனக்குழுவரைவியல் ஆய்வாளர்களும் கவனம் செலுத்த வேண்டிய இன்றியமையாமைகளை அடையாளப்படுத்தலாக இந்நூலின் உள்ளடக்கக் கருத்துகள் அமைந்துள்ளன.

### மீனவ மக்களின் பாடுகளை உணர்த்தும் ஓர் ஆவணம்.

“சோழ நாடு சோறுடைத்து” என்று பெருமை பாராட்டிக் கொண்டிருக்கும் நாம் தமிழரின் உணவுப் பண்பாடு குறித்தப் புரிதலும் ஆவணப்படுத்தலும் போதாமையாகத்தன் உள்ளது. இந்நூல் சோழ நாட்டின் கடற்கரையில் வாழும் மீனவ மக்களின் உணவுப் பண்பாடு குறித்தப் புரிதலை தமிழ்ச் சமூகத்தினரிடையே விரிவு செய்துள்ளது என்றால் மிகையில்லை. ஞாயிற்றுக் கிழமையென்றால் அனைவருக்கும் அசைவ உணவுநாள் என்று கருதுகிறோம். அந்த அசைவ நாளில் பெரும்பாலும் நம் உணவாக இருப்பது மீன் உணவுதான். இந்த மீன் உணவை விற்பவர்களிடம் நாம் பேசும் பேரம் என்பது நகைக்கக்கூடியதாக அமையும். ஏதோ நாம் கொடுக்கக்கூடிய பணத்தில் மீனவ மக்கள் ஏகபோக வாழ்வை வாழ்ந்துவிடுவதாக எண்ணுகிறோம். விலையை அடித்துப் பேசி பத்து ரூபாய் குறைத்து வாங்கிவிட்டால் மகிழ்ச்சியில் பொங்குகிறோம். ஆனால் அந்த மீன்கள் நம் தட்டுகளில் வருவதற்கு ஆண், பெண், குழந்தைகள் என் மீனவ மக்களின் குடும்பங்கள் படுகின்ற பாடுகளை நாம் உணருவதில்லை. இந்த நூல் மீனவ மக்களின் பாடுகளை உணருவதற்கான ஒரு ஆவணம்.

### மீன்களின் வகையும் மீனவ மக்களின் மொழியும்

இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாறை, வஞ்சிரம், மாவிலாசி,தேளப்பாறை, தூக்குசாசி

பாறை, கானாங்கெளுத்தி, கவலை, மடவை, கலவா, கானாங்கெளுத்தி சிபியன், நெத்திலி, பன்னா, எறா, இறால் உள்ளிட்ட பல வகையான மீன்களின் வகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொட் நண்டு, சேற்று நண்டு, கடல் நண்டு, நத்தை முதலான கடற்கரை உணவுகள் குறித்த விரிவான பதிவை நூலாசிரியர்கள் செய்துள்ளனர். மீன் உணவுகளின் பல வகைகள் குறித்த பதிவுகளில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது என்னவெனில், மீன்களின் வகைகளோடு மீன் உணவுகள் குறித்தும், மீனவர்கள் பயன்படுத்தும் மொழி குறித்தும் பல்வேறு கலைச் சொற்களைக் குறித்தும் ஆய்வுலகத்திற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளதாகும். இந்த மீனவ மக்களின் எளிமையைப் போலவே அவர்களின் உணவும், இலகுவான உணவின் சுவையும், எளிமையான சமையல் குறிப்புகளும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டி என்னும் உணவு குறித்து விளக்கும்போது, மட்டி என்னும் உணவுக்கும் மக்களின் வாழ்வியலுக்கும் உள்ள தொடர்வை விளக்குகிறார்கள். குறிப்பாகத் தலித், ஏழை சமூகத்திற்கான உணவாகவும் வணிகப் பொருளாகவும் எவ்வாறு ஒரு உணவு இருக்கிறது என்பதை இப்பதிவு உணர்த்துகிறது.

### மீனவ மக்களின் நம்பிக்கையும் நேர்மையும் எதிர்கொள்ளும் சிக்கல்களும்

தாழங்குப்பத்தைச் சேர்ந்த சுகுனா என்னும் பெண்ணின் மீன் விற்பனைத் தொழிலைக் குறித்து பதிவு செய்யும்போது “சுகுணா, எளிய மீன் விற்பனையாளர். தன் தொழில் மீது பற்றும், நம்பிக்கையும் நேர்மையும் கொண்டவர். விற்பனை மட்டுமல்லாது மீன் ஆய்ந்து தருவது அவருடைய முதன்மைத் தொழிலாக உள்ளது. நாம் கேட்கும் அளவில் மிக அழகாக மீன்களை வெட்டித் தருவார். மீன் வெட்டுவதை ஒரு கலையாகவே கையாள்பவர். சென்னையின் உள்ளூர் மீன் சந்தைகளில் பலரும் இந்த வேலையைச் செய்கின்றனர். பெரிய கொடுக்குகளைக் கொண்ட நண்டுகளை உடைத்து பிரிக்கவும், பெரிய தோள்பாறை மீனின் தோலை கிழிக்கவும், சிறிய எறாவின் மேற்தோலை பொறுமையாக உரிக்கவும், கடினமான எலும்புகளைக் கொண்ட மீன்களை கத்தியால் வெட்டுவதும் எனப்




நெய்தல் கைமணம் |
அ.பகத்சிங் & ர. நிரஞ்சனா
உயிர் பதிப்பகம் | விலை ரூ. 500

பன்முகத்திறன் இக்கலைக்குத் தேவைப்படுகிறது.” என பதிவு செய்துள்ளார். மேலும் மீனவப் பெண்களின் உடல் வலியையும் பதிவு செய்யத் தவறவில்லை. இவற்றை “இந்த அனைத்து வகை வேலைகளையும் சமாளிக்கக் கூர்மையான அரிவால்மனை ஒன்றே இப்பெண்களுக்கு போதுமான கருவியாக உள்ளது. அரிவால்மனை அவர்களுக்கு பழக்கமான ஒன்றுதான் என்றாலும் அது தொழில்சார் உடல் உடல் பாதிப்புகளையும் தரத்தான் செய்கிறது. நீண்ட நேரம் உட்கார்ந்த நிலையில் கைகளுக்கு அதிக அழுத்தம் கொடுத்து வேலை செய்வதால் தோள்பட்டை, கழுத்துப் பகுதி மிகவும் தேய்மானம் அடைகிறது. மீனின் அளவைப் பொருத்து அவர்கள் உடலில் இருந்து அதிக அழுத்தத்தை கொடுத்து, மீன்களை வெட்ட வேண்டும். இப்பெண்கள் வயதாக ஆக உடல்சார் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்” என்ற பதிவு நேரிடையாகவும் மறைமுகமாகவும் மீன் வியபாரம் செய்யும் பெண்களின் உழைப்பு சார்ந்த பன்முகப் பிரச்சனைகளை நம்மோடு உரையாடுகிறது. மேலும், பல வினாக்களை மீன் நுகர்வோர்களாக மட்டுமே உள்ள நம்மோடு கேட்பதாகவும் உள்ளது.

### உணவுப் பண்பாடு ஒரு போராட்ட ஆயுதமாதல்

பழவேற்காடு மக்கள் தங்களின் உணவுப் பண்பாட்டை அதிகார வர்க்கங்களால் தாங்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் பிரச்சனைகளுக்கான பேராட்ட ஆயுதமாக எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதை, “கட்டுப்பள்ளியில் உள்ள அதானி துறைமுக விரிவாக்கத் திட்டம் ஒட்டுமொத்த பழவேற்காட்டையும் கடலில் முழ்கடித்துவிடுமோ என்ற அச்சம் அம்மக்களிடையே உள்ளது. தங்கள் வாழ்விடத்தைக் காக்க பல்வேறு போராட்டங்களை அம்மக்கள் நடத்தி வருகின்றனர். பழவேற்காட்டின் இயற்கை வளத்தையும் அச்சூழலுக்கு உகந்து வாழும் மக்களின் பண்பாட்டு விழுமியங்களையும் பொது மக்களுக்கும், அரசுக்கும் எடுத்துரைத்து வருகின்றனர். பழவேற்காட்டின் நெய்தல் நிலப் பண்பாட்டுத் தனித்தன்மையை விளக்கி உணவுத் திருவிழா ஒன்றினை 2002இல் நடத்தினர். தமிழ்நாட்டு முதல்வருக்கும், பிற முக்கிய அதிகாரிகளுக்கும் பங்கேற்க அழைப்பு விடுத்தனர். பழவேற்காட்டின் நீர் – நிலத்தோடு நெருங்கிய

தொடர்புடையது எங்கள் பண்பாடு என்பதை நெய்தல் உணவின் மூலம் அதிகார வர்க்கத்திற்கு எடுத்துரைத்துள்ளனர். உணவு எனும் பண்பாட்டு அடையாளத்தைப் போரட்டத்திற்கான ஆயுதமாக அம்மக்கள் பயன்படுத்தியுள்ளனர்.'' என்ற பதிவு ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் உணவுக்கும் பண்பாட்டுக் கட்டமைப்புக்கும் உள்ள தொடர்வை உறுதி செய்வதைக் காணலாம்.

ஒரு குறிப்பிட்டப் பகுதிகளிலிருந்து திருமணமாகி வரும் பெண்கள் வேறொரு பகுதிக்கு வரும்போது அவர்கள் மூலமாக வரும் உணவுப் பழக்கங்களையும், திருமணமாகி வந்த இடத்தில் கற்றுக்கொள்ளும் உணவுப் பழக்கத்தையும் நுடபமாகப் பதிவு செய்துள்ளதன் மூலம் மக்களின் இடம்பெயர்வால் உருவாகும் உணவுப் பண்பாட்டின் இடப்பெயர்வும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீன் குழம்பு, வறுவல், தொக்கு, ஊறுகாய், வடை முதலான உணவு சமைத்தலின் பல வகைகளைக் குறிப்பிட்டுள்ளதோடு, ஒவ்வொரு மீன் உணவுகள் குறித்த குறிப்புகளும், ஒவ்வொரு மீனையும் எவ்வாறு பதப்படுத்த வேண்டும்?, ஒவ்வொரு மீனும் எவ்வளவு நேரம் கொதிக்க வைக்க வேண்டும், எந்நெந்த சூழ்நிலையில் எந்தெந்த மீன்களை உண்ண வேண்டும்?, எவ்வாறு உண்ண வேண்டும்?, மீன்களில் உள்ள சத்துகள் என்னென்ன?, மீன்களில் உள்ள மருத்துவ குணங்கள் என்னென்ன? மீன் உணவுகளை மீனவ மக்கள் எவ்வாறு தங்களின் வாழ்வதாரத்துக்கான வணிகமாக மேற்கொள்கின்றனர்? என்ற பல்நிலையிலான கள ஆய்வாளர்களின் பதிவுகள் மீனவச் சமூகங்கள் குறித்த எவ்வித புரிதலற்று கடந்தபோகும் நம்மை நிறுத்தி இச்சமூகங்கள் குறித்த ஆளுமைகளை உணர்த்துகின்றன.

### துறைசார் அறிவின் வெளிப்பாடு

இந்நூல் இடம்சார் வராற்றுப் பதிவாகவும் வெளிப்படுகிறது. பழவேற்காடு குறித்தப் பதிவு என்பது ஒரு ஆய்வாளர் கொள்ள வேண்டிய சூழலியல்சார் அறிவையும் உறுதி செய்கிறது. இந்நிலையில் பழவேற்காடு பகுதியைக் குறித்து பதிவில் இப்பகுதியில் கிடைக்கும் இறால், மீன், நண்டு,வகைகளுக்குச் சந்தையில் கிடைக்கும் மதிப்பு, மனிதர்களின் உணவு, பொருளாதாரத் தேவைகளுக்கு மட்டுமல்லாது பலவகை வலசைப் பறவைகளுக்கும் புகலிடம் அளிக்கும் இடமாகவும் பழவேற்காடு உள்ளதை இந்நூலாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். இவை ஒரு மானிடவியல், இனக்குழுவரைவியல், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படையான அறிவையும் உணர்வையும் வெளிப்படுத்துகிறது.

பழவேற்காடு மீனவ மக்களையும் அவர்களின் மீன் உணவுகளையும் பதிவு செய்துள்ளதோடு, பழவேற்காடு குறித்த வராற்றையும் காலந்தோறும் அப்பகுதி எதிர்கொள்ளும் அரசியல் நிலைகளையும், மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சனைகளையும தங்களுடைய மைய நோக்கத்தோடு இணைவு பெற்ற பதிவுகளாகச் செய்துள்ளமை ஒரு குறிப்பிட்ட சமூக வெளியில் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் வாழ்வியலை ஆவணப்படுத்தும்போது கவனம் கொள்ள வேண்டிய இன்றியமையாமை ஒரு ஆய்வாளருடைய நேர்மைத் தன்மைக்கும் கடமைக்கும் எடுத்துக்காட்டாகும்.

### கூட்டு உழைப்பு – கூட்டு இயக்கம்

மீன் பிடிக்கும் தொழில் என்பது எவ்வாறு கூட்டுழைப்பாக மனிதர்களின் கூட்டு இயக்கமாகச செயல்படுகிறது என்பதை மீனவர்களின் மீன்பிடி தொழில்முறையை வெளிப்படுத்தும் இடங்களில் தவறாமல் ஆவணப்படுத்தியுள்ளனர் இந்நூலாசிரியர்கள். மீன்பிடித் தொழில் என்பது தனிநபர் செயல்பாடு அல்ல. அவை ஒரு கூட்டுச் செயல்பாடு. பெரும்பாலான மீன் பிடித்தல் இரவுக் காலங்களில் நெடுந்தூரம் கடல் பரப்பில் இயங்க வேண்டும். இத்தகையை மனிதர்களின் உழைப்பையும் கூட்டு இயக்கதையும் புரிந்துகொள்வதற்கு எளிமையான மொழியை நூலாசிரியர்கள் பயன்படுத்தியிருப்பவை மிகக் குறிப்பிடத்தக்க செயல்பாடாகும்.

### ஆய்வாளர்களின் நேர்மை

மானிடவியல், இனக்குழுவரைவியல், நாட்டார் வழக்காற்றியல் துறைசார்ந் ஆய்வுகளிலும், பழங்குடியினர் குறித்த ஆய்வுகளிலும் தகவலாளிகளிடமிருந்து பெறப்படும் தரவுகள் இன்றியமையாகும். இந்நிலையில் ஒரு ஆய்வாளர் ஒரு குறிப்பிட்ட சமூக மக்களிடம் கள ஆய்வு மேற்கொண்டு தரவுகளைச் சேகரித்தவுடனோ, அல்லது ஆய்வாளரின் ஆய்வுத் திட்டம் முடிவடைந்தவுடனேயோ ஆய்வாளருக்கும் தகவலாளர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்ற நிலைதான் பெரும்பாலும் ஆய்வியல் சூழலில் உள்ளது. இதேப்போன்று ஆய்வாளர்கள் தகவலாளர்களை தகவல்களை கொடுக்கும் கருவிகளாக மட்டுமே பார்க்கும் நிலை ஆய்வுச் சூழலில் உள்ளது. தாங்கள் ஆய்வுக்குட்படுத்தும் சமூகத்தின் வாழிடம், வரலாறு, பண்பாடு முதலானவை சிக்கலுக்கு உட்படும்போது எவ்வித கலக்கமும் இல்லாமல் ஆய்வாளர் கடந்துபோதலும் நாம் காணும் ஆய்வாளர்களின் நேர்மையாக உள்ளது. ஆனால், இந்நூலாசிரியர் முனைவர் அ.பகத்சிங் அவர்களின் பதிவு ஒரு

ஆய்வாளர் கொள்ள வேண்டிய ஆய்வு நேர்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

"கடலோரப் பகுதி என்பது நகரமயத்தின், தொழிற்வளர்ச்சியின் பலிகடாவாகவே பார்க்கப்பட்டு வருகிறது. இங்குள்ள அனல் மின் நிலையங்களும் துறைமுகங்களும் பிற ரசாயண தொழிற்சாலைகளும் எவ்விதச் சுற்றுச்சூழல் விதிகளையும் வட்ட வரையறைகளையும் பின்பற்றுவதில்லை. இங்கு வாழும் மனிதர்களையும் உயிர் சூழலையும் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. இதனைச் சூழலியல் இனவாதமாகவே பார்க்க வேண்டும். இந்த சூழலியல் பாதிப்புகளை, வாழ்வியல் இழப்புகள் பற்றிப் பொதுச் சமூகத்திற்கு எவ்வளவு புரிதல் உள்ளது என்ற கேள்வியும் எனக்குள் உள்ளது. கடலோரச் சூழல், வாழ்வு, உழைப்புப் பற்றிப் போதிய புரிதல் இன்றி நெய்தல் நிலத்தின் வாழ்வு மீது மதிப்பு எப்படி ஏற்படும்?. கடலோர மக்களுக்கும் பொதுச் சமூகத்திற்கும் இடையே உள்ள இந்த இடைவெளியே, ஆளும் வர்க்கத்தின் திட்டமிட்ட அழித்தொழிப்பு முயற்சிக்கு ஒத்திசைவாக அமைந்துவிட்டது" என்ற பதிவு வாசகர்கள் மிக கவனமாகவும் உணர்ந்தும் நோக்க வேண்டும். கடலோர பகுதியின் மீது மட்டுமல்ல அனைத்து நிலைகளின் மீதான புரிதலும் பொதுமக்களுக்கு இன்றியமையாததாகும். இப்புரிதலற்ற, அனைத்தையும் எளிதாக நமக்கென்ன என்று கடந்துபோகும் மக்களின் பொதுபுத்திதான் மக்களைச் சுரண்டும் அதிகார வர்க்கத்தினருக்கான முதலீடாக மாறுகிறது என்பதையும் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு இந்நூலாசிரியரின் வினாக்கள் நமக்குப் பயன்படுவதாக உள்ளது.

இந்நூலாசிரியர்கள் தங்களுடைய இந்நூல் முயற்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது, "நாம் சாப்பிடும் தட்டில் உள்ள மீன் எங்கிருந்து வந்தது. அவை நம் சமையல் அறைக்குள் வந்து சேர்ந்ததில் அடங்கியுள்ள உழைப்பைப் பற்றி அனைவரும் அறிந்துகொள்வது மிக அவசியம். சோழமண்டலக் கடற்கரையின் பிரதான உணவுப் பண்பாட்டினை ஆவணப்படுத்தும் முயற்சியின் தொடக்கமாக இந்நூல் அமைகிறது" என்ற பதிவு மிக முக்கியமானதாகும். மீனவ மக்களின் மீன் உணவு குறித்த பண்பாட்டு ஆவணப்படுத்துதல் என்பதை அனைத்து சமூக மக்களின் உணவுப் பண்பாடு குறித்த ஆவணப்படுத்துதலாக தொடர வேண்டும். இத்தொடர்ச்சி தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் மீட்டெடுப்பதற்கான ஆயுதமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய மாற்றத்திற்கு இந்நூல் ஒரு மிக முக்கிய ஆவணமாக அமையும். இந்நூலை வாசித்தும் விமர்சித்தும் தமிழ்ச் சமூகத்தினரிடையே பரவலாக்கம் செய்வோம். உணவுப் பண்பாட்டின் மூலம் ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டை மீட்டெடுப்பாம், பாதுகாப்போம்.

●

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர், உதவிப் பேராசிரியர், து.கோ. வைணவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை.**

## அஞ்சலி



**நடிகர், எழுத்தாளர்**

**ராஜேஷ்**

**அவர்களின் மறைவுக்கு**

**'நியூ செஞ்சுரியின்**

**உங்கள் நூலகம்'**

**அஞ்சலியைத்**

**தெரிவித்துக்கொள்கிறது.**



அன்பாதவன்

# மாய, யதார்த்தக் கரைகளூடே பயணிக்கும் வரலாற்று நதி

ஒரு நல்ல நாவலுக்கு மிக அடிப்படையான தேவை கதை தான். நாவலென்பது வெறும் சம்பவத் தொகுப்பு மட்டுமே அல்ல. வெறும் நிகழ்ச்சிகளாலும், காட்சி வர்ணனை மற்றும் கதாபாத்திரங்களின் உரையாடல் மட்டுமல்ல.

நாவலென்பது நிஜ நிகழ்வுகளின் மீது கட்டப்படுகிற புனைவு! அஃதோர் அனுபவத்தை நுணுகி ஆராய்வது, பாத்திரங்களின் மன உணர்வுநிலையின் உட்புகுந்து நுணுகிப் பார்ப்பது.

நாவலாசிரியன் பணி மனிதர், நிலம், பொழுது, ஆகியவற்றின் நுட்பங்களை விவரிப்பதோடு நின்றுவிடாமல் மனித மனங்களில் உருவாகும் ஒரு பிரச்னை... முரண்... கருத்து... முடிச்சு ஆகியவற்றை விவாதிப்பது மட்டுமன்றி மானுட விசித்திரங்களை விந்தையாகச் சொல்வது. அஃது எதார்த்தத்தை பகுத்தறிவின் மூலம் கட்டுப்படுத்தி புதிய எதார்த்தத்தை படைப்பது கூடவே மானுட தரிசனங்களின் வெளிப்பாடு. மொத்தத்தில் நாவலென்பது மானுடரை ஆற்றுப்படுத்துகிற மருந்து.



‘ஒரு பிரதியின் தளத்திற்குள் மற்ற பிரதிகளில் இருந்து கொள்ளப்படும் பல்வேறு உரைகள், வசனங்கள், வெட்டிக்கொண்டு, தமக்குள் ஒன்றை ஒன்று சமன் செய்துகொள்ளுகின்றன. ஒரு பிரதியை வாசிக்கும் வாசகன் அது தரும் அர்த்தங்களை மட்டும் திரட்டிக் கொள்ளாமல் பலதரப்பட்ட பிரதிகளுக்கு ஊடாக குறுக்கும் நெடுக்கும் பயணித்து அர்த்த இடைவெளிகளை நிரப்பி, மாறுபட்ட புதிய பொருள் கோடல்களைப் பெருக்கிக் கொள்கிறான். மேலும் பல் பிரதிநிதித்துவம் என்பது வரன்முறையான செல்வாக்கு மரபு என்பது என்னும் கருத்துக்களை உடைக்கிறது. ஒரு பிரதி வேறு பல இலக்கிய, இலக்கியமல்லாத பிரதிகளின் பன்முக இடமாற்றங்களால் உருவாகிறது. ஆகையால் இங்கு இலக்கியம் என்பதற்கான தனி மதிப்பும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு பன்மைத்துவ மதிப்பைப் பெறுகிறது’ என்கிறார் பேராசிரியர் க.பூர்ணச்சந்திரன்.

‘ஆலம்கிர் ஔரங்கசீப் எனுமிந்த வரலாற்று நாவலை திறம்பட உணர மதிப்பாய்வு கீழ்வரும் அம்சங்களைக் கொண்டு அவதானிப்போம்: இந்தக் கூறுகளில் கவனம் செலுத்துவதன் மூலமும், கூடவே தோழர் புலியூர் முருகேசனின் கூடுதல் விளக்கங்களும் வரலாற்று நாவல்கள் பற்றிய விரிவான பார்வையைப் பெற வழிகோலும்.

**வரலாற்று துல்லியம் :**

வரலாற்று நாவல் அது பிரதிநிதித்துவப்படுத்தும் காலகட்டத்தை எவ்வளவு சிறப்பாகப் படம்பிடித்துள்ளது என்பதை மதிப்பிட கடந்த காலத்தின் உணர்வு, பழக்கவழக்கங்கள் மற்றும் சமூக நிலைமைகளை யதார்த்தமான விவரங்களுடனும் வரலாற்று உண்மைகளுக்கு நம்பகத்தன்மையுடனும் வெளிப்படுத்துகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

வழக்கமான, சமூகப் பின்னணியில் கதைகள் எழுதும் புலியூர் முருகேசன், வரலாற்றுப்பதிவுகளோடு சரித்திரப் பின்னணியில் நாவல் எழுதும் எண்ணம் தோன்றியதெங்ஙனம்?

“உலக வரலாற்றை மார்க்சிய வழியில் ஆய்வு செய்து எழுதியவர்களே எனக்கு உவப்பானவர்கள். அதுதான் சிறந்த பார்வையென்று கருதுகிறேன். குறிப்பாக, மன்னராட்சிக் காலங்களைப் பொற்காலமென பொதுப்புத்தியிலிருந்து சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இங்கு எல்லா ஜாதியினரும் தம்மை ஆண்ட ஜாதி எனப் பெருமை பேசும்போது அந்த மன்னர்கள் யாருக்கு அடிமையாக இருந்தார்கள் என்பதை வரலாற்று ஆய்வின் வழி தேடிப்போய் எழுதப்பட்ட நாவல் ‘படுகைத் தழல்’. நம் தமிழ் மண்ணின் பெருமிதங்களில் முதன்மையாகப் பேசப்படும் மன்னர் ராஜராஜ சோழன், பிராமணர்களின் மீதான அதீத பிரமையில் சிக்கிக் கிடந்ததையும், அதன் பொருட்டு எளிய உழுகுடிகள் மேல் நானூற்றுக்கும் அதிகமான வரிகளை விதித்து அடித்துப் பிடுங்கியதையும் படுகைத் தழல் நாவலில் பதிவு செய்தேன். வரலாற்றை எழுதுவதில் இன்னுமொரு பெரும்பிழையை வரலாற்றாசிரியர்கள் செய்திருக்கிறார்கள். செய்யப் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுதான் வரலாற்றைத் திரித்து எழுதுவது. அப்படி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், இந்துத்வ பெரும்பான்மையும் கைகோர்த்துக்கொண்டு திரித்து எழுதிய வரலாற்றில் முதலாவதாக மன்னர் ஔரங்கசீப் இருக்கிறார். அவரைப் பற்றி அவ்வளவு அவதூறுகள். ஒன்றிற்குக் கூட ஆதாரமில்லை. மேலும், அவர் மத நல்லிணக்கம் பேணுபவர் என்பதற்கு இருக்கும் நூற்றுக்கணக்கான ஆதாரங்களில் ஒன்றைக்கூட இவர்கள் வெளிக்காட்டவில்லை. இது வரலாற்றுத் துரோகம். இந்தப் பின்னணியில்தான் மன்னர் ஔரங்கசீப் பற்றி மிகத் துல்லியமான தரவுகளோடு வரலாற்று நாவல் எழுத வேண்டும் என்ற எண்ணம் உண்டானது"

**கதாபாத்திர மேம்பாடு :**

சரித்திரப் பின்னணி நாவலில் கற்பனை மற்றும் வரலாற்று கதாபாத்திரங்களின் சித்தரிப்பையும், கதாபாத்திரங்களின் நடத்தைகள் மற்றும் ஆளுமைகள் அவற்றின் வரலாற்று அமைப்பால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதையும், அந்தச் சூழலில் அவை நம்பக்கூடியவையா என்பதையும் வாசகப் பார்வை உன்னிப்பாக நோக்குதல் சிறப்பு

ABOUT AURANGAZEB நூலின் கபடத்தை அம்பலப்படுத்துவது தான் இந் நூலின் நோக்கமா..? ‘லாவேஜ்’ மற்றும் விக்ரம் ஜோஷியை எப்படிக் கண்டடைந்தீர்கள்..?

‘ஆலம்கிர் ஔரங்கசீப்’ நாவலில், முரண்பட்ட மனிதர்களாக வரலாற்றின் வழி நெடுக மோதிக்கொள்ளும் லாவேஜும், விக்ரம் ஜோஷியும் கைக்கொண்டிருப்பது அவரவர் வர்க்கச் சார்பான தீவிர அரசியலை அப்படியான வர்க்கச் சார்பு

அரசியல் மோதலை உரையாடலில் கடத்தவும், கதையில் நிகழ்த்தவும் மாய யதார்த்தவாதம் உதவுகிறது. ஔரங்கசீப்பின் பேரன் உறவுமுறையான 'மிர்ஜா தபக்கூர்' எனும் பெண்பித்தனின் முகச்சாயலிலும் விக்ரம் ஜோஷியே தென்படுவதாக லாவேஜ் கண்டறிவது மாய யதார்த்தவாத சொல்முறைக்கு ஒரு உதாரணமாகக் கூறலாம். '*About Aurangazeb*' என்ற நூலே இந்நாவலில் ஒரு புனைவுதான். ஆனால், பல வரலாற்றாசிரியர்கள் ஔரங்கசீப்பைப் பற்றி' பலப்பல தவறான புனைவுகளைப் புனைந்துள்ளார்கள். அதன் ஒட்டுமொத்த சாராம்சமாக இருக்கட்டுமே என இந்தத் தலைப்பை அந்நூலுக்குச் சூட்டினேன். ஆனால், அந்நூலுக்குள் இருக்கும் ஔரங்கசீப் பற்றிய அத்தனை அவதூறுகள் பல வரலாற்றாய்வாளர்கள் வெவ்வேறு இடங்களில் எழுதியிருப்பவைதான். அவைகளைத் தொகுத்து '*About Aurangazeb*' நூலாக்கி, பின் அவைகளை ஆதாரங்களுடன் மறுத்திருக்கிறேன்.

**சூழல் :**

நாவலில் சூழலின் முக்கியத்துவத்தை மதிப்பிட, அந்த அமைப்பு கதையின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளதா, அது வரலாற்று காலகட்டத்தைப் பற்றிய வாசகரின் புரிதலை மேம்படுத்துகிறதா என்பதைத் தீர்மானிக்கவும், அந்த அமைப்பு உண்மையான இடமா அல்லது கதையை திறம்பட ஆதரிக்கும் ஒரு கற்பனைப் படைப்பா என்பதையும் வாசகன் கவனிக்க வேண்டியிருக்கிறது.

"ஒரே பிரதி பல பிரதிகளின் ஊடாட்டங்களைப் பெற்று கலைந்தும் பிறழ்ந்தும் (Non Linear) அமைய இம்முறை தளம் அமைக்கிறது. இதைப் பின் நவீனத்துவம் வரவேற்கிறது." (திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும். ந.இரத்தினக்குமார்). 'ஆலம்கிர் ஔரங்கசீப்' புதினத்தை நான் லீனியர் வடிவில் படைக்கும் யோசனை உதித்தது எப்படி..?

'ஆலம்கிர் ஔரங்கசீப்' நாவலின் கட்டமைப்பு உருவாக்குவதற்கு முன்னமே, இது நான் லீனியர் வடிவத்தில் இருந்தால்தான் சரியாக இருக்கும் என முடிவு செய்தேன்... 400 ஆண்டுகளுக்கும் மேலாக முன்னும் பின்னும் போய்ச் சில கதைகளைப் பேசவேண்டியிருந்தது. மேலும், அயர்லாந்துப் போராளியான 'லாவேஜ்' எனும் புனைவு வரலாற்றாய்வாளன் வழி நாவல் நகரும்போது அனுப்பில்லாத இருவேறு காலகட்டங்களை வாசிக்க வாய்ப்பிருக்கும் எனக் கருதினேன். கதைகளுக்குள் இசங்களை பயன்படுத்தி எழுதிப் பார்ப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். மேஜிகல் ரியலிசத்தைத் தன் கதைகளில் அற்புதமாகப் பயன்படுத்தியிருப்பார் ஃபோர்ஹே. அதற்காகவே, அவருடைய பல கதைகளைத் திரும்பத் திரும்ப வாசிப்பேன்.

**கதை மற்றும் கருப்பொருள்கள்:**

புனைவு வரலாற்றாய்வாளன் அல்லது வாசகன் வரலாற்றுப் புதினத்தின் கதை அமைப்பு மற்றும் கருப்பொருள்களை ஆழ்ந்து ஆராய முற்படுதல் நன்று. நாவல் பரந்த கருப்பொருள்களை ஆராய வரலாற்று நிகழ்வுகளைப் பயன்படுத்துகிறதா என்பதையும், சித்தரிக்கப்பட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் மனித அனுபவத்தைப் பற்றிய நுண் பார்வையை நாவல் வழங்குகிறதா என்பதையும் கருத்தில் கொள்ளுதல் மிக முக்கியம்.

ஔரங்கசீப்பின் ஆட்சி தென்னாடு வரை பரவியிருந்ததே வரலாறு. எனினும் இப்புதினம் தக்காணத்துக்குத் தெற்கே திரும்பவில்லை, அதேநேரம் திருப்பத்தூர் கோட்டை, மற்றும் அந்தமான் அத்தியாயம் புதினத்தோடு ஒட்டாமல் இருப்பதை உணரமுடிகிறதா?

ஔரங்கசீப்பின் ஆட்சி தமிழ்நாட்டில் செஞ்சி, மதுரை, தஞ்சைவரை பரவியிருந்தது. உண்மைதான். ஔரங்கசீப் மத நல்லிணக்கம் பேணுபவர், பெண்களை மதித்தவர், குடி, கஞ்சா, சூது ஆகியவற்றைத் தடை செய்தவர், உடன்கட்டை ஏறுவதைத் தடுத்துச் சட்டமியற்றியவர், இந்துக் கோயில்களுக்கு மான்யம் அளித்தவர் போன்ற வரலாற்று உண்மைகளைப் பேசுவதற்கு தக்காணத்தோடு நின்று விடுகிறது கதையாடல்.

பெரிய மருது, சின்ன மருது ஆகிய இருவரும் பிரிட்டிஷாரால் கொல்லப்படுதல்: சின்ன மருதுவின் மகன் துரைச்சாமி பினாங்கில் கொடுஞ் சிறைத்தண்டனை அனுபவிக்கச் செய்தல் ஆகிய நிகழ்வுகளை இந்நாவலில் இணைக்க இரண்டு காரணங்கள் உள்ளன. 'ஆலம்கிர் ஔரங்கசீப்' தன்னிடம் பிணையக் கைதியாக வைத்திருந்த, சிவாஜியின் பேரன் சாஹூவை சர்வ சுதந்திரமாக நடத்தியதோடு மட்டுமல்லாமல், சிறுவனாக இருந்த சாஹூ வளர்ந்து ஆளாகும்வரை பிரியத்தோடும், கண்ணியத்தோடும் வளர்க்க ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள், தங்களை எதிர்த்த சின்ன மருதுவின் மகனை, தனிமைச் சிறையில் கொடுஞ் சித்திரவதைகளை அனுபவிக்கச்

செய்து கொன்றார்கள். இந்த வேறுபாட்டை சுட்டிக் காட்டவே இணைத்தேன்.

மேலும், சின்ன மருதுவின் மகன் துரைச்சாமிக்கு மெய்க்காப்பாளராக இருந்த 'ஷேக் உசேன்' எனும் இஸ்லாமியரும் துரைச்சாமியுடன் சேர்ந்து சிறைக்கு அனுப்பப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார். 'ஷேக் உசேன்' சின்ன மருதுவின் மகன் மீது பிரியமும் மரியாதையும் கொண்டவர். இன்றைய காலகட்டத்தில், பெரிய மருது சின்ன மருதுவின் வழி வந்தோர் இந்துத்வ அடையாளங்களுக்குள் தங்களைப் பொருத்திக்கொண்டு, இஸ்லாமியர்களை வெறுக்கப் பார்க்கிறார்கள். ''ஷேக் உசேன்' பற்றி வாசிக்கும் யாரேனும் ஒரு நல்உள்ள மருது சகோதரர் வழி வந்தோர், இந்துத்வ அடையாளத்திலிருந்து தம்மை விடுவித்து, இஸ்லாமியருடன் இணக்கம் பேணினால் அது போதும்.

**இலக்கியத் தரம்:**

நாவலின் கலைத் தரத்தை மதிப்பிட, அதன் உரைநடை, வேகம் மற்றும் அதன் சமகால வரலாற்று புனைகதை வகைகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம்

ஔரங்கசீப் குறித்து தமிழில் வெளிவந்துள்ள பிற நூல்களை ஒப்பிட வாசித்தீர்களா?

தமிழில் 'மன்னர் ஔரங்கசீப்' பற்றி இந்திரா பார்த்தசாரதியின் நாடகம், சாருவின் 'நான்தான் ஔரங்கசீப்' நாவல், எஸ்.ராமகிருஷ்ணனின் 'இடக்கை' நாவல், மதன் எழுதிய 'வந்தார்கள் வென்றார்கள்' போன்ற நூல்கள் ஔரங்கசீப்பை ஒரு கொடுங்கோலனாகவே சித்தரிக்கின்றன. மதவெறியராகவும், பதவி ஆசை பிடித்தவராகவும்தான் இவர்கள் அவரவர் மொழியில் எழுதியிருக்கிறார்கள். என்னுடைய அரசியல் புரிதலில் நான் இவர்களிடம் முரண்படுகிறேன். ஏனெனில் இவர்களின் நோக்கம் மீண்டும் ஔரங்கசீப்பை பொதுப்புத்தியில் உள்ளதை அப்படியே மீளுருவாக்கம் செய்வதுதான் அனால், பேராசிரியர் ஹெச்.அமீர் அலி அவர்கள் எழுதிய 'ஔரங்கசீப்' ஆய்வு நூலும், செ.திவான் அவர்கள் எழுதிய 'வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்' ஆய்வு நூலும் இதை அப்படியே புரட்டிப் போட்டு விட்டன. வரலாற்றின் இண்டு இடுக்கிலிருந்தெல்லாம் ஆதாரங்களைத் திரட்டி, ஔரங்கசீப் உண்மையில் யார்? என்பதைத் தெளிவுபட எழுதப்பட்டிருக்கின்றன இந்த இரண்டு நூலிலும்.

"ஒப்பீட்டு நிலையில் இந்துத்துவா கட்டமைத்திட விரும்பும் அகண்ட பாரதத்தின் பின்னால் ஒளிந்திருக்கும் வைதிக சனாதனத்தின் குரலை அடையாளம் காண வேண்டியது அவசியம். இல்லாவிடில் பெரும்பான்மையினர் சம்மதத்துடன் நாட்டில் பாசிஸம் பற்றிப் படர்ந்திடும் அபாயமுள்ளது. ஜனநாயகத்தின்மீது அக்கறையுள்ளவர்கள் இன்று எல்லாத் தளங்களிலும் தீவிரமாக வேலை செய்திட வேண்டிய நெருக்கடியுள்ளது.

அந்த வகையில் புலியூர் முருகேசன் வரலாற்றின் பக்கங்களுக்குள் பயணித்து எழுதியுள்ள 'ஆலம்கிர் ஔரங்சீப்' வெறுமனே நாவல் மட்டுமல்ல. கடந்த காலத்தின் வழியாகப் பயணித்துச் சமகால அரசியல் வாழ்க்கை குறித்து விசாரணையைத் தொடங்கிட உதவிடும் அரசியல் பிரதி என்றும் 'ஆலம்கிர் ஔரங்கசீப்' நாவலை வாசிக்க முடியும்." என முன்னுரையில் குறிப்பிடும் ந.முருகேசபாண்டியன் கருத்தோடு உடன்பாடுண்டா.?

அரசியலற்ற கலைப்பிரதியால் ஒரு துளியும் பயனில்லை என்பது என் நிலைப்பாடு.அரசியலற்ற எழுத்து வகைமையே கலை எனச் சொல்வதின் பின்னாலும் ஒரு அரசியல் இருக்கிறதல்லவா? 'ஆலம்கிர் ஔரங்கசீப்' நாவல் பற்றி ஓரிரு விமர்சனங்கள் வந்துள்ளன. இன்னும் நாவல் பரவலாகப் போய்ச்சேரவில்லை.

இதுவரை பேச இயலாத ஒரு பிரிவினர் தங்கள் வாழ்வைக் குறித்துப் பேச வைத்திருப்பது இந்த நாவலின் வெற்றி, கூடவே ஔரங்கசீப் என்னும் மதப்போர்வை போர்த்திக்கொண்டு முகம் மறைத்த வரலாற்றால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட ஒரு ஆட்சியாளன் குறித்த விரிவான வரைபடமாக வாசகர் கரங்களில் தவழ்கிறது.

எதார்த்த எழுத்தின் பின்னணியிலான உரையாடல்களோடு நான் லீனியர் வகையிலான கதை சொல்ல இந்த நாவலை சமகாலத் தன்மை கொண்டதாக ஆக்குகிறது மேலும், புதுமைத்தன்மை கொண்டதாக ஆக்குகிறது என்பதையும் மறுக்க இயலாது.

புலியூர் முருகேசனின் ஆலம்கிர் ஔரங்கசீப் நாவல் இவ்வாண்டின் மிகச் சிறந்த கலை இலக்கிய வெளிப்பாட்டின் ஒரு வகையாக அமைந்திருப்பதை உறுதியாகச் சொல்லலாம்

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**





# கண்ணகி

## பகவதியான வரலாறு

இளஞ்செழியன் ச.

பண்டையத் தமிழர் பல வகைப்பட்ட வழிபாட்டு மரபுகள் உடையவர்களாக விளங்கியுள்ளனர். பண்டையத் தமிழகம் என்பது இன்றைய கேரளம், ஆந்திரம், கர்நாடாகம், தமிழ்நாடு முதலான பகுதிகளை உள்ளடக்கியதாகும். இந்நாடுகளில் நிலவிய வழிபாட்டு முறைகளில் திணை, தொழில், சமூக வாழ்வியல் சார்ந்த கூறுபாடுகள் அமைந்திருந்தன. அந்த வகையில் சங்க காலம் முதல் இன்றுவரை தொன்றுதொட்டு வழங்கிவரும் வழிபாட்டு முறைகளில் ஒன்றே கண்ணகி வழிபாடு. இவ்வழிபாட்டு முறைகளில் கண்ணகியின் பெயர் மாற்றம் பெற்றிருக்கலாம். இருப்பினும் கண்ணகி தொடர்பான தொன்மம் அவற்றினூடே இழையாடுவதை நம்மால் அறிந்துகொள்ள முடியும். சிலப்பதிகாரம் இயற்றப்படுவதற்கு முன்பும் இயற்றப்பட்ட பின்பும் மக்கள் வாழ்க்கையில் கண்ணகி பற்றிய மரபானது எந்த வகையில் ஆதிக்கம் செலுத்திவருகின்றது என்பதை ஆராய்வதாக 2023-இல் வெளியான 'சிலப்பதிகாரமும் கண்ணகி வழிபாடும்' எனும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியரான ப. ஜெயகிருஷ்ணன் அவர்கள் தமிழகத்தினை அடுத்துள்ள பசுமை கொஞ்சும் கேரள மாநிலம் திருவனந்தபுரத்திலுள்ள கேரளப் பல்கலைக்கழகத்தின்

தமிழ்த்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். இந்நூலானது வர்ணனைகள் அதிகமில்லாமல் தகவல்களை அள்ளித்தரும் ஒரு தகவல் களஞ்சியமாகவே காணப்படுகின்றது. மக்கள் வாழ்க்கையில் அமைந்துள்ள நாட்டுப்புறக் கதையாடல்களில் காணப்படும் கண்ணகி பற்றிய தொன்மங்களைத் தொகுத்தளிக்கும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் வேறு என்ன சிறப்பு இருக்கிறது? எனக் கேட்பின் இதுவரை நாம் கற்பனையிலும் நினைத்துப்பார்க்காத கண்ணகி, கோவலன் ஆகியோரின் பல்வேறு பரிணாமங்களைக் கண்முன் நிறுத்துகின்ற ஓர் ஆய்வுப்பார்வையினைப் படிப்போரின் முன் வைக்கின்றது.

சிலப்பதிகார காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே கண்ணகி வழிபாடானது தமிழகம் தாண்டி பல்வேறு இடங்களில் பரவி இருந்துள்ளது. இதனை 'ஒருமுலை இழந்த திருமாவுண்ணி' முதலான வழக்குகளை வைத்து தெரிந்துகொள்ள முடியும். குறிப்பாக அவற்றுள் 'கண்ணகி பாண்டிய மன்னனைப் பழிவாங்க அவனுக்கு மகளாகப் பிறந்தவள்' என்று தமிழகக் கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. 'தாருகனைப் பழி வாங்கவே காளி பிறப்பெடுத்தாள், ஆனால் பழி வாங்குதல் பாண்டிய மன்னனையேயாகும்' இதனைக் கேரளத்து மணிமங்களா தோற்றப்பாட்டு, பழங்குடியின மக்களின் நாட்டுப்புறப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. (தாருகனைப் பாண்டியனாகவும் கண்ணகியைக் காளியாகவும் கருதுகின்ற மரபும் உண்டு) – அ.கா பெருமாள் (கேரளத்தில் கண்ணகி வழிபாடும் கொடுங்களூர் கோவிலும்) 'காளி கோவிலில் வெட்டுண்ட காளி பக்தனான எண்ணெய் வணிகனே கோவலானகப் பிறந்தான்' என்பதாகவும் வேறுசில கதைப்பாடல்கள் அமைந்துள்ளன. சீர்மா எனும் பகுதியில் வழங்கும் கதையானது 'மாதவிக்குப் பதில் ஏழு சப்த கன்னியர் கோவலன் மீது விருப்பம் கொள்வதாகவும் கோவலனான பொன்மகன் மதுரைக்குச் சென்று அங்குக் கொல்லப்பட்டதாகவும், அவன் இறப்பிற்குக் கண்ணகி நீதி கேட்கிறாள் என்றும் இறுதியில் இருவரும் தெய்வமாகின்றனர்' என்பதாகவும் அமைந்துள்ளது.

பிற மாநிலங்களில் குறிப்பாகக் கர்நாடகாவில் கண்ணகியின் கற்பிற்கு இரங்கிய சிவபெருமான் வெட்டுண்ட கோவலனை உயிருடன் எழுப்பி அவர்கள் இருவரும் தம் ஊர்சென்று நலமாக வாழ அருள் புரிந்ததாகக் கண்ணகி கதையானது திரிபடைந்து வழங்குகின்றது.

சிலப்பதிகாரம் குறித்தும் கண்ணகி வழிபாடு குறித்தும் தமிழகம் தாண்டி பல்வேறு மாநிலங்களிலும் இன்னும் சொல்லப்போனால் பல்வேறு நாடுகளிலும் பலவிதமான கதைகளும், நம்பிக்கைகளும் மக்களிடையே நிலவி வருகின்றன. அவ்வகையில் கேரளத்திலும் கண்ணகி பற்றிய தொன்மம் பல்வேறு வடிவங்களில் வழங்கி வருகின்றது. அதனைப் பற்றியும் பகவதி வழிபாடு கண்ணகி வழிபாட்டோடு எவ்வகையில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்பதனைப் பற்றியும் களஆய்வின் வழி மிக விரிவாகப் பேராசிரியர். ப. ஜெயகிருஷ்ணன் பேசியுள்ளார்.

## எடுத்துரைப்பு முறை


எளிமையான தமிழில் அனைவருக்கும் புரியும் வகையில் சான்றாதாரங்களோடு நூலினை முன்னோக்கி விரித்துரைக்கும் ஆசிரியர் இந்நூலில் விளக்கமுறைத் திறனாய்வையும், வரலாற்றுமுறை அணுகுமுறையினையும் பின்பற்றியதோடு சில இடங்களில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள கண்ணகை வழிபாட்டு முறைகளைப் பற்றிக் குறிப்பிடுமிடங்களில் ஒப்பீட்டு முறையில் ஆய்வினை மேற்கொண்டு செல்கின்றார். 'நீதியரசனால் தண்டிக்கப்பட்டு, மழுவரசனால் கொல்லப்பட்ட செய்தி' என்பன போன்று எதுகை, மோனையாகச் சில செய்திகளைக் குறிப்பிடுவதும் ஒவ்வொரு பாடல் வகைகளைப் பற்றிக் குறிப்பிடுவதும் கண்ணகி கதையானது சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள விதத்தினையும் விளக்கிக் கூறியுள்ளது மிகவும் சிறப்பு. இவற்றோடு சில சொற்களுக்குப் பல பொருண்மைகளை விளக்கிச் செல்லுதலுமாக நூலின் பாங்கானது விரிந்து செல்கின்றது.

ஆசிரியர் தனது ஆய்வு நூலின் உள்ளடக்கத்தை நான்கு இயல்களாகப் பகுத்து விரிவாக விளக்குகிறார்.

சிலப்பதிகாரமும் நாட்டுப்புறக் கூறுகளும் எனும் முதல் இயலில் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள நாட்டுப்புறக் கூறுகள் குறித்தும் ஒவ்வொரு பாடல் வகைகளிலும் சிலப்பதிகாரக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ள விதத்தினையும் விளக்கிக் கூறுவதாகவும் அதனோடு மாதவி ஆடிய பதினொரு ஆடல்களை விளக்கியும் சிலம்பில் காணப்படும் சாதாரண எளிய நாட்டுப்புற மக்களின் வாழ்வியலினையும் வேட்டுவர்களின் கொற்றவை வழிபாடு, ஆய்ச்சியர்களின் கண்ணன் வழிபாடு, குன்றக் குறவர்களின் முருகன் – வேலன்- வள்ளி வழிபாடு, தாய் தெய்வ வழிபாடு முதலான வழிபாட்டு முறைகள் பற்றியும் கொற்றவை

வழிபாடு பத்தினி வழிபாடாக மாறியமை குறித்தும் சிலம்பில் வரும் நம்பிக்கைகள், சடங்குகள், கனவுகள், தீயநிமித்தங்கள் முதலானவற்றையும் குறிப்பிட்டுச் செல்கிறார்.

இரண்டாவது இயலான கேரளத்தில் கண்ணகி கோயில்களும் பகவதி வழிபாடுகளும் எனும் பகுதியில் நீண்ட கடற்கரையும் காயல்களும் அழகிய மலைகளும் நிரம்பிய பூமியமான கேரளத்தில் நிலவிய, கண்ணகித் தொன்மமானது எவ்வகையில் கதையாகவும், கதைப்பாடலாகவும் மக்களிடையே நிலவி வருகின்றது என்பதையும் ஆரிய நம்பூதிரிகள் கேரளத்தில் குடிபெயர்ந்தபோது, கண்ணகி வழிபாடனது பகவதி வழிபாடாக உருமாறி வைதீக வழிபாட்டு முறையினை ஏற்றுக்கொண்டதையும் கொடுங்களூர் பகவதி, பாலக்காட்டுப் பகுதியில் பகவதி போன்ற செய்திகள் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரம் குறிப்பிடும் கோயில் மேற்கூரையின் அமைப்பின்படி கட்டடப்பட்ட திருவனந்தபுரத்திலுள்ள ஆற்றுக்கால் பகவதியம்மன், இடுக்கி மாவட்டம் பெருமலையிலுள்ள பழங்குடி மக்களிடையே காணப்படும் மலையாள பகவதி, மங்கலாதேவிக் கோட்டத்திலுள்ள மங்கலா தேவிக் கோவில் ஆகிய தலங்களின் வரலாற்றில் எந்தவகையில்




**சிலப்பதிகாரமும் கண்ணகி வழிபாடும்**
**ப.ஜெயகிருஷ்ணன்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் | விலை: ரூ. 210**

கண்ணகியின் தொன்மம் கலந்துள்ளது என்பதனைக் குறிக்கின்றது. மேலும் அந்தக் கோயில்கள் உருவான கதைகளையும் அங்கு வழிபட வரும் மக்களின் நம்பிக்கைகளையும் அதன் வழிபாட்டு மரபுகளையும் பற்றி குறிப்பிடுவதோடு கேரளத்தில் முதன்முதலாகப் பகவதிக்குக் கோயில் எழுப்பிய இடமான கொடுங்களூர் கோயிலினைப் பற்றியும் அதன் புவியியல் காரணங்களையும் பகவதி கோயில்களில் பாலைமரம் பெற்றுள்ள முக்கியத்துவம் குறித்தும் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

மூன்றாவது இயலான தமிழ்நாட்டில் கண்ணகி கோயில்களும் வழிபாடுகளும் எனும் பகுதியில் கண்ணகி வழிபாடு கேரளம், தமிழ்நாடு, கர்நாடகம், இலங்கை ஆகிய இடங்களில் காணப்படுகின்றது என்பதனையும் தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களாகத் திருச்சியின் உறையூர், தஞ்சையிலுள்ள செங்காளாச்சி அம்மன், பெரம்பலூரிலுள்ள சிறுவாத்தூர், கருவூரிலுள்ள வஞ்சியம்மன், மதுரையிலுள்ள செல்லாத்தம்மன், சென்னையிலுள்ள வட்டபுரி அம்மன் ஆகிய அம்மன் வழிபாட்டு முறைகள் அனைத்துமே கண்ணகியின் தொன்மத்திலிருந்தே வந்தவை என்பதையும் அக்கோயில்களின் வரலாற்றினையும் யாரால் அங்குக் கண்ணகிக்குக் கோயில் எடுப்பிக்கப்பட்டது என்ற செய்திகளையும் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

இலங்கையில் கண்ணகி வழிபாடு எனும் நான்காவது பகுதியில் கண்ணகி வழிபாடு இலங்கை மக்கள் மத்தியில் அவர்களது பண்பாடு, பிரதேச வாழ்வியல், சமூக நடைமுறைகள் ஆகியவற்றிற்கேற்ப மாறி, விரிவாகி, நெகிழ்வுத்தன்மையுடன் காணப்படுகின்றது. அனுராதபுரம், கண்டி, நவகமுவ, மாதளை முதலான இடங்களிலுள்ள கண்ணகிக் கோயில்கள், தமிழ்ப் பகுதிகளான மட்டக்களப்பு, அம்பாறை, வன்னி, திரிகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் முதலான இடங்களில் வழங்கப்பட்டு வரும் கண்ணகி வழிபாடுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளதோடு சிங்கள மக்கள் 'பத்தினி அம்மன் கண்ணகியின் வடிவமெடுத்து மூன்று கண்களுடன் பிறந்த கொடிய பாண்டிய மன்னனை அழித்ததாகக் கருதுகின்றனர். இதனோடு நவாலி, அனுராதபுரம், கண்டி, மாதளை, யாழ்ப்பாணம், முதலான இடங்களில் உள்ள கண்ணகிக் கோயில்கள் குறித்தும் கண்ணகிக் குறித்தான சிங்கள கதைகள் குறித்தும் சிங்களத்தில் வெளிவந்துள்ள கண்ணகி பற்றிய நூல்களைக் குறித்தும் ஆசிரியர் இவ்வியலில் விளக்கிச் செல்கின்றார்.

இந்நூலின் மையக் கருத்துக்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்படலாம்,

1. கேரளத்தில் காணப்படும் பெரும்பான்மையான கோயில்கள் கண்ணகி அம்மனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டவைகளெனவும் ஒவ்வொரு நம்பிக்கைக்குப் பின்னும் கண்ணகி தொடர்பான கதைகளே காணப்படுவதும் மார்க்கண்டேய புராணத்தில் வரும் தாருகன் கதையானது கேரளக் கலைகள், வழிபாட்டு முறைகள், சடங்குகள் போன்றவற்றில் பெரிதும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளதையும் அறிய முடிகின்றது.
2. தமிழகத்தில் மட்டும் அல்லாமல் இனம், மொழி, நாடு கடந்து பரவிய கண்ணகிக் கதையானது பல இடங்களில் வாழ்ந்த மக்களிடையே அதன் வடிவம் சிதைந்து பல்வேறு உருக்கொண்டு இலக்கிய வடிவமாகிய போது, நடந்த சில சம்பவங்களை ஒருங்கிணைத்து இளங்கோ காப்பியமாகப் படைத்தார்.
3. மலையாளம் செம்மொழி உயர்வு பெற பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் ஆகியவை எவ்வகையில் காரணமாக அமைந்துள்ளன என்பதனையும் குறிப்பிட்டுச் செல்கிறார்.
4. பகவதி வழிபாடு முதலில் நம்பூதிரிகளிடையே உருவாகி பின்னர் கடற்கரை, சமவெளிப்பகுதிகளில் பரப்பப்பட்டு அதன்பின் முல்லை நிலத்துக் குறும்பர்களால் பிற மலைவாழ் மக்களிடையே சென்றடைந்திருக்கலாம்.
5. வண்ணான் சாதியினர் தங்களைக் கண்ணகியின் குழந்தைகளாகக் கருதுகின்றனர் எனவும் 'விண்ணேற்றிப்பாறை' என்ற சொல்தான் 'வண்ணாத்திப்பாறை' என மருவியதாகவும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்,
7. பொள்ளாச்சி வட்டம் பரம்பிக்குளம் பகுதியிலும் அதோடு தொடர்புற்று காணப்படும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த முதுவான் மக்கள் கண்ணகியை வழிபடுகின்றனர். தமிழகத்துக் கண்ணகி தமிழீழத்தில் கண்ணகை அம்மனாகவும், கேரளத்தில் பகவதியாகவும் பெயர் மாற்றம் பெற்று வழிபாட்டுத் தெய்வமாக உருமாறி விளங்குகிறாள்.

என்பன போன்ற செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்நூலினைப் படிக்கும் போது நூலில் பாதிக்கு மேல் கேரளத்தினைப் பற்றியும் அங்கு வழங்கிவரும் கண்ணகித் தொன்மங்களைக் குறித்தும் நூலாசிரியர் விளக்கிச் சென்றமையைக் காண முடிகின்றது. இந்நூலினைப் பாராட்டி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தொன்மைசார் நூலுக்கான 'தோழர். கே. முத்தையா விருது' வழங்கி சிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இறுதியாக இந்நூலினை படித்து முடிக்கும்போது கேரளத்தின் கோயில்களைப் பற்றியும் கண்ணகி பகவதியான வரலாற்றினையும் வாசகர்களுக்கு மனதில் பதிய வைக்கும் என்று நம்புகிறேன். ●

**கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம்,**
**காரியவட்டம் வளாகம், திருவனந்தபுரம்.**





**கட்டுரை**

# திருநங்கைகளின்

## வாழ்வியலும் முன்னேற்றமும்

**முனைவர் தி.சங்கீதா**

திருநங்கைகள் புறக்கணிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட சமூகமாக இந்தியாவில் மட்டும் அல்ல உலகம் முழுவதும் பார்க்கக்கூடிய நிலையில் உள்ளனர். திருநங்கைகள் சமூகத்தின் விளிம்பு நிலையில் காணப்படுகிறார்கள், திருநங்கைகள் பற்றிய ஆய்வு என்பது அரிதாகவே உள்ளது. சமூகத்தால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள், அலட்சியமாக புறக்கணிக்கப்படுகிறார்கள். திருநங்கைகள் நம் சமூகத்தின் ஒரு அங்கம் என்பதை நாம் உணர வேண்டும். மேலும், பாலின சார்பு இல்லாத ஒரு சமூகத்தை நிறுவ வேண்டும். நம் வாழ்வியலிலும், கலாச்சாரத்திலும் அவர்களின் பங்கு, மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்து வாழும் வழிமுறையை ஏற்படுத்த வேண்டும். திருநங்கைகளின் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சி, காலப்போக்கில் அவர்களின் நிலைப்பாடு மற்றும் இந்து புராணங்களில் அவர்களின் இருப்பு, திருநங்கைகளுக்கான அரசியலமைப்பு விதிகள், கல்விக் கொள்கைகள் மற்றும் வடிவமைக்கப் பெற்ற நலத் திட்டங்கள்

போன்றவற்றை விரிவாகவும், தெளிவாகவும் இக்கட்டுரை உள்ளடக்கியுள்ளது. இருபத்தியோராம் நூற்றாண்டிலும் திருநங்கைகளுக்கு கல்வி என்பது கனவாகவே உள்ளது. திருநங்கைகளுக்கு கல்வி கிடைக்கப்பெறின், அவர்கள் கண்ணியத்துடனும், மரியாதையுடனும், நேர்மையுடனும், வாழ்க்கையை வாழமுடியும் எனும் பரிந்துரையை இக்கட்டுரை ஆணித்தரமாக எடுத்துக்காட்டுகின்றது

**முன்னுரை**

பல நூற்றாண்டுகளாக சாதியத்தால் கட்டுண்டு கிடக்கும் தலித் மக்களின் விடுதலைக்காகவும், ஆணாதிக்கத்தில் சிக்குண்டு அனைத்து சுதந்திரத்தையும் இழந்து தவிக்கும் பெண்களின் விடுதலைக்காகவும் ஒட்டுமொத்த மனித சமூகமே புறக்கணிக்கின்ற மூன்றாம் பாலினமாக திருநங்கையரின் விடுதலைக்காகவும் போராடிக் கொண்டே இருக்கும் நிலையைத்தான் இன்றுவரை பார்க்கிறோம்.

> **"பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்".**
>
> **- டாக்டர் அப்துல் கலாம்.**

நம்மில் பெரும்பாலானவர்களுக்குப் பிறப்பு சம்பவமாக அமைகிறது. ஆனால், சிலருக்கு அந்தப் பிறப்பு கூட வெறும் சம்பவத்திற்கு குறைவானதாக அமைந்துவிடுகிறது. அப்படி பிறப்பால் வஞ்சிக்கப்பட்டு வாழ்நாள் முழுவதும் உலகில் இருந்து தள்ளி வைக்கப்பட்டு, எப்படியோ வாழ்ந்து மடியும் மனிதர்கள் பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரை. சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட திருநங்கைகள் மீது உள்ள அக்கறையும் மதிப்பும் அன்பும் இக்கட்டுரைக்கான மையப்புள்ளி.

**பெயர்க் காரணம்**

தமிழ் இலக்கியத்தில் பெண் தன்மை மிக்கவர் 'அலி' என்றும் ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிக்கவர் 'பேடி' என்றும் குறிப்பிடப்பட்டனர் (அன்னி தாமசு, 2002, ப.26). திருநங்கைகள் அரவானுக்கு மனைவியாக தாலிகட்டி அறுப்பதால் அரவாணி என்று பெயர் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. சாதி மதங்களை கடந்தவர்களாக திருநங்கையர் கருதப்பட்டாலும், அரவாணி என்னும் சொல்லாடல் இந்து சமயத்தை பிரதிபலிப்பதாக உள்ளது. விழுப்புரம் மாவட்டம் கூவாகம் கிராமத்தில் நடைபெற்ற கூத்தாண்டவர் விழாவில் நடந்த அழகிப் போட்டிக்கு தலைமை ஏற்ற விழுப்புரம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆர். இரவி ' அரவாணி' என்ற பெயரை முன்மொழிந்தார் (விழுப்புரம் 2. 5. 1998).

''திருநங்கையர்'' 'திரு' என்பதற்கு மரியாதைக்குரிய என்று பொருள். 'நங்கை' என்பது பெண்ணைக் குறிக்கும். திருநங்கையர் என்பது பெண்ணில் சிறந்தவள் என்று விளக்கம் கொண்டது. திருநங்கை எனும் சொல் சமயம் சாரா, இன அடையாளம் அற்ற பொதுப் பெயராக அமைகிறது. அலி, அரவாணி என்று அழைக்கப்பட்ட அவர்களை திருநங்கையர் என்று பெயர் மாற்றினார் நமது முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி. (திருநங்கை, திருநம்பி ஆகிய இரு பிரிவினருக்கும் பொதுவாக 'திரு.நர்' என்று அழைக்கலாம் என ஆல்கா. பி.ஆரேன் குறிப்பிட்டார். (தி இந்து, சனவரி 17, 2016)

**உயிரியல் மாற்றங்கள்**

சமூகத்தில் சுமார் 10 ஆயிரம் பேரில் ஒருவருக்கு குரோமோசோம்களில் ஏற்படும் இணைவில் திருநங்கையர் உருவாகின்றனர். இது இயற்கையான அறிவியல் நிகழ்வு என்கிறார் வீ. அரசு (மகராசன், 2007, ப.126) அறிவியலாளர்களின் கருத்துப்படி திருநங்கையர் பால் ரீதியாக மரபணு அடிப்படையில் இயற்கையாகவே பிறப்பதாகவும், மானுடவியலாளர்கள் கருத்துப்படி சமூகச்சூழலால் உருவாக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. திருநங்கையருக்கு உள்ளுணர்வு மருத்துவம் (Insight Therapy), ஆதார மருத்துவம்( Supportive therapy) நட்புறவு மருத்துவம் ( Relationship Therapy ) போன்றவை மேற்கொள்ளப்பட்டால் தவறான வழிகாட்டுதலால் உடலும் உள்ளமும் பாதிப்பு அடையாமல் தன்னம்பிக்கையுடன் வாழ வழி கிடைக்கும்.

## திருநங்கையர் வழி மாறும் தருணம்:

சொந்த வீட்டினர், உறவினர், ஆசிரியர், நண்பர்கள் என சமுதாயத்தில் அனைவருமே ஒதுக்கித் தள்ளுகின்றபோது, தனக்கான உறவுகளைத் தேடி 16 முதல் 22 வயதில் வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். எதிர்பாராத பேருந்து சந்திப்பில், ரயில் நிலையங்களில், கடைவீதிகளில், ஊர் விழாக்களில் திருநங்கையர் சந்திக்கின்றனர். பிறரோடு இணைந்த பின் பெரும்பாலும் மும்பை, தில்லி, பூனா, கொல்கத்தா போன்ற வட மாநிலங்களுக்கு பயணிக்கின்றனர். அங்குதான் கிருஷ்ணரின் அவதாரம் என்ற நம்பிக்கையில் திருநங்கையர் மதிக்கப்படுகிறார்கள்.

## இலக்கண இலக்கியங்களில் திருநங்கையர்

அரண்மனை பணிப்பெண்ணாக, ராணியின் அந்தப்புர காவலராகவும் திருநங்கைகள் பணியாற்றியிருக்கிறார்கள். அரசரின் அரண்மனையின் அந்தப்புரத்தில் ராணிக்கு காவல் மற்றும்

தோழியாகவும் திருநங்கைகள் இருந்திருக்கிறார்கள் என்ற வரலாற்றுப் பதிவு காணப்படுகிறது. அரச குடும்பங்களின் அந்தரங்கங்கள் ரகசியங்களும் அறிந்தவர்களாகவும், அரச குடும்பங்களுக்கு விசுவாசமாகவும், திருநங்கைகள் கௌரவமான பல பதவிகளிலும் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

திரைப்படத்தில் திருநங்கையர் பங்கு, இரண்டு விதத்தில் சித்தரிக்கப்படுகின்றனர்

திருநங்கையர் திருநங்கையாக நடிப்பது,

திருநங்கையர் போல ஓர் ஆண் வேடமிட்டு நடிப்பது,

காஞ்சனா திரைப்படத்தில் கருணையும் அன்பும், பாசமும் கொண்ட கதாபாத்திரம் உண்மையான திருநங்கையின் உடல் மொழியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னேறும் எண்ணம், கல்வி, அநீதியை எதிர்க்கும் போர்க்குணம் என மிகச் சிறப்பாக பதிவு செய்கிறது.

திருநங்கையர் மனிதாபிமானத்தோடு சித்தரித்த முக்கியமான படம் மணிரத்தினம் இயக்கத்தில் உருவான பம்பாய் படமாகும். பம்பாய் மதக்கலவரத்தில் சிக்கித்தவிக்கும் குழந்தைகளை காப்பாற்றுவதும் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதும் ஒரு திருநங்கை. திருநங்கைக்கு சாதியோ, மதமும் இல்லை என்பதை பொறுப்புணர்வோடு அத்திரைப்படம் பதிவு செய்தது.

**திருநங்கையர் தினம்**

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு திருநங்கைகளின் சமூக பாதுகாப்பைக் கருதி அவர்களின் பிறப்பை வலியுறுத்தும் வகையில் ஏப்ரல் 15ஆம் நாளை திருநங்கையர் தினமாகக் கொண்டாட அரசாணை எண்:27, 26.02.2011. பிறப்பித்து திருநங்கைகளை சிறப்பித்துள்ளனர்.

**சமச்சீர் கல்வி**

தமிழக அரசின் சமூக நலத்துறை 2006 ஆம் ஆண்டில் பள்ளி, கல்லூரிகளில் பாலின அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கையை தடை செய்யக்கூடாது என அறிவித்து மூன்றாம் பாலினமாக கல்லூரி சேர்க்கை விண்ணப்பத்தில் ஆண், பெண், திருநங்கையர் என குறிப்பிட்டு அதை செயல்படுத்தியும் உள்ளது (தினமலர், மே.24,2008). சமச்சீர் கல்வித் திட்டத்தில் (2011) ஒன்பதாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத் திட்டத்தில்' 'திருநங்கையர் வாழ்வியல்' பற்றிய பாடம் இடம் பெற்றுள்ளது

**வாக்காளர்களின் உரிமை**

திருநங்கைகளை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முதன்முதலாக உத்தரவிட்டவர் முன்னாள் தேர்தல் அதிகாரி டி.என்.சேஷன். இவர் ஆண்களுக்கு 'M' என்றும், பெண்களுக்கு 'F' என்றும் குறியீடுகள் உள்ளது போலவே அரவாணிகளை 'U' என்று குறிப்பிடலாம் என்ற ஆலோசனையைக் கூறியுள்ளார். 2009 -ஆம் ஆண்டில் இந்தியாவின் வாக்களிக்கும்படி அமைப்புகளில் திருநங்கைகள் தங்கள் பாலியல் நோக்கு நிலையை ' மற்றவர்கள்' என்று தேர்வு செய்ய அனுமதித்தது. 2014ஆம் ஆண்டு இந்திய உச்சநீதிமன்றம் திருநங்கைகளை மூன்றாம் பாலினமாக அங்கீகரித்து, மூன்றாம் பாலினம், சமூக அல்லது மருத்துவ பிரச்சனை அல்ல, மாறாக மனித உரிமைப் பிரச்சனை (நீதிபதி கே.எஸ். ராதாகிருஷ்ணன், 2014) என குறிப்பிடப்பட்டுள்ளது.

**திருநங்கைகளின் கோரிக்கைகள்:**

அரசு மற்றும் தனியார் துறையில் உள்ள கல்வி நிறுவனங்களிலும், தொழில் நிறுவனங்களிலும் ஒரு சதவீத இட ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகளாக திருநங்கைகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

காவல் நிலையத்தில், விமான நிலையத்தில், வெளிநாட்டு தூதரகத்தில் திருநங்கைகளை சோதனை செய்ய திருநங்கையரையே நியமிக்க வேண்டும்.

பள்ளி, கல்லூரிப் பாட நூல்களில் திருநங்கையர் வாழ்வியல் பற்றிய நல்ல புரிதல் உள்ள பாடங்களை வைக்க வேண்டும். மூன்றாம் பாலினத்தவர் பற்றிய சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கல்வியை பாடத்திட்டத்தில் கொண்டு வர வேண்டும்.

திருநங்கைகளுக்கு கல்வி இலவசமாக, உயர்கல்வி வரை அரசே ஏற்க வேண்டும்.

**திருநங்கைகளின் வாழ்வியல் மாற்றம்**

எந்த நாடாக இருந்தாலும் பாலியல் தொழில் தான் திருநங்கையரின் முக்கியத் தொழிலாக இருந்திருக்கிறது. திருநங்கைகளின் மொத்தத் தொகையில் 84% விபசாரத்தில் ஈடுபடுகின்றனர். இந்த நிலை மாறி இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் பல திருநங்கைகள் படித்தவர்களாக இருப்பதால் இழிதொழிலான பாலியல்தொழில், பிச்சை எடுத்தல் போன்றவற்றை விடுத்து மாற்றுத் தொழில்

செய்யும் எண்ணம் திருநங்கையர் இடையே ஏற்பட்டிருக்கிறது. கல்வி ஒன்றே திருநங்கைகளின் வாழ்வை மாற்ற முடியும் என்பதற்கு சான்றாக,

### தமிழ்நாட்டு திருநங்கைகளின் சாதனைகள், பன்முக ஆளுமை சில துளிகள்:

- சபீனா பிரான்சிஸ் - TATA கல்வி நிறுவனத்தில் முனைவர் பட்டம் TNUANA - வில் பணிபுரிகிறார்
- நாடகக் கலைஞராக திருநங்கை நர்த்தகி நடராஜ் மத்திய அரசின் பத்மஸ்ரீ (2019) விருது பெற்றுள்ளார். தமிழக அரசின் கலைமாமணி விருதும் பெற்றுள்ளார்
- பிரியா பாபு எழுத்தாளர், இவரின் மூன்றாம் பாலின முகம்(2008) எனும் நாவல், நந்தனம் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு (2010-2011) மூன்றாம் பருவத்திற்கு பாடமாக வைக்கப்பட்டுள்ளது. மேலும் பெரியார் விருதினை பிரியா பாபு பெற்றுள்ளார்.
- ஆல்கா. பி. ஆரோன்: பி.ஏ. ஆங்கில இலக்கியம், எம். ஏ. பொது நிர்வாகம் மற்றும் கணினி பட்டப்படிப்பு படித்துள்ளார். ஐந்து மொழிகள் தெரிந்தவர்.
- கல்கி, பி.ஏ.இதழியல் மற்றும் மக்கள் தொடர்பு பட்டப் படிப்பை முடித்தவர். வெளி நாட்டினரரோடு ஆங்கில நாடகம் நடித்தவர், தமிழ் கலாச்சாரத்தை அமெரிக்கர்களுக்கு பறைசாற்றியவர். திருநங்கைகளுக்கான அழகான திருமண வலைதளம் உருவாக்கியவர், வாழ்நாள் சாதனையாளர் விருது 2009 இல் பெற்றவர்.
- பிரித்திகா யாஷினி- முதல் திருநங்கை சப் இன்ஸ்பெக்டர்.
- சத்யஸ்ரீ சர்மிளா- தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராகப் பதவி ஏற்றுள்ளார்.

### தேசியக் கல்விக் கொள்கை (NEP 2020)

தேசியக் கல்விக் கொள்கையில் அனைவருக்கும் தரமான கல்வி பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. சமமான கல்வி, பிறப்பு மற்றும் பின்னணி காரணமாக எந்த ஒரு குழந்தையும் பின்தங்கி இருத்தல் கூடாது என்பதே தேசியக் கல்விக் கொள்கையின் நோக்கம். திருநங்கையரை 'சமூக பொருளாதார ரீதியாக, பின்தங்கிய குழு (SEDG's) Socio Economic Disadvantaged Group என்ற அடிப்படையில், (எஸ். சி, எஸ்.டி, சிறுபான்மையினர், ஓபிசி களுடன், திருநங்கைகளையும் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளது. திருநங்கைகள் மற்றும் பெண்களுக்கு கல்வி, சுகாதாரம், மிதிவண்டிகள், உதவித் தொகை வழங்கப்படும். மாநில அரசுகள் பெண்கள் மற்றும் திருநங்கையர் காண மேம்பாட்டு திட்டங்களை நிறுவி, நிவர்த்தி செய்யவும், சமூகம் சார்ந்த தலையீடுகளை மேற்கொள்ளவும், நிதி உதவி மத்திய அரசால் வழங்கப்படும். SEDG's எனும் பின்தங்கிய குழுவில் திருநங்கைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### முடிவுரை

திருநங்கைகள் அடையாளமற்றவர்கள் என்ற நிலை மாறி, 21 ஆம் நூற்றாண்டில் சமூகரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். கல்வி நிலைகளில் அவர்கள் பங்களிப்பு குறைவாக இருப்பினும், அரசாங்கமும் சமூக ஆர்வலர்களும் திருநங்கைகளின் கல்விக்காக பெரிதும் பாடுபடுகின்றனர். விண்ணப்ப படிவங்களில் மூன்றாம் பாலினத்திற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது போல், அனைத்து துறைகளிலும் திருநங்கைகளுக்கான உரிமைகளை வழங்க வேண்டும். இந்தியா போன்ற வளரும் நாடுகளில், தீண்டாமை, மத வேறுபாடுகள், போன்ற தீய எண்ணங்களை மக்களிடமிருந்து அகற்றப்பட்டது போல, திருநங்கைகள் மீது உள்ள தவறான எண்ணங்களையும், அவர்களை கையாளும் முறைகளையும் நாம் மிக கவனமாக மேற்கொள்ள வேண்டும். வரும் காலங்களில் மாணவர்களும், சமுதாயமும் உள்ளடக்கிய கல்வி முறையைக் கையாள வேண்டும். உள்ளடக்கிய கல்வி என்பது அனைத்து குழந்தைகளும் எந்தவித பாரபட்சமும் இன்றி ஒரே வகுப்பில் கல்வி கற்க வேண்டும். இதுபோல் ஒரு கல்வி முறையே நமது புதிய கல்விக் கொள்கை 2020, வலியுறுத்துகிறது. புதிய கல்விக் கொள்கையை பின்பற்றி நாம் திருநங்கைகளுக்கான அனைத்து உரிமைகளையும் மீட்டெடுக்க வேண்டும். திருநங்கைகளின் உயர்வுக்காகவும் வாழ்க்கைக்காகவும் கல்வியாளர்கள் அனைவரும் கூடி பாடுபடுவோம் என உறுதிமொழி ஏற்க வேண்டும்.

### துணைநூற் பட்டியல்


- அருண். மோ. உடலியல் பெண் மனதளவில் ஆண்: பெண்கள் குறித்து தமிழ் சினிமாவின் பிம்பம், படச்சுருள், அடையார், சென்னை, நவம்பர் 2015.
- அண்ணிதாமசு (2000) தமிழர் சமூகவியல் சில பார்வைகள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
- மகராசன், ( தொ .ஆ), (2007), அரவாணிகள் உடலியல், உளவியல், வாழ்வியல், தோழமை வெளியீடு, சென்னை.
- மகராசன், (2016) கழகத்தை முன்னிறுத்தும் அரவாணியின் குரல், புதிய காற்று இதழ்.


●


**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், ராஜஸ்தான் மத்தியப் பல்கலைக்கழகம்.**

அறிமுகம்




# குறவர் சமூகப்

## பண்பாட்டு அவலங்கள்



ச. கார்த்திக்

தமிழ்ச் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் புரையோடிக் கிடக்கிற சடங்கு முறைகள் ஏராளம். அதில் சில சடங்கு என்ற போர்வையில் மக்களிடையே நிலவுகின்ற அபத்தங்களும் மூடநம்பிக்கைகளும் முன்னோர்களின் குருட்டுத்தனமான பண்பாட்டு எச்சங்களும் இருக்கின்றன. அவற்றை மழைப்பாறை நாவலில் எழுத்தாளர் பாண்டியக் கண்ணன் பதிவு செய்து இருக்கிறார். பெண்கள் உடல்களின் இயற்கையைச் சடங்கு முறைக்கு உட்படுத்தி அதைத் தீட்டு என்று மாற்றி அதனால் வரக்கூடிய சடங்கு முறைகளை தமிழ்ச் சமூகம் பல்வேறு சாதிகளிலும் பல்வேறு விதமான சடங்கு முறைகளைக் கையாளுகின்றன. இதில் 1980களில் விருதுநகர் வட்டாரங்களில் வாழ்ந்த குறவர் இன மக்கள் தன் சமூகத்தில் பிறந்த பெண் குழந்தைகள் பருவம் அடைந்தவுடன் தன் உறவினர்களை அழைத்து சடங்கு செய்கின்றனர். அதில் தாய் மாமன் முறை முறையாக மேளதாளத்தோடு வரவேற்கப்பட்டு 11 வரிசை தட்டோடு சீர் கொண்டு வந்த மாமன்மார்கள் அதில் ஏதாவது குறை இருக்கிறதா என்று ஊரு சபையில் கேள்வி கேட்ட பிறகு வள்ளுவர் வந்து குறி சொல்கிறார்.

பருவமடைந்த பெண்ணின் நேரத்தைக் கணக்கிட்டு அந்தப் பெண்ணுக்கு எந்தத் திசையில் வைத்து தலையில் தண்ணீர் ஊற்ற வேண்டும் எந்த பக்கம் குச்சில் கட்ட வேண்டும் என்று சொன்ன நிமித்தம் பார்த்த அந்த வள்ளுவருக்கு பணம் கொடுக்கும் போது, அந்தப் பணத்தை வள்ளுவர் கையால் வாங்க மறுத்து தரையில் கீழே வைக்கச் சொல்லி பணத்தில் தண்ணீரைத் தெளித்து வள்ளுவர் கையில் எடுக்கிறார்.

ஏனெனில் குறவர் வீட்டுப் பணத்தைத் தொட்டால் தீட்டுப் பட்டுவிடும். தாய்மாமன் மனைவி முதலில் தலைக்கு எண்ணெய் வைக்கிறாள். அதைத்தொடர்ந்து மற்ற அத்தைமார்கள் எண்ணெய் வைத்தனர். தலையில் தண்ணீர் ஊற்றினர். அதோடு சேர்ந்து குலவைச் சத்தமும் வந்து அந்த ஊர் முழுவதும் பருவம் அடைந்த செய்தி தெரிய வருகிறது.

அதன் பின்பு அந்தப் பெண் தாய்மாமன் கொண்டு வந்த ஆடை ஆபரண பொருட்களை உடுத்தி அணிந்து சபையில் உட்காரும்போது கையில் மாலையைக் கொடுத்து தாய்மாமன் கழுத்தில் மாலையைப் போடச் சொல்கிறார்கள். வந்திருந்த உறவினர்கள் மற்றும் ஊர் மக்கள் சேர்ந்து உணவை முடித்துவிட்டு சாராயம் குடித்துச் சடங்கை முடித்து வைக்கின்றனர்.

அதன் பின்புதான் இந்தக் குறவர் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வுகள் கற்பனைக்கு எட்டாத சூழ்நிலையில் அங்கே நடந்திருக்கிறது. வயதுக்கு வந்த பெண்ணை மேற்கண்ட சடங்கு முறைகளை முடித்துவிட்டு மறுநாள் ஊருக்கு வெளியே இருக்கும் கண்மாயில் முறைமாமன் கட்டிய ஓலைக் குடிலில் முப்பது நாட்கள் அந்தப் பெண் யாருடைய துணையின்றி தனியாக இருக்க வேண்டும். குடிசையில் இருக்கக்கூடிய பெண்ணை காற்று கூட தீண்டாது என அந்த குறவர் சமூக மக்கள் நினைக்கிறார்கள்.

ஆனால் நடு இரவில் ஆதிக்க சமூகத்தை சார்ந்த சிலர் பாலியல் வன்புணர்வு செய்கிறார்கள். அந்தப் பெண் பாலியல் உறவுக்கு சம்மதிக்கவில்லை என்றால் கொன்றுவிடுகிறார்கள். அதோடு மட்டுமில்லாமல் குடிசையோடு எரித்துக்கொல்லப்படுகிறாள். இதுபோல குறவர் இன மக்களின் பெண் குழந்தைகள் பல பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

"நம்ம குடியிலே சமஞ்சவெ மருநாத்தெ கன்னி கழிஞ்சவளாத் தான் இருப்பா. முப்பது நா சென்டதுக்கப்புறம் வீட்டுக்குள்ள நொளையறப்போ யாரொ ஒருத்தனோட புள்ளைய சொமந்துக்கிட்டுத் தான் போகணும்.''

இந்த மாதிரியான கொடுமை குறவர் இன பெண்கள் மீது தொடுக்கப்பட்ட மிகப்பெரிய பாலியல் வன்முறையாகும். பண்பாட்டு சடங்கு என்கின்ற போர்வையில் பலவாறு மூடநம்பிக்கைகளுக்குப் பெண் குழந்தைகள் பாலியல் வன்புணர்வுக்கு இரையாக ஆகியிருக்கிறார்கள். இந்த ஆதிக்க சமூகத்தை எதிர்த்து குறவர் இன மக்களால் எதுவும் செய்ய முடியவில்லை என்பதுதான் வருத்தத்துக்குரிய செய்தியாகும்.

“தெரிஞ்சு என்ன செய்யப் போறாங்க, மூசு மூசுன்னு அழுது மூக்கு சீந்திட்டு கள்ளுக்கடை, சாராய கடைலே ஒக்கார்ந்து சம்மந்தம் பேசி யாரு தலையிலையாவது கட்டி வைச்சுட்டு கடம முடிஞ்சது சாமினுட்டு மூனுனா நாலு நாளைக்கி முக்க முக்க முக்கிபுட்டு மூலையிலே கெடப்பாய்ங்க.''

இது போலதான் ஆதிக்கத்தை எதிர்க்க முடியாமல் அந்தக் குறவர் இன மக்கள் வாழ்கிறார்கள்.

அடித்தட்டு மக்களுக்கும் விளிம்புநிலை மக்களுக்கும் சிறிது வேறுபாடு உள்ளது. அடித்தட்டு மக்கள் ஆதிக்க சமூகத்தால் பாதிப்படையும் பொழுது திருப்பித் தாக்குற நிலை அடித்தட்டு மக்களிடம் உண்டு. ஆனால் விளிம்புநிலை மக்கள் ஆதிக்க சமுகத்தால் தங்களுக்கு ஏற்படுகிற பாதிப்புகளைத் தாங்கிக் கொள்ளும் பழக்கமே அந்த மக்களிடம் நிலவுகிறது. அந்த பாதிப்பை வெளிப்பாட்டை தனக்குத்தானே புலம்பிக் கொள்கிறார்கள். அதனால்தான் அடித்தட்டு மக்களுக்கும் கீழான விளிம்புநிலை மக்கள் என்கிறோம். அந்த விளிம்பு நிலையில் தான் குறவர் இன மக்கள் வாழ்கிறார்கள்.

கம்மாக்கரையில் வயதுக்கு வந்த குறவர் இனப் பெண் குச்சிலில் இருக்கிற பொழுது ஆதிக்க சமூகத்தை சார்ந்த ஒருவன் காதலிப்பதாக பொய் சொல்லி ஏமாற்றி தன் நண்பர்களை இணைத்துக் கொண்டு அந்தப் பெண்ணை பாலியல் வன்புணர்வு செய்கிறார்கள். இறுதியில் அந்தப் பெண் இறந்து விடுகிறாள்.

“கண்மாய் கரையில் தனியாக ஓலைக் குடில். அதற்கொரு கிடுகு தாழ்ப்பாள். இது பாதுகாப்பா இல்லை, தீட்டானவளை காற்றுக்கூட தீண்டாது என்று அதீத நம்பிக்கை.''

பொங்கித் ததும்பும் கள் பானையை தேனீக்கள் மொய்ப்பதைப் போன்று ஒச்சானின் நண்பர்களான கைகளையும் கால்களையும் ஊன்றி விலங்கைப்போல் நடக்கும் நொண்டி கருப்பன், மொட்டிமீது கைவைத்து தாங்கி தாங்கி நடந்திடும் பெரியண்ணன், இருவரும் ஊனமானவர்கள். காமத்துக்கென்ன ஊனம், நாங்களும் நிருவிப்போமென்று பாண்டிக்கனி மீது பாய அவள் கிறக்கத்தில் இருந்தாலும் பழையதுக்கும் புதியதுக்கும் வேறுபாடு தெரியாதா? என்ன? புரிந்து கொண்டாள். ஒச்சானால் உதிர்ந்த இதழ்கள் ஒன்றிணையப் போவதில்லை. இருப்பினும் ஒவ்வொரு இதழும் உயிர் பிழைக்க வைக்க போராடத் துவங்கினாள். உடலையும் உறுப்புகளையும் மனதால் விலங்கிட்டாள். இரை கிட்டாத விலங்குகள் அவளை மூர்க்கமாய் தாக்கின. மூர்ச்சையானாள். கிள்ளி எறியப்பட்ட அல்லிமலர் அனாதையா கிடக்க ஒச்சான் வந்தான். துவண்டு கிடந்த குறி நிமிர்த்தி அவள் முகத்தில் மூத்திரமடித்தான்.

"குத்த வச்சா பொத்திகிட்டு மூலையிலே கெடக்குறத விட்டுப்புட்டு ஆட்டமா ஆடிறிங்க. சாஸ்த்திரமும் சம்பிரதாயமும். எங்களுக்குத்தான். சாமியும் கொடயும் நாங்கதான் கொண்டாடணும்... த்தூ... திரை விழுந்து வெளியேறும் ரசிக கூட்டத்தைப் போல வெளியேறினார்கள். இதுபோல அந்தக் குறவர் இனப்பெண்கள் ஆதிக்க சாதியால் பல்வேறு வன்புணர்வுக்கு கொடுமையாகிறார்கள்.

அதேபோல் இந்த நாவலில் இன்னொரு பெண் வயதுக்கு வந்து கம்மாகரையில் குச்சிலையில் இருக்கிற பொழுது பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகி அந்தப் பெண் உடன் இருக்கிற பாட்டியைக் கொன்றுவிடுகிறார்கள்.

"அந்த கபாலி பயல்கலோடு மல்லு கட்டிருக்கா கெளவி. கடுசாவளா இருக்காளேன்னுட்டு அந்த நொண்டி பயே இருக்கானே அவன் கெளவி கழுத்துலே துண்டை போட்டு இறுக்கி நாக்கு தள்ளவும் அவெ சேலைய வச்செகாலே கைய கட்டி கம்மாயிலே தூக்கி போட்டுட்டு போயிருக்காங்க. மூனுநாலு கழிச்சு மெதந்து வந்தவளே என் கூட தங்குனதுனால சாமி குத்தமாகி முனி அடிச்சி தூக்கி போட்டுருச்சுன்னு சனங்க நம்பி கெளவிய தூக்கி அடக்கம் பன்னிட்டாய்ங்க.''

கொலை செய்து இறந்த பாட்டியை வயதுக்கு வந்த பெண்ணுடன் குச்சலில் இருந்ததனால் இறந்தாள் என்று அந்த மக்கள் நம்புகிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய பிற்போக்குத்தனமும் மூடநம்பிக்கையும் எந்த அளவுக்கு இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

அங்கு இருந்த பெண் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகி கர்ப்பமாகிறாள். பெண்ணின் தாய் அழுது புரண்டு வேதனைப்பட்டு அழுகிறாள்.

"கொட கொடன்னு ஒரே வாந்தி என்ன ஏதுன்னு ஆத்தா நாடி புடிச்சு பாத்துட்டு பேய் அரஞ்சவ போல ஆயிட்டா... அப்புறம் தலையல தலையல அடிச்சிக்கிட்டு பொளம்ப ஆரம்பிச்சிட்டா. ஆத்தா மகமாயி இடிஞ்ச வீட்லதான் எழவு விழனுமா. அடி பாதகத்தி ஒங்காந்த எடத்துலே புள்ளக்காரியா போயிட்டியே என்று உருண்டு பொரண்டு மண்ண வாரி தூத்துனா. தூத்திட்டா தூந்துபோயிருமா. தலவிதி பொறந்தா பொம்பளையா பொறக்க கூடாது. அதுவும் கீழ் ஜாதியிலே பொறக்க கூடாதுன்னு ஒப்பாரி வச்சோம்.''

இதைப் போன்று பாலியல் வன்கொடுமைகளால் அவர்களால் அழுகத்தான் முடிகிறது. எதிர்த்து தனக்கான உரிமையை நிலைநாட்ட முடியவில்லை என்பது வேதனையான செய்தியாகும். பாதிக்கப்பட்ட குறவர் இன மக்களுக்குக் கடைசி வரையிலும் தனக்கான நியாயம் கிடைக்கவில்லை.

இவ்வாறு பல்வேறு நிலைகளில் தமிழ் மொழியை பூர்வீகமாகக் கொண்ட குறவர் இன மக்கள் வர்க்கத்தாலும் சாதிய கட்டமைப்புகளாலும் பலவிதமாக ஆதிக்க சக்திகளால் பாதிக்கப்படுகிறார்கள். இந்தியா சுதந்திரம் பெற்று 77 ஆண்டுகள் கடந்தும் விளிம்பு நிலை மக்கள் பட்டியலில் வரக்கூடிய தலித்துகள், திருநங்கைகள், மலம் அள்ளுகிற தூய்மை பணியாளர்கள், தினக்கூலிகள், பிளாட்பார வாசிகள் இவர்கள் வாழ்க்கை வர்க்க ரீதியாகவும் சமூக நீதியாவும் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு மனிதனை மனிதனாகக் கருதாத ஒரு அவல நிலையும் மனித மலத்தை குடிநீரில் கலப்பதும் ஆணவப் படுகொலையும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இதற்கான தீர்வு பொதுவுடைமைச் சமத்துவம் இன்னும் நம் நாட்டில் அதன் தீவிரத் தன்மையை நிலை நாட்ட வேண்டும் அதற்கு முற்போக்குவாதிகளும் பொதுவுடைமைவாதிகளும் தீவிரமாக செயல்பட வேண்டும்.

●

**கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வாளர், குருநானக் கல்லூரி (தன்னாட்சி) வேளச்சேரி சென்னை. மற்றும், உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி (தன்னாட்சி), சென்னை.**



# மண்ட்டோவின் பிரிவினைவாதக் கதைகளில் பெண் கதைமாந்தர்களின் சிக்கல்கள்






மா.ஆர்த்தி      முனைவர் அ.சுபா


இந்திய இலக்கியங்களிலும் இரு நாடுகளின் எல்லைப் பிரிவினை மற்றும் அதனால் சீரழிவுகளுக்கு உள்ளான பெண்கள் குறித்து ஆக்கபூர்வமாக சித்தரித்த எழுத்தாளர்கள் பலர் உள்ளனர். இருப்பினும் சாதத் ஹசன் மண்ட்டோ படைப்புகள் வாழ்க்கையின் யதார்த்தங்களை சித்தரிப்பதற்காக அறியப்பட்டவை. அவரது கதைகளின் சூழ்நிலைகள் மற்றும் அமைப்புகள் மட்டுமல்ல, கதாபாத்திரங்களும் அவர் அறிந்த சந்தித்த நபர்கள். அவர் படைப்பின் கருப்பொருள்களாகத் திகழ்கின்றன. அவற்றை மையமாகக் கொண்ட பெண்கள் குறித்த கொலை, கடத்தல், கற்பழிப்பு, பழிவாங்குதல் தூண்டுதல் பாதிக்கப்பட்ட பெண்களின் நிகழ்வுகளை கதைக்களமாகக் கொண்டுள்ளது.

தெற்காசிய இலக்கியத்தின் தலை சிறந்த சிறுகதைகள் உட்பட 1947இல் இந்தியப் பிரிவினையைத் தொடர்ந்து நடந்த வகுப்புவாதக் கலவரங்களின் போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் துயரங்களை வெளிப்படுத்துகிறது. பிரிவினையின் போது பெண்கள் விளிம்புநிலை வாழ்க்கை, அடிபணிதல் போன்ற உண்மையான துன்பங்களின் நிகழ்வுகள் மண்ட்டோ கதையின் மையமாக இருக்கிறது. ஆணாதிக்க அமைப்பில் வேரூன்றிய ஒரு சமூகத்தால் பெண் பாலினம் ஒடுக்கப்பட்ட விதத்தையும் பெண்கள் பாலின அடிப்படையில் அடிமைகளாக ஒடுக்கப்படுகிறார்கள். ஒரு இன சமூகம்

அல்லது தேசிய அரசு அதன் உயர்வையும் மேன்மையையும் மற்றும் வெளிப்படுத்துவது பெண்கள் மூலமாக மட்டுமே. இதன் விளைவாக, பெண்கள் தனிப்பட்ட சுயாட்சி, அவர்களின் உடல்கள் மற்றும் வாழ்க்கையின் மீதான கட்டுப்பாட்டை இழந்த ஊமைப் பொருட்களாக மாறுகிறார்கள் என்பதை சாதத் ஹசன் மண்ட்டோவின் சிறுகதைகளான திற, மோஸல், ஷரிஃபான், சில்லிட்டுப் போன சதைப்பிண்டம், நான் கடவுளின் மீது சத்தியம் செய்கிறேன், ஒருநாள் போன்ற சிறுகதைகளில் பெண்கதைமாந்தர்கள் படுகொலையாதல், ஒடுக்கப்படுதல், சீரழிவுக்கு உள்ளாக்கப்படுதல் போன்ற எண்ணற்ற துயரநிலைகளுக்கு உள்ளாவதைக் காணமுடிகிறது.

**பாத்திரப்படைப்பு**

நாவல் என்பது விரிந்த களம், சிறுகதை குறுகிய களமுடையது. பாத்திரத்தின் வளர்ச்சி மாற்றங்கள் அனைத்தையும் சிறுகதைகளில் கொண்டு வரமுடியாது. பாத்திரத்தின் ஓர் உணர்ச்சியையோ, செயலையோ, மையமிட்டுக் குணப்பண்புகளை விளக்குவதற்காகவே கதைமாந்தர் படைப்பு அமையும்,

“பாத்திரப்படைப்பு என்பது பெயர் சூட்டி விடுவதோ அங்க வருணனை நடத்திவிடுவதோ அல்ல, மனம், சிந்தனை, குணஇயல்பு, சூழ்நிலைகளின் போது வெளிப்படும் உணர்ச்சிகள் இவற்றையெல்லாம் கூர்ந்து அனுபவமாக வெளிப்படுவதைத் தீட்டுவதாகும் எனக் கோ.வே. கீதா எடுத்துரைக்கிறார்.”[1]

கதைக்களத்திற்கு ஏற்ப பாத்திரங்கள் படைக்கப்பட வேண்டும்.

“கதை நிகழ்ச்சிகள் யாவும் பாத்திரங்களின் இயக்கத்தால் விளைவது, பாத்திரங்கள் கதை நடக்கிற கால, இட, சமூக இயல்புகளுக்கு இயையவும் தங்கள் குணப்பண்புகளுக்கு ஏற்பவும் இயங்க வேண்டும்.”[2] என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**ஒரு நாள்**

பெண்கள் இருமடங்காக தாழ்த்தப்பட்டுள்ளனர். முதலில் ஆணாதிக்கத்தால் அவர்கள் உடமைப் பொருளாகக் கருதப்பட்டனர் மற்றும் பிரிவினையின் போது இந்தப் பொருட்கள் முதல் சமூகத்தை பழிவாங்குவதற்காக மற்ற சமூகங்களைச் சேர்ந்த ஆண்களால் சூறையாடப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன.

“என் அன்புச் சகோதரர்களே, நம்முடைய தலையாய பிரச்சனை என்னவென்றால் நம்முடைய பெண்கள், எதிரிகளால் எல்லைக்கு அந்தப் பக்கத்திற்குக் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள். நாம் ஏதேனும் செய்யவில்லை என்றால் அவர்கள் எல்லோரும் விபச்சார விடுதியில் கொண்டு விடப்படுவார்கள் என்று எனக்குப் பயமாக இருக்கிறது. நாம் அவர்களை இதிலிருந்து காப்பாற்றியாக வேண்டும்.”[3] என்று குறிப்பிடுகிறார்.

இனப்படுகொலை காலத்தின் கொடூரமான முறையில் பெண்களை சகிக்க முடியாத உடல் ரீதியாக துன்புறுத்துகிறது. ‘துன்புறுத்தல் மற்றும் கற்பழிப்பு மனிதனிடமிருந்து மனிதனுக்கு மாற்றப்பட்டது’. வேறு மதங்களைச் சேர்ந்த ஆண்களால் பெண்களை கடத்தப்பட்டு விபச்சார தொழிலுக்கு ஈடுபடுத்தவோ, கற்பழிப்பவர்களை கணவனாக எற்றுக்கொள்ளவோ அல்லது வாழ்நாள் முழுவதும் மன உளைச்சலில் இருக்கவோ கட்டாயப்படுத்துகிறது. இவ்வாறு பெண்களின் மீதுள்ள வன்முறைகளை விவரித்துள்ளார்.

**திற**

பிரிவினைக் கலவரத்தின் போது தனது தந்தை சிராஜுதீனிடமிருந்து பிரிந்த பதினாறு அல்லது பதினெட்டு வயது சிறுமி சகீனாவின் கதையை விவரிக்கிறது. அவர் அவளைத் தேடத் தொடங்கினார். பிறகு ஒரு நாள் அவளை மருத்துவமனையில் காண்கின்றனர். “டாக்டர் ஸ்ட்ரெச்சரில் கிடந்த அந்த உடலைப் பார்த்து, அதன் நாடித்துடிப்பைப் பரிசோதித்தார். பிறகு சிராஜுதினிடம் ஜன்னலைக் காண்பித்துச் சொன்னார், “திற”![4]

ஸ்ட்ரெச்சரில் இருந்த உடல் சில அசைவுகளைக் காட்டியது. செயலற்றுக் கிடந்த அதன் கைகள், இடுப்பில் கட்டியிருந்த நாடாவை அவிழ்த்தன. பிறகு சல்வாரைக் கீழே இறக்கி விட்டது.”[5] இது மருத்துவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மருத்துவரின் வார்த்தைகளுக்கு சகீனாவின் மயக்கமான பதில், பிரிவினையின் போது அவள் பாதிக்கப்பட்ட முழு நிகழ்வையும் விவரிக்கிறது. தந்தையைப் பிரிந்த பிறகு அவள் அனுபவித்த அவலத்தையும் அவள் எதிர்கொண்ட பாலியல் துயரங்களை வெளிப்படுத்தியது. மேலும் சகீனா அனுபவித்த துன்பங்களை மண்ட்டோ காட்டவில்லை. சகீனா முற்றிலும் செயலற்ற பாத்திரமாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

## ஷரிஃபான்

'ஷரிஃபான்' சிறுகதையில் பிரிவினையின் போது வாழ வேண்டிய உண்மையான சூழ்நிலைகளையும் நரகத்தையும் வெளிப்படுத்திய மண்ட்டோ, பழிவாங்கும் எண்ணத்தால் வன்முறை வெளிப்படுகிறது. காசிம் மூலம் ஒட்டுமொத்த ஆண்மைய சூழலை உருவாக்குகிறது. வன்முறையில் ஈடுபட்டவர்கள் தான், மனிதர்களை பைத்தியக்காரத்தனமாக மாற்றி, அப்பாவிகளை கொன்று குவித்த இந்த பழிவாங்கலின் தோற்றத்திற்கான காரணத்தையும் இந்தக் கதைமாந்தர்களின் மூலம் அறிய முடிகிறது.

"'இந்து' அவனின் கண்கள் கனலைக் கக்கிக் கொண்டிருந்தன. அவன் அந்தப் பெண்ணைப் பார்த்தான். அவளின் வயது பதினைந்து கடந்திருக்காது. பிடித்திருந்த கோடாளியைக் கீழே போட்டுவிட்டு அந்தப் பெண் மீது கழுகு போல் பாய்ந்து, அவளை உள்ளே இழுத்துச் சென்றான். இரண்டு கைகளாலும் அவளின் ஆடைகளைக் கிழித்தெறியத் தொடங்கினான். கிழிக்கப்பட்ட துண்டுத் துணிகள், தீ வைக்கப்பட்ட பஞ்சு போல் எங்கும் பறந்து கொண்டிருந்தன. காசிம் ஏறக்குறைய அரைமணி நேரம் எடுத்துக்கொண்டான். பழி வாங்குவதற்கு அந்தப் பெண் எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. அவள் தரையில் விழுந்த உடனேயே தன் நினைவுகளை இழந்துவிட்டாள்."[6] பிரிவினையின் கலவரத்தின் போது அனுபவித்த வன்முறையின் பக்கத்தைக் காணமுடிகிறது.

## வகுப்புவாத வன்முறை

சிறுகதைகளில் பாத்திரப் பெயர் இல்லாமலும் கதைகள் இடம்பெறுகிறது. அவ்வாறு 'சில்லிட்டுப் போன சதைப் பிண்டம்' கதையில் பெண் கதைமாந்தரின் பெயர் இடம்பெறவில்லை. கலவரத்தின் போது ஐஷர்சிங் தனது மிருகத்தனத்தால் ஆண்மைக்குறைவாக மாறுவதை அடிப்படையாகக் கொண்டது. ஒரு கொள்ளையின் போது அவனது கொடுமைக்கு பலியாகக் கொண்டு வந்த ஒரு அழகான பெண், பயங்கரத்தால் இறந்துவிடுகிறாள். ஐஷர்சிங் அவளை பாலியல் பலாத்காரம் செய்யும் போது, அவள் உடல் முற்றிலும் குளிர்ச்சியாக இருப்பதைக் காண்கிறான். அவன் பிணத்துடன் உடலுறவு கொள்ள முயல்கிறான் என்று தெரிந்ததும், அந்த நொடியே அவனது சுயநினைவு செயலிழந்து, அவனது தவறான செயலால் அவன் ஆண்மை இழக்கிறான். 'வன்முறையும் சிற்றின்பமும் இரண்டும் ஒரே உற்சாகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன'. இரண்டுமே வெறித்தனமான வடிவம் அந்தப் பெண் பயங்கரத்தின் எல்லையைத் தாண்டிவிட்டாள். பாலியல் தூண்டுதலின் தருணத்தில், இந்த அதிர்ச்சி ஐஷர்சிங்கை கூட குளிரூட்டுகிறது. அப்படி ஒரு அசாதாரண அனுபவம், மனிதனுக்குள் பல அடுக்குகளை வெளிப்படுத்தி, சூழ்நிலைகளின் பகுத்தறிவின்மையை உடைத்தெறிந்தது. ஒரு அனுபவம் இது போன்ற ஆழமான மனித உறவுகளை வேறு எந்தக் கதையிலும் காணமுடியாது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு ஐஷர்சிங் தனது மனைவியுடன் கூட உறவு கொள்ள முடியவில்லை. அவனுடைய மனைவி காரணத்தைத் தெரிந்து கொள்ள விரும்பும்போது, அன்று நடந்ததைச் சொல்கிறான். "அவள் இறந்துவிட்டாள். பிணமாகக் கூட குளிர்ந்த இறைச்சி தான்"[7] என்று பயங்கரவாதத்தால் ஏற்படும் மரணம் இந்தக் கதையின் சோகமான பகுதியாகும். குல்வந்த் கௌர் அதைக் கேட்கிறார். ஆனால் அந்த மரத்தின் மீது அவளுக்கு எந்த அனுதாபமும் ஏற்படவில்லை. அவள் தன் கணவனின் தவறான செயலை தன் பாலினத்தின் மீது களங்கமாக ஏற்றுக்கொள்கிறாள் மற்றும் வன்முறை எதிர்ப்பில் அவன் கழுத்தில் வாள் முனையை வைத்து அவனைக் கொன்றாள்.

'சில்லிட்டுப் போன சதைப் பிண்டம்' வகுப்புவாத வெறி மற்றும் மனித உணர்வுகளின் பின்னிப்பிணைந்த ஒரு தீண்டத்தகாத அத்தியாயத்தை முன்வைக்கிறது. இது வாசகரை அதிர்ச்சியில் ஆழ்த்துகிறது. இந்த வழியில் இந்த கதை கலவரங்களின் கொடூரமான மனிதனின் மிருகத்தனமான தன்மையைப் பற்றியது. இது ஆண்மையின்மையை பிரதிபலிக்கிறது. ஒருவருக்கு எதிராக செய்த தவறான செயலின் விளைவு.

## தாயின் மனநிலை

'கடவுள் மீது ஆணையாக' என்ற கதையில் தனது மகள் காணாமல் போன செய்தியைக் கேட்ட தாய் உணர்வைக் காட்டுகிறது. தாய் பாத்திரத்தின் முக்கியமான தருணத்தை இவ்வாறு சித்தரித்துள்ளார்.

"வயதான முஸ்லீம் பெண்மணி ரொம்ப வயதானவர். ஜலந்தருக்கு வெளிப்புறத்தில் நான் அவரை முதல் முறையாகச் சந்தித்தேன். அந்தச் சகோதரி என்னிடம் சொன்னாள். அவர் பாட்டியாலாவைச் சேர்ந்தவர். அங்கு நடந்த கலவரத்தின் போது அவரின் ஒரே மகள் கடத்தப்பட்டுள்ளாள். அம்மா உங்களின் பெண் கொல்லப்பட்டு விட்டாள் என்றேன். அந்தப் பைத்தியக்காரப் பெண்மணி என்னைக் கூர்ந்து பார்த்து,கொல்லப்பட்டு விட்டாளா... இருக்காது! என்றார். அவரின் குரல் இரும்பு போல திடமாக இருந்தது. யாராலும் என்னுடைய மகளைக்

கொலை செய்ய முடியாது. யாராலும் முடியாது' என்று சொல்லி மீண்டும் அந்தப் பயனற்ற தேடலைத் தொடங்கினார். கடைசியில் அம்மா அரை நிர்வாணமாகவும் பைத்தியமாகவும் ஆனார்.''[8]

என்பதை இக்கதாபாத்திரத்தின் மூலம் படைப்பாசிரியர் சிந்தித்ததை இக்கதை பிரதிபலிக்கிறது. பிரிவினையின் வன்முறையைக் கூட்டுப் பைத்தியக்காரத்தனமான செயலாக இவர் குறிப்பிடுகிறார்.

## பொருளாதார நெருக்கடி

இந்தியப் பிரிவினையின் விளைவாக நாட்டில் உறுதியற்ற சூழல் உருவானது. எல்லா இடங்களிலும் கலவரங்கள் நடக்க ஆரம்பித்தன. இதனால் மக்களுக்கும், உடமைகளுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டது. வீட்டை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்ட ஒரு நடுத்தரக் குடும்பத்தின் பொருளாதார நெருக்கடி நிலையைப், பிரிவினை நிகழ்ந்த விதத்தினை 'மிருகத்தனம்' எனும் கதைக்கருவில் வெளிப்படுகிறது.

''மிகுந்த சிரமத்தோடு கணவனும் மனைவியும் வீட்டில் உள்ள சில மதிப்புள்ள பொருட்களோடு தங்களை காப்பாற்றிக் கொண்டார்கள். வயது வந்த மகளைக் காணவில்லை. அந்தத் தாய் தன்னுடைய, பெண் கைக்குழந்தையை நெஞ்சோடு இறுக்க அணைத்துக் கொண்டாள். எருமை மாடு ஒன்று அவர்களிடம் இருந்தது. கலகக்காரர்கள் பார்வையிலிருந்து எப்படியோ தப்பித்தது. ஆனால் அதன் கன்றுக்குட்டியைக் காணவில்லை.

கணவனும், மனைவியும், கைக்குழந்தையும், பசுமாடும் ஓர் மறைவிடத்தில் பத்திரமாக இருந்தார்கள். அப்போது இருட்டு மிக மோசமாகக் கறுத்துக் கிடந்தது...''[9]

எனும் வரிகளின் மூலம் கலகக்காரர்கள் அவர்களை எப்படி நடத்தியிருப்பார்கள். என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. மதம், ஒழுக்கம், மனிதநேயம் ஆகியவற்றைத் தாக்கும் எண்ணற்ற நிகழ்வுகள் அந்தக் காலகட்டததை பிரதிபலிக்கின்றன.

## முடிவுரை

இந்திய துணைக்கண்டத்தின் வரலாற்றில் இந்தியப் பிரிவினை குறிப்பிடத்தக்கதாகும் மற்றும் முக்கியமான நிகழ்வு ஆகும். சாதத் ஹசன் மண்ட்டோ தனது சிறுகதைகள் மூலம் படுகொலையின் போது ஒவ்வொரு சமூகத்தையும் முன்வைக்கிறார். இக்கதைகளில் பெண்கள் தான் பிரிவினையில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளாள். சகினா போன்ற சிறுமிகள் எல்லாவிதமான அவமானங்களை, வன்முறைகளை சித்திரவதைகளை, அனுபவித்ததையும், மற்ற சமூகத்தினரால் அவர்கள் துன்புறுத்தப்பட்டதையும் காட்டுகிறார். எதிர் சமூகத்தினரை பழிவாங்கும் விதமாக பேசுவதற்கான எளிதான வழி அவர்களின் பெண்களை அவமானப்படுத்துவதும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவதை வெளிப்படுத்துகிறது. இவர் தனது கதைகளில் பெண்களை பழிவாங்குவதில் பெரும் பங்கு வகிக்கும் ஆணாதிக்க அமைப்பின் சித்தாந்தத்தையும் வலியுறுத்தும் மண்ட்டோவின் படைப்புகள் சபிக்கப்பட்டிருப்பது அவரது கதைகளில் வழக்கமானதாக அமைந்துள்ளது. மனித மனங்களில் ஏற்கனவே எத்தனை அழுக்குகள் குவிந்து கிடக்கின்றன.

## அடிக்குறிப்புகள்


1. கோ.வே.கீதா, தமிழ் நாவல் ஓர் அறிமுகம்,ப. 136, முதற் பதிப்பு, 1976, அணியகம், சென்னை
2. மேலது.,ப.43
3. சாதத் ஹசன் மண்ட்டோ படைப்புகள், இராமாநுஜம்,ப. 124, மூன்றாம் பதிப்பு ஜுன், 2020, பாரதி புத்தகாலயம், சென்னை, 600 018.
4. மேலது.,ப.270
5. மேலது.,ப.142
6. சிவப்புநிற மழைக்கோட்டில் ஒரு பெண், தொகுப்பும் மொழிபெயர்ப்பும், உதயசங்கர், ப.40, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 600 050
7. சாதத் ஹசன் மண்ட்டோ படைப்புகள், இராமாநுஜம்,ப.204, மூன்றாம் பதிப்பு ஜுன், 2020,பாரதி புத்தகாலயம், சென்னை,600 018.
8. சாதத் ஹசன் மண்ட்டோ கதைகள்,தொகுப்பு ரவி இளங்கோவன், ப.42, கிராபிக் நெட்வொர்க், சென்னை – 600 014.
9. சாதத் ஹசன் மண்ட்டோ படைப்புகள், இராமாநுஜம், ப.285, மூன்றாம் பதிப்பு ஜுன், 2020, பாரதி புத்தகாலயம், சென்னை.


●



**கட்டுரையாளர்கள்:**

**ஆய்வாளர்: மா.ஆர்த்தி,**
தமிழ்த்துறை, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி.

**நெறியாளர்: முனைவர் அ.சுபா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,பாப்பிரெட்டிப்பட்டி

Article

# Traditional Ecological Knowledge and Colonial Displacement in **Ngugi wa Thiong'o's** ***The River Between***




**S. Amirtha**
&
**Dr B. Ajantha**

The research paper aims to explore the traditional ecological knowledge and colonial displacement in Ngugi wa Thiong'o's The River Between with the ecocritical approach. The novel wants to explore the mutual connection between the native Gikuyu people and ancestral land where nature is not only considered as a source of nourishment but also as a significant one for the native cultural identity and spirituality. It explored how the native knowledge system reflected a mutual relationship with the natural environment. It also showed how it was threatened by the arrival of external powers. By using the introduction of new land policies, missionary influences and the introduction of new ways of cultivation, the colonial period disrupted the ecological balance that supported the Gikuyu people. The displacement was caused when colonizers started to seize the land. It led to the eradication of traditional environmental practices, loss of spiritual connections with their sacred places and the loss of land use. By analyzing key elements which include ridges, the river and sacred groves, the research aims to highlight the conflict between preservation of indigenous ecological practices and the exploitation during the colonial period. It also argues that how The River Between reflects the issues of the environment and the displacement of colonial Kenya. It also highlights the traditional ecological knowledge in the face of oppression during the colonial period.

Ngugi wa Thiong'o's The River Between explored the challenges faced by the Gikuyu people during the colonial period in Kenya. The story highlighted the native people's close spiritual, cultural and environmental connection with their land which emphasized their native identity. In the novel, the land is not only considered as a better place to live but also represents their beliefs, history and cultural traditions. So the research paper takes a look at the traditional ecological Knowledge that the Gikuyu people have. The traditional ecological knowledge refers to the skills, understanding and practices that indigenous people maintain over generation in relation to the natural environment. The native Gikuyu people consider that their native land is more than just a source of food and shelter. Because it is deeply connected to their cultural and spiritual beliefs. However, when Europeans arrived, they implemented new policies and religious practices. It also disrupted the native people's connection with their ancestral land. The colonial period not only affected the Gikuyu land but also threatened their spiritual and cultural beliefs towards nature.

The study uses an ecocritical perspective which explores the relationship between environment and literature. By using this perspective, the study aims to explore how Ngugi wa Thiong'o's The River Between shows the connection of culture and nature in a colonial perspective. It shows how the colonial period caused both the natural environment and the cultural identity of the Gikuyu people which led the native people to forget their traditional ways of life with the land. Through this perspective, the study can highlight how culture and the natural environment are deeply connected in the Gikuyu world and how the colonial period disrupted this connection. By using the term ecocriticism which aims to explore the path in which literature reveals the issues related to the natural environment and how Ngugi wa Thiong'o works seeks to explore the colonial period's disruption towards the indigenous knowledge systems, spiritual and ecological harmony.

## Objectives of the Research

1. To explore how traditional ecological knowledge is represented in the novel The River Between
2. To analyse the effects of native people's displacement during the colonial period and their relationship with the land
3. To explore the path in which traditional knowledge acts as a form of struggles against colonial forces.
4. To discuss how ecological practices led to the preservation of cultural identity in the during the colonial challenges
5. To highlight the broader implications about the environmental justice and decolonization


With these objectives, the research title aims to focus on the traditional ecological knowledge and colonial displacement which gives the significant way of resilience and cultural identity.

Traditional ecological knowledge is the significant wisdom and skills of indigenous people. They have gained this knowledge over many generations about the natural environment. It includes the understanding knowledge about animals, plants, ecosystems and explores the way to live in the natural world with harmony. They consider that it is more than learning and shows how to survive in the native land. It shows people's understanding, respect and their deep connection with the natural environment. Ngugi wa Thiong'o showed the traditional ecological knowledge with the Gikuyu people's spiritual and cultural ideas towards their nature. The native people had strong spiritual and cultural beliefs towards their natural world. For instance, they considered their sacred areas such as ridges and rivers not only for their peaceful survival but also served as a symbol of their native identity, gave a path to their life and explored the relationship with nature. In our world, many people view the rivers and ridges not just as a natural landscape but also hold an in-depth spiritual, cultural and symbolic meaning. So the people consider the river as a sacred one which fulfills one's life. For instance, the Hindu people worship the river Ganges as goddesses. People also have beliefs towards this which can remove their sins and bring blessings to them. So it is considered as a lifeblood of our earth. It can connect the people with nature and the spiritual world. It also has a cultural meaning like renewal, healing and continuity. So, people celebrate their rituals, festivals and ceremonies near the river which highlights its importance. It provides water for agricultural land and human beings. So people see them as an essential one for their survival. They see ridges as a spiritual and cultural thing. Many cultures believe that ridges are special places where they can connect with the gods and spirits. It gives protection from the winds and it can be useful to save the agricultural field. It provides a beautiful look. So many people visit it and enjoy nature.

Ngugi wa Thiong'o portrayed the significance of the river and ridges in his novel The River Between. In this novel, he introduced the river Honia as a vital element which flew between the two ridges namely, Kameno and Makuyu. It was considered not only as a geographical landscape but also portrayed as a lifeblood of the native community. The author portaryed the river Honia through the line,

A river flowed through the valley of life. If there had been no bush and no forest trees covering the slopes, you could have seen the river when you stood on top of either Kameno or Makuyu. Now you had to come down. Even then you could not see the whole extent of the river as it gracefully and without any apparent haste, wound its way down the valley like a snake. The river was called Honia, which meant cure or bring-back-to-life. Honia river never dried; it seemed to possess a strong will to live, scoring drought and weather changes. (TRB 1)

Through the above lines, the author emphasized Honia river's deep significance and pride which highlighted its life-giving and resilient nature. It symbolized life and healing with its name cure and bring back to life. By using this concept, the author showed that the river was just as a geographical feature but also a source of regeneration and spiritual importance for the indigenous people.



For the Gikuyu people, the river Honia provided not only water but also gave a deep spiritual connection to the natural environment. The people of Kameno followed the traditional way of life while Makuyu followed the Christian life with modern influences. But both sides basically belonged to the Gikuyu community. Through this, the author emphasized the conflict between tradition and modernity while highlighting the importance of the natural environment to shape the cultural identity. With the spiritual significance of river Honia, Kameno people considered it as a source of life and sacred place. So, they celebrated their cultural rituals near it. They celebrated a circumcision ritual to prove their native identity. It marked their transition from childhood to adulthood. It was an essential custom and belief of Gikuyu people. By conducting these rituals by the river, the native people had a deep connection to the ancestral land and their native identity. Ngugi wa Thiong'o explored these cultural rituals with the circumcision process through the character Waiyaki. He was a young boy. He attended the circumcision process as a symbolic one to attain maturity. For the Gikuyu community, it was not just a physical transformation but also a spiritual thing. It also brought back their ancestors' native traditions and culture to the present people. Like Waiyaki, the other female character Muthoni wanted to be a part of the circumcision process to prove her womanhood. But her father Joshua showed the restrictions to her to go to attend the cultural process. Because her father followed the Christian beliefs and modern influences. But Muthoni stood against her father and went to attend the circumcision process. She also left her home and parents to her aunt's home in Kameno village. In this moment, Muthoni talked her father Joshua and her elder sister Nyambura like,

'Why! Are we fools?' She shook Nyambura. 'Father and Mother are circumcised. Are they not Christians? Circumcision did not prevent them frombeing christians. I too have embraced the white man's faith. However, I know it is beautiful, oh so beautiful to be initiated by man's God does not quite satisfy me. I want, I need something more. My life and your life are here, in the hills, that you and I know.' (TRB 25)

In this way, Muthoni stood against her family and followed the traditional way of life. Her father's restriction symbolized the conflict between modernity and tradition. It led to the destruction of the native cultural practices which were vital elements for the mediation of traditional ecological knowledge. It brought the native people from their community, land and cultural heritage. It portrayed the disruption of native people's relationship with the natural environment and practices. The following picture will help to highlight the symbolic representations of Gikuyu people's engagement with the cultural rituals, their focus towards their natural environment and their traditional ecological knowledge .

Cultural Ecological Theory opted for the above concept of traditional ecological knowledge. It wanted to explore the interdependence of environment and culture, social and cultural practices, cultural resilience, integration of knowledge systems and interaction between the environment and humans. Julian Stewards is the founder of cultural ecological theory. It is considered as a vital one in the concept of anthropology to explore the native people's deep connection with their culture and natural world. He introduced this theory in the mid twentieth century which highlighted human societies and their ecological perspectives. He portrayed his cultural ecological theory in his work Theory of Cultural Change: The Methodology of Multilinear Evolution which was published in 1955. Through this book. He highlighted his ideas about how cultures adapted to the natural environment, multilinear evolution and the concept of the core of the native culture. He highlighted through the line,

We must conclude that cultural evolution is not distinguished from cultural relativism or historical particularism by any essential similarity of its developmental scheme with that of biological evolution, by the characteristics of increasing complexity or by the attribute of progress. This is not easy to say, however, that evolution lacks distinctive features. (Stewards 1955, 14)

Through these lines, the author advocated for the understanding of cultural evolution which recognized its complexity and nature. So he encouraged others to appreciate the unique aspects that shape the cultures.

The following pie chart has different aspects of native indigenous knowledge system and the mutual relationship with nature and culture. So it has different components which contribute to the traditional ecological knowledge.





In the above pie chart, the largest component is Cultural Practices and Rituals (30%). This part points out that the traditional ecological knowledge in the way of cultural rituals and practices. It involves ceremonies by rivers and rites of passage. It emphasizes how cultural activities are intertwined with traditional ecological knowledge. The second part is Spiritual Connection to Nature (25%). It reveals the indigenous people's spiritual relationship with the environment which includes the belief in the sacredness of landscape such as ridges and rivers as mentioned in the above. So the land is not merely considered as a physical one but also holds a significance of spirituality. The component Conflict between Tradition and Modernity (20%) reveals how the traditional knowledge system faces challenges due to the introduction of modern and western influences which led to the eradication of traditional practices. The Cultural Identity (10%) is a component to reveal the indigenous cultural identity and its connection with the natural environment. Because of the colonial displacement, the native people lost their cultural connection with their ancestral indigenous land. The component Natural Resources and Survival (15%) gives a practical knowledge about the natural resources for survival and farming methods etc., But due to the colonization, the native lose their ability to understand themselves.

Ngugi wa Thiong'o also showed the colonial displacement as both on the loss of environment and culture in this novel. It revealed the extensive impact of British colonialism on the native Gikuyu people which showed how it disrupted their close connection with the natural land and cultural identity. It removed the native people from their ancestral land which led to the erosion of indigenous ecological knowledge, social structures and spiritual beliefs.

The colonial period led to the destruction of Gikuyu land and disrupting their traditional way of life. So the people lost their ancestral land. It symbolized the loss of native identity and their cultural heritage. They also introduced new religious beliefs and practices which destroyed the traditional Gikuyu customs. It led to displacement and people's forced to forget their Gikuyu customs with the imposition of western influences. It created a broad division within the Gikuyu community between those who followed the traditional way of life and western values. Within the same community, this conflict created the displacement which also led to the society to face their weakened strength, identity crisis, the impact of emotional and psychological. The author showed it through the characters Waiyaki, Muthoni and Chege. Waiyaki had a close connection with his ancestral land which highlighted his cultural identity. He had a colonial education which could help him to escape from the challenges of colonial rule.

Resilience Theory opted for colonial displacement. It is used to understand the comprehensive socio-ecological conditions while maintaining their vital functions and structures. It originated from the concept of ecology. But now it has been used in various fields like environmental studies, psychology and sociology. It had the ability to handle the disruption from other people and organizations which related to the natural environment. It also means that the way can "bounce back" and preserve their traditional functioning even after facing changes and challenges. The theory was coined by Norman Garmezy . He was a psychologist. So he mostly focussed on children who flourished even when they faced challenges which they felt difficult to adapt with the help of supportive environments and their own will power. This idea can be compared with the author Ngugi wa Thiong'o and to show how he portrayed the Gikuyu people in his novels. Though they lost their cultural identity and ancestral land due to colonialism, the people showed resilience. Like Norman Garmezy's children, the Gikuyu children faced emotional challenges but they tried to protect their cultural identity. Ngugi wa Thiong'o showed it through the young characters Waiyaki and Muthoni, how they preserve their cultural identity even facing challenges from their family and surroundings. So both Garmezy and Ngugi wa Thiong'o highlighted how to maintain their connection to their own cultural identity, ancestral land, emotional influences and emphasized the supporting system which was considered as a vital element to resilience in challenging times. Norman Garmezy addressed the significance of resilience study in the perspective of mental health and protection through his research paper "Vulnerability Research and the Issue of Primary Prevention" which was published in 1971.

The causes of colonial displacement can be shown as a pie chart. The following pie chart can be defined in a detailed way with the percentage of exploitation.




The above pie chart breaks down with the several impacts of colonial displacement on the Gikuyu people which is depicted in Ngugi wa Thiong'o's The River Between. Here is the brief explanation of each and every aspect. The first aspect is Loss of Ancestral Land (30%) which represents the manual displacement of the Gikuyu people. It is not only separated from their ancestral land but also from their mutual connection to the natural environment. This loss is a vital element to their culture, identity and spiritual practices. The second aspect is Erosion of Cultural Identity (25%). It represents the Gikuyu people's cultural systems which lead to eradicate the traditional knowledge, cultural and spiritual beliefs towards the natural land. It highlights a eradication of cultural identity. The third aspect is Introduction of Western Influences (20%). It highlights the introduction of new religious and cultural practices through missionary work and colonial education. It creates an internal conflict within the traditional customs and beliefs. The fourth aspect is Emotional and Psychological Impact (10%). It highlights the Gikuyu people's emotional and psychological consequences which lead to the identity crisis, loss of cultural feelings and disruption as they face challenges with the cultural disruption and changing environment. The fifth aspect is Community Division (15%). It shows the introduction of Western values which led to create the division within the Gikuyu community. It destroys the community's unity and sense of cultural identity. So in this way, the above pie chart can help to understand the sufferings of the Gikuyu people during the colonial period from their ancestral land and cultural identity to their emotional well-being.

In conclusion, in this novel, the author explored the native indigenous people's mutual connection with their cultural identity and traditional ecological knowledge. The river Honia, as a sacred one, represented the culture and spirituality of the native people. But colonial rule disrupted these connections and forced the native people to leave from their native land. So they lost their native culture, identities and traditional knowledge. By using the perspective of ecocriticism, the research shows how native people's traditional ecological knowledge is to build resilience and maintain cultural continuity. For instance, the author highlights the need to preserve the indigenous knowledge through the characters Waiyaki and Muthoni. Thus, the portrayal of the hardships of the native Gikuyu people serves as a powerful reminder of their resilience, resistance and encouraged the urgent need to preserve the natural environment.

## Works Cited


- Cook, David and Okenimkpe Michacl. Ngugi wa Thiong'o: An Exploration of his Writings.
- London: Heinemann. 1983.
- Garmezy, Norman. "Vulnerability Research and the Issue of Primary Prevention." American
- Journal of Orthopsychiatry, vol. 41, no. 1, 1971, pp. 101–116.
- Gikandi, Simon. Ed. Critical Perspectives on Ngugi wa Thiong'o. Washington, D.C: Three
- Continents Press, 1984.
- Thiong'o, Ngugi wa. The River Between. Heinemann, 1965.
- Ogude, James. Ngugi's Novels and African History Narrating the Nation. London: Pluto Press. 1999.
- Ogunele, Wole. "Natio, Nation and Postcoloniality: The example of Ngugi." Ngugi wa Thiong'o:
- Texts and Context. Ed. Charles Cantalupo. New Jersey: Africa World Press, 1995.
- Steward, Julian H. Theory of Culture Change: The Methodology of Multilinear Evolution.
- University of Illinois Press, 1955.


●


**S. Amirtha**

Research Scholar (Full-Time)
Research Department of English
Sri. S. Ramasamy Naidu Memorial College, Sattur
Affiliated to Madurai Kamaraj University, Madurai.

**Dr B. Ajantha**

Assistant Professor & Research Supervisor,
Research Department of English
Sri. S. Ramasamy Naidu Memorial College, Sattur
Affiliated to Madurai Kamaraj University, Madurai.



**14.05.2025 அன்று திருப்பூரில் என்சிபிஎச்சின் 20வது கிளை விற்பனை நிலையத்தை தோழர் கே.சுப்பராயன் எம்பி அவர்கள் திறந்து வைத்தார். இதில் க.செல்வராஜ் எம்எல்ஏ, மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் இரா.பாலசுப்பிரமணியம், எழுத்தாளர் சுப்ரபாரதி மணியன், என்சிபிஎச் தலைவர் ஸ்டாலின் குணசேகரன், மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், மண்டல மேலாளர் சு.குணசேகரன், கிளை மேலாளர் கௌ.சர்மிளி மற்றும் ஆர்.ரங்கராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.**




**11.05.2025 அன்று கரூரில் இறையன்பு அவர்களின் ‘இறையன்புவின் ஓராண்டு உரைகள்’ நான்கு தொகுதிகளின் நூல் அறிமுக விழா நடைபெற்றது. இதில் நூலாசிரியர் இறையன்பு, என்சிபிஎச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் மற்றும் பல அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டனர்.**


**நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு**

# இறையன்பு

## ஓராண்டு உரைகள்

கெட்டி அட்டை
1800 பக்கங்கள்
4 தொகுதிகள்
ரூ 1500/-







Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7TH of every month Posted at Egmore RMS, Patrika Channel, chennai - 08
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.


தமிழ் வளர்ச்சித் துறை • நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

# அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்




தமிழ்நாடு அரசின்
மக்கள்
பதிப்பு
100
தொகுதிகள்

முதற்கட்டமாக
10
தொகுதிகள்
தற்போது விற்பனையில்

3300 பக்கங்கள்
ரூ 1000/–
10 தொகுதிகளும் சேர்த்து

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in